ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"

"நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ மார்கழி௴ உக௳ (5-1-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—உகூ.

## தோத்திரம்

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி ஆங்கார முளையை யெற்றி
அத்துவித மதமாகி மதம்ஆறும் ஆருக அங்கையின் விலாழி யாக்கிப்
பாசஇருள் தன்னிழ லெனச்சுளித் தார்த்துமேல் பார்த்துப் பரந்த மனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக படாமன்ன மாயை நூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச் செங்கைக் குளேய டக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின் திருவருட் பூர்த்தியான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான மத்தகச மெனவ ளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே.

—தாயுமானசுவாமிகள்

# எங்கள் திருநாடு.

[வட்டூர், திரு. க. சின்னத்தம்பி.]

(குறவஞ்சி)

1. கத்துகடல் தன்னிலொரு தித்திலமா நாடு
   கண்ணிலடங் காதவனப் பெண்ணிலள வில்லை
   சித்தமுனங் கலங்கியதாற் செம்மைபெற ஆதரம்
   சேர்திருக்தின் கருந்தவத்தாற் சீர்த்திபெற்ற நாடு
   அத்தனைமுன் வேண்டியரும் கோன்பிருந்த பார்த்தன்
   ஆடியநீர்க் கீரிமலை கூடியகன் னாடு
   எத்திசையும் ஏத்திசைக்கும் ஈழவள நாடு
   ஈசன்திருப் பாதம்வைத்த எங்கள்திரு நாடு.

2. கணக்கில்லா நிதிவளருங் கற்பகநன் னாடு
   கைவரைகள் மணிவரையிற் கலந்துறையும் நாடு
   குணதிசையி னேதனெனக் குறிக்குமொரு நாடு
   குடதிசையார் வந்துபொருள் கொள்ளும்பெரு நாடு
   தணிமலரின் திருமகளார் தாமுறையும் நாடு
   தண்டமிழின் இன்சுவையைத் தானருந்தும் நாடு
   இணைவிழிபோற் காதலர்தா மிசைந்துறையும் நாடு
   இன்பமெலா மிங்கிருக்கும் எங்கள்திரு நாடு.

3. இறையவனெல் லாளன்முனம் முறைபுரிந்த நாடு
   இலைவடிவேற் கொருகொடியை ஈந்ததிரு நாடு
   மறையவர்கள் ஓசையெங்கும் நிறையவரு நாடு
   மறிகடலுந் திரைகொணர வாங்குமொரு நாடு
   குறையிரந்த சீதைக்கே நிறையளித்த நாடு
   குமரனிருந் தருள்சுரக்குங் கதிரமலை நாடு
   நறவினிய தமிழ்மறையோர் நவின்றதிரு நாடு
   நகுலமுனி தவமிருந்த எங்கள்திரு நாடு.

4. கொன்றையணிந் தவனருளுங் கோணமலை நாடு
   குன்மவலி போக்கியநற் கீரிமலை நாடு
   இன்றமிழின் சங்கமதில் இணையிருந்த நாடு
   இன்கவிகள் பாடமரும் புலவர்தரு நாடு
   அன்றொருவன் யாழிசைகொண் டணைந்ததிரு நாடு
   அரனவனும் நெஞ்சுருக யாழிசைத்த நாடு
   குன்றுதொறுங் கங்கைபல குதிக்குமொரு நாடு
   குயில்படிக்க மயில்நடிக்கும் எங்கள்திரு நாடு.

பார்த்த விடமெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு, வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே.

## நட்பு.

(Cicero)

ஒருவருக்குப் பெருஞ்செல்வமும், புகழுமிருப்பினும் அவைகள் பெருமையைக் கொடுக்கமாட்டா. நட்பே எல்லாவற்றினும் உயர்ந்தது. இந்நட்பு எல்லாராலும் விரும்பிப்பெறத்தக்கது. நட்பு சிலகாலத்தில் விருத்தியடைகின்றது. சிலகாலத்தில் குன்றிவிடுகின்றது. இருவர்க்கிடையில் நட்பு விருத்தியடையவேண்டில் அவர்கள் சன்மார்க்கமுடையராயும், நற்குணமுடையராயும் இருக்கவேண்டியது அவசியம்.

○ ○ ○

உனக்கு நண்பர் உண்டாயின் நீயொருநல்லவன் என்று எண்ணிக்கொள். நற்குணமில்லாதவர்க் கிடையிலிருக்கும் தொடர்ச்சி நட்பன்று. அது எந்நிமிடத்திலும் பங்கமடையக்கூடும். நல்லவர்கள் யாரெனக்கேள்வியெளலாம். பின்வரும் குறிப்பால் மனிதரை அளக்குக:—நன்னண்பர் உண்மையான விசுவாசமும், நேர்மையும் தயவும், உடையவராயிருப்பர். கோபம், கபடம், அகங்காரம், என்பன அவர்களிடத்தும் கிடையா. அவர்கள் களங்கமற்றவரும் சன்மார்க்கராயும் இருப்பர்.

○ ○ ○

உண்மை நண்பனின் இலக்கணங்கள் யாவை? எல்லா இரகசியத்தையும் சொல்லக்கூடியவனே உண்மைநண்பன். உனக்குசீவமோசம் வரக்கூடிய இரகசியங்களையும் பயப்படாது சொல்லக்கூடிய ஒருவனிருப்பின் அவனே உண்மைநண்பன். உனது அந்தரங்க விஷயங்களைச் சொல்லக்கூடிய ஒருவனின்றேல் உனது சீவியத்தால் பயனென்ன? உன்னோடு நீ பேசுவதுபோல் நீ விரும்பியதைச் சொல்லி விவாதிக்கக் கூடியவனொருவனை நண்பனாகப் பெறுதவன் இருந்தென்ன? இறந்தென்ன? நண்பர்களுக்கு நாம் இனிப்பு வார்த்தைகள் கூறவேண்டியதில்லை. உனனுடைய இருதயத்தை நண்பனுக்கு வெளியே காட்டாதவர்களது நட்பும் விரைவில் பங்கமடையும். ○ ○

தமது நண்பரிடமிருந்து உண்மையையறிந்து தான் பொய் சொல்லுபவனும் நண்பனாகான். நட்பாளர் பரஸ்பரம் அன்புபாராட்டுவர். நட்பென்னும் வீட்டினைக் கட்டுதற்கு அன்பென்னும் செங்கட்டிகளே உபயோகப்படுகின்றன. மேலும் காலத்தினால் செய்த உதவி, நெருங்கிய பழக்கம, பாதுகாப்பு, என்பவைகளால் நல்ல எண்ணங்கள் தோற்றி நட்பினை உறுதிப்படுத்துகின்றன. நண்பரிடமிருந்து ஒன்றைப்பெறுறுலும் பெறுவிடினும் சரி அவரை நாங்கள் நேசிக்கின்றோம். லாபமடையலாம் என்று எண்ணி நட்புக்கொள்ளப்படாது. நட்பு, நட்புநோக்கியே அமையவேண்டும். சிலர் தமது ஆடுமாடுகளை விலைமதிப்பதுபோல் நண்பர்களிலிருந்தும் ஏதாவது நன்மை பெறுதற்கே எப்போதும எதிர்பார்க்கின்றனர்.

○ ○ ○

உண்மை நண்பன் சீவியத்தில் அனுகூலமடைவதைக் கண்டு ஒருவன் உண்மையான சந்தோஷ மடைகின்றான். சீவியத்தில் மிக உயர்ந்தநிலையடைந்தால் அப்போது உன்னுடன் கூடிமகிழ நண்பரில்லாவிடின் அதனால் நீ அடையும்பெருமைதான் யாது? தீமை வந்தகாலத்திலும் நண்பரே நமக்கு ஆதாரமாகின்றனர். நன்மை வந்தகாலத்தில் அது மென்மேலும் விருத்தியடைவதும், தீமை வந்தகாலத்தில் அதனால் வருங்கஷ்டங்கள் குறைவதும் நண்பர்களாலேயே. நண்பனை நாம் எப்போதும் ஒரேவிதமாகவே நடத்துகிறோம். உண்மை நண்பர் தமக்குள்ளிருக்கும் உயர்வுதாழ்வுகளைப் பாராட்டார்கள்,

○ ○ ○

எமது நண்பர்கள்மீது நாம் சந்தேகம்கொள்ளப்படாது. நண்பர்கள் எம்மை மதிக்கவில்லையென்றும் எண்ணப்படாது. அப்படி மதிக்கவில்லை யென்பதால் நட்புப் பங்கமடைகிறது. நல்லவர்கள் புத்தியுள்ளவர்களாயிருந்தால் பின்வரும் விஷயங்கள் இரண்டையுங் கவனித்து நட்பினை உறுதிப்படுத்துவார்களாக.

(1) கபடமாக நடத்தல், விஷயங்களை நசித்துவிடல்கூடாது.

(2) மற்றவர் சொல்லுங்குறைகளை நியாயமின்றி ஒதுக்கப்படாது. நண்பர்கள் தமக்குப் பிழை செய்துவிட்டதாக எண்ணப்படாது. சந்தேகமும் கொள்ளக்கூடாது.

ஒருவருடன் நட்புப் பூணுமுன் நன்கு ஆராய்ந்துபார்க்க வேண்டும். ஆனால் நட்புப் பூணமுன் ஆராய ஆரம்பிக்கப்படாது. வித்தியாசாலையில் மாணவர் நன்காராய்ந்து நட்புப் பூணுதவிடுவதால் இடைக்கிடை நட்புப்பங்கம் ஏற்படுகிறது. நட்புப்பூண்ட ஒருவர் 'கூடாதவரெனக் காணப்படின் அவரது நட்பினைச் சடுதியில் விடப்படாது. சிறிது சிறிதாக விடவேண்டும். நட்புச் சடுதியில் விடப்படின் அது பகையாக முடியும். பெருங்கெடுதியைக் கொண்டுவரும். முன்னர் நட்புப் பூண்டிருந்தவருடன் விவாதம், சண்டை செய்வதிலும் பார்க்க அவமான விஷயம் வேறொன்றுங்கிடையாது.

பெற்றுக்கொண்ட நண்பர்கள் போதுமென எண்ணப்படாது. புதுப்புது நண்பர்களை எப்போதும் தேடிச்செல்ல வேண்டும். புதிய நண்பர்களைத் தேடியவுடன் பழைய நண்பர்களைக் கைவிடுவதா? அன்று, பழைய குடிவகைகள் மிகவும் நன்றாயிருப்பதுபோல், பழைய நண்பர்கள் அதிகம் சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கின்றனர். நண்பரில்லாமல் சீவித்தாலென்னவெனச் சிலர், கேட்கின்றனர். அது எப்படிக் கூடும்? மிருகங்கள்கூடத் தமது இனத்தைச்சார்ந்து வாழ்கின்றன. விஷபமிவ்வாறாக மனிதர் எவ்வளவாக நட்பினை நாடவேண்டும். பகுத்தறிவில்லாதமிருகங்களே நட்பினைநாடில், பகுத்தறிவு மிகுதியாயுள்ள மனிதர் நண்பர்களை எவ்வளவு இலகுவாகத் தேடிக்கொள்ளலாம்.

## கிராமச்சங்கத் தலைவர்மீது வழக்கு

முருங்கன் கிராமச்சங்கத் தலைவராகவிருக்கும் திரு. வ. சீமாம்பிள்ளை என்பவர் நம்பிக்கைத்துரோகஞ்செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு, யாழ்பபாணம் டிஸ்திறிக்கோட்டுகசு விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.


## வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய

**புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு!
கருத்தைக் கவரும் உயரிய விளக்கம்!!

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

**பிரதி விலை ரூபா ஒன்று.**

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :-
வட இலங்கா புத்தகசாலை,
பருத்தித்துறை. (Point Pedro)

(64) 5-1-36.


## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 8609

சண்டிலிப்பாய்
சின்னத்தம்பி சபாபதி — வழக்காளி

அளவெட்டி
1. கதிரவேலு நாகமுத்து
2. ஆறுமுகம் பெண் சின்னப்பிள்ளை
3. அம்பலவாணர் கந்தர்
4. அம்பலவாணர் அப்புக்குட்டி

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8609-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1936-ஞூ தைமீ 23வ வியாழக்கிழமை பிற்பகல் 1-மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டியிறை.

1. சித்திராட்டி ஒல்லையும் பருத்தி ஒல்லையும். நிலப்பரப்பு $8\frac{1}{2}$. எல்லைகிழக்கு கந்தையா பெண் பொன்னுவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், வடக்கு முருகர் கதிரேசுவுக்கும் பங்காளருக்குமுடைய வாதனம், மேற்கு ஆறுமுகம்-முருகருக்குடைய வாதனம். தெற்கு சின்னத்தம்பி பெண் சீதேவனுக்கும் பங்காளருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணி யடங்கலும் தென்கிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்.

2. ஷெ "இறை சந்தப்பாணன் கூடல்" நிலப்பரப்பு $5\frac{3}{8}$ம் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கும் வடக்கும் அம்பலவாணர்-கந்தையாவுக்கும் பங்காளருக்குமுடையவாதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு நாகன்-வயித்தியனுக்கும் பங்காளருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணி யடங்கலில் சொரியலாய் அரைவாசியும் இதற்குரிய கிணற்றில் பங்கும்.

3. ஷெ இறை "சந்தப்பாணன் கூடல்" நிலப்பரப்பு 7-ம் செய்பயிர் வான்பயிரும் கிணறும் எல்லை கிழக்கும் தெற்கும் அம்பலவாணர் கந்தையாவுக்தும் பங்காளருக்குமுரிய வாதனம். வடக்கு பூதர்-நாகமுத்துவுக்கும் பங்காளருக்கு முரிய வாதனம். மேற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலில் சொரியலாய் நிலப்பரப்பு $1\frac{1}{2}$ அதைச் சேர்ந்தவைகளும் குறித்த கிணற்றில் புறப்பங்குகளும் வழி வாய்க்கால் பாவிப்பும் பிறநீங்கலாகவும்.

4. ஷெ இறை "கருவம்பானை" நிலப்பரப்பு 3-குளி 1-ம் பனைகளும், எல்லை கிழக்கு சின்னத்தம்பி-சபாபதிக்கும் பங்காளருக்குமுடைய வாதனம். வடக்கு மாதவர்-வேலுப்பிள்ளைக்கும் உரிமைக்காறருக்குமுடையஆதனம். மேற்கு விநாயகர்-வல்லிபுரத்துக்குடையஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை-தம்பாபிள்ளைக்குரியஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணிஅடங்கலில் இதன் கிழக்கெல்லை அருகாக வடக்கெல்லைக் காணிக்குப்போக்குவரவு செய்யும் வழிப்பாவிப்பு புறநீங்கலாக மிகுதி அடங்கலும் தெற்கேயிருக்கும் ஒழுங்கையிலிருந்துஇதன்தெற்குக் காணியின்கிழக்கெல்லையாகவழிப்பாவிப்பும்.

5. ஷெயிறை "பச்சைச்காச்சி ஒல்லை" நிலப்பரப்பு 6ம் பனைகளும். எல்லை கிளக்கு அம்பலவாணர் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு கதிர்காமர் ஏகாம்பரத்துக்குரிய ஆதனம். மேற்கு பரமாந்தி-கந்தருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலில் சொரியலாய் அரைவாசியும்.

6 ஷெயிறை "வண்ணான் கண்டாயம்" நிலப்பரப்பு 6-ம் செய்பயிர் வான்பயிரும் வீடுகளும். எல்லை கிழக்கு பரமாந்தி-கந்தருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் அம்பலவாணர் கந்தையாவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். மேற்கு பூதர்-நாகமுத்துவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட காணிகளில் சொரியலாய் நாலிலொருபங்கும்.

7. ஷெ வலிகாமம் மேற்குப்பகுதி பண்டைத்தரிப்புக் கோயிற்பற்று பண்டைத்தரிப்பு இறை "ஆடியந்தறை" நிலப்பரப்பு 33. பனைகள் வடலிகளும். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் செல்லாத்தைக்குரிய ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை-நாகநாதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு அந்தோணி-தவிதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு நன்னி பெண்-பொன்னுவுக்கு உரிய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டகாணி அடங்கலில் அரசாட்சியாரின் றேட்டுநிலம் புறநீங்கலாக மிகுதியடங்கலில் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கும்.

8 ஷெ மானிப்பாய் கோயிற்பற்று சண்டிலிப்பாய் இறை 'கடுத்தலை யப்புலம்" நிலப்பரப்பு 15 எல்லைகிழக்கு கணபதிப்பிள்ளை பெண்-தங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு தம்பிப்பிள்ளைபெண்-பொன்னுவுக்குரிய ஆதனம். மேற்கு கதிர்காமர் ஏகாம்பரத்திற்குரிய ஆதனம். தெற்கு ஆலையதம்பிபெண்-நாகமுத்துவுக்குரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலும்.

யாழ்ப்பாணம், 25-12-35. } **V. K. Chinnathamby,** Commissioner.

(63) 5-1-36


## பாரதி நூல்கள்

### கவிதைகள்

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணிமாலை, கண்ணன் பாட்டு, புதியஆத்திசூடி, பாப்பாபாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, ரூ. ச. காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தது. 2–75

### வசனங்கள்.

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோகஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளது. 2–25

### பகவத்கீதை.

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியார்எழுதிய அழகிய தமிழ் உரையும் கலிக்கோ பைண்டு செய்தது. 50
ராப்பர் பைண்டு செய்தது. 35

பாரதியாரும் அவர் நூல்களும்.

ஸ்ரீ. ஸி. விசுவநாதன் பீ. ஏ. எஸ். டி. யால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. 28

கதைக்கோத்து .... .... .... 56

கட்டுரைத் தொகுதிகள்.

1 தத்துவம் .... .... .... 70
2 மாதர் .... .... .... 56
3 கலைகள் .... .... .... 56
4 சமூகம் (அச்சில்)

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.**

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 7.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ கால்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—௯. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு மார்கழிமீ ௨௧வ (5-1-36) ஞாயிற்றுக்கிழமை | பகுதி ௨௯.

## திருவண்ணாமலைச் சைவர் மகாநாடு.

(29, 30, 31-12-35)

சைவசித்தாந்த மகா சமாஜ முப்பதாவது ஆண்டு நிறைவுவிழாவின்போது உயர்திரு சுவாமி விபுலாநந்தரவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

(முற்றொடர்.)

“சுருதி சிந்தனை பாவனை தரிசனை கருதி யுய்த்து மயக்கங் கடிக” என்றமையால் அருட்டிறத்தின் பெற்றியினை உரைக்கும் நூற்பொருளினைக்கேட்டல் இன்றியமையாதது. ஆயினும் அது முதற்படியேயாம். சிந்தனையும் பாவனையும் தரிசனையும் அதன்பின் எய்தற்பாலன. யாம் எதனைச் சிந்திக்கின்றோமோ அதுவாகின்றோம் என்பது உண்மை நூலுக்கும் உலகர் நூலுக்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். உள்ளத்திலே உதிக்கின்ற எண்ணங்கள் பலவற்றுள்ளும் ஒன்று நமக்குச் சிறப்புடையதாகத் தோற்றியவழி, நாம் அதனை மீட்டு மீட்டும் மனத்தின் முன்னிலையிற் கொண்டுவந்து நிறுத்தி, அதனது பூரணவியல்பினை அளவிட முயலுகின்றோம்; அம்முயற்சி தியானமாகின்றது. தியானத்தினாலே அவ்வெண்ணம் தெளிவடையத் தியானிக்கும் உள்ளமானது உவகைமேவிய வியப்பினாலே, தன் செயலிழந்து தியானிக்கும் பொருளினோடு ஒன்றுபட்டு நிற்கும். இந்நிலையே பாவனையெனப்படுவது. மனத்தின் செயல்களுள்ளே சாதாரண எண்ணமானது தெளிந்த இலக்கின்றிச் சஞ்சரித்து, ஒன்றினை விடுத்து மற்றொன்றினைப்பற்றி அலைவுறு நிற்கும். சிந்தனையானது குறித்த இலக்கினையுடையதாதலின், ஒன்றினையே பற்றி அதனை ஆழ்ந்து ஆராயும் ஆற்றலாக வெளிப்படும். இனிப் பாவனைநிலையிலே சிந்திக்கப்பட்ட பொருளின் சிறப்பியல்பு உள்ளத்தினை நிரப்புமாதலின், அதனால் உவகையும் வியப்புமெய்திய உள்ளமானது எப்பொருளினும் மெய்ப்பொருளாகத் தோன்றும செம்பொருளினைப்பற்றிய காரணத்தினாலே தன் செயலிழந்து பரவசப்பட்டு நிற்கும். “சாந்தம், சிவம், சுந்தரம், அத்வைதம்” எனப் போற்றப்பட்ட செம்பொருள் தன்னியல்பிலே நிறைந்த அறிவும், நிறைந்த அழகும், நிறைந்த உவகையும் மேவியதாதலின், அதனைப்பற்றிய உள்ளம் மலர்ச்சியும் உயர்வும் பெற்று நிற்பது பொருத்தமேயாம்.

“கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி” என்றமையினால், உரையும் உணர்வும் கடந்துநின்ற உண்மைப்பொருள் உருவோடு தோற்றுமிடத்து எய்தும் உரு அருளுருவேயா மென்பது பெறப்படுகின்றது “அன்புஞ் சிவமும் இரண்டென்பரறிவிலார்” என்றற்றொடக்கத்து உறுதிமொழியும் இதனையே புலப்படுத்துகின்றது. ஆண்டவனது அருள்வடிவத்தைச் சிந்தனைசெய்யப் புகுவோர் அங்கவற்குந் தமக்குமிடையே யாதாயினுமோர் அன்புத் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டுமெனப் பத்தி யோக நூல்கள் உரையாநிற்கும். பரந்த இஞ்ஞாலத்தினையும் உயிர்வர்க்கங்களையும, வானகத்து மிளிரும் திங்களையும், ஞாயிற்றினையும், விண்மீன்களையும் உயிர்வாழ்க்கையில் நிகழும் இன்பத் துன்பங்களையும் உளங்கொண்டாராய்ந்த ஆண்மகனொருவன் இவை தம்மை ஆக்கியும் அழித்துங் காத்தும் வருகின்ற தலைவனுளன் எனக் கேள்வியுற்ற ஞான்று, அத்தலைவன்பால் அச்சத்தோடு கூடிய அன்பினைச் செலுத்துவான். இந்நிலையிலே ஆண்டானடிமைத் தொடர்பு ஏற்படுகின்றது. தலைவனிடத்துள்ள அன்பு பெருகுதலினாலே அச்சம் ஒருபுடை யகல, முன்னர்ச் சேய்மைக்கண் ஆண்டவனாகத் தோன்றிய அருள்வடிவம் பின்னர் அண்மைக்கண் அன்பு நிறைந்த தாயாகவோ, தந்தையாகவோ காணப்படும். முன்னர்த் தன்னை அடிமையாகக் கண்டோன் பின்னர்த் தான் ஆண்டவனுடைய புதல்வருளொருவனென வறிவான். இந்நிலையே புத்திர மார்க்கமென நூல்களாற் கூறப்படுவது. அச்சம் முற்றிலுமகல அன்பு தனித்து நிற்கும் நிலையே தோழநெறியெனப்படும் சகமார்க்கமாகும். மூன்று நிலையும் அருளுருவத்தைப் பற்றி நிற்பனவேயாகும்.

ஆண்டவனது அருட்கருணையில்லாதவழி நமக்கு உய்யுநெறியில்லை. கருணையினை நாம் அவாவி நிற்கின்றோம; ஆதலினாலே நம்மாலியன்றவரை பிறவுயிர்கள்மீது கருணை பாராட்டவேண்டியவராகின்றோம். அத்தகைய கருணையினைத் திருவள்ளுவப் பயன் செல்வத்துளொன்றாக வைத்து “அருட்செல்வம்” எனக் குறியிட்டு வழங்கும். நாம் காதலிக்கின்ற தலைவனுக்கு இயல்பாக வமைந்த அருள் விளக்கம் நம்மிடத்து எத்துணையாகக் காணப்படுகின்றதோ, அத்துணைக்கு நாம் நமது தலைவனை அணுகி நிற்பவராவோமாதலினாலே, அருட்செல்வத்தினைப் பெருக்குவது சைவராகிய நமக்கு இன்றியமையாத சாதனமாயிற்று.

அருளொழுக்கம் பெருகியவழி, வெறுப்பு, வெகுளி, என்னுமிவை தாமேயகல்வனவாம். அருணிறைந்த உள்ளத்தினுள்ளே அச்சம், கவலை, பொறாமை, அசூயை, துன்பம், மிடி லோபம் என்பன ஒரு சிறிதும் புகமாட்டா. அருளினால் அகன்ற சிந்தையினையுடையோரே பெரியோரெனப்படுவார். இவரைக்காண்போரனைவரும் இவரது நட்பினை விழைந்து நிற்பார். உலகனைத்தும் இவர்க்குச் சுற்றமாகும். புகழ், பொருள் நட்பு ஆகிய மூன்றும் இவர்தம்மை வந்தடைவவாதலின், இவரது வாழ்க்கை பல திறத்தினும் நிறைவு பெற்றுத் தோன்றும்.

அருண்ஞானக் குறியினிற்போர் தம்முடைய சிறுமையையும் தலைவனுடைய பெருமையையும ஒருங்கு சேரவைத்துச் சிந்திக்க வேண்டும். தம்முடைய சிறுமையை மாத்திரம் தனித்து நினைத்தல் கவலை, துன்பம், மிடியென்னுமிவற்றிற்கு உள்ளத்தைப் புகலிடமாக்குமாதலின், அது செய்யத்தகாதென் றறிதல் வேண்டும். தலைவனுடைய பெருமையை நினைவு கூருதலினாலே, அவனை யாம் சார்ந்துநின்ற சார்புபற்றி நமது உள்ளத்திலே ஒரு பெருமிதத் தோன்றும். அப் பெருமிதவுணர்வு நமக்கு எல்லாச் செல்வத்தையும் தரவல்லது. “எங்குமியா மொருவர்க்கும் எளியோ மல்லோம், யாவர்க்கும் மேலானோம் என்றிறுமாப்பெய்தித், திங்கண்முடி யாரடியா ரடியோமென்று, திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே,” என்றபடி “எங்குமியா மொருவர்க்கு மெளியோமல்லோம்” என்னும் பெருமிதவுணர்வு தலைவனது சார்பினால் நமக்கு ஏற்படுவது; இது இம்மை மறுமைச்சுகம் இரண்டினையுந் தருவது. தனித்த மக்களுக்கு மாத்திரமல்ல, மக்கட் கூட்டத்தினர்க்கும் இவ்வுணர்வு உயர்வினைத் தருவதென்பதற்கு உலக சரித்திரமே சாட்சியாகும். ஆளுடையபிள்ளையாரும் ஆளுடையவரசும் உலகிலே திருவவதாரஞ்செய்த காலத்திற்கு மூந்நூறாண்டுகளுக்கு முன்புதொட்டு அக்காலம்வரையும் அந்நிய மன்னரது ஆட்சியுட்பட்டு வலியிழந்துகிடந்த தமிழ்நாடு அருட்செல்வராகிய அவ்விருவரது வருகையினாலே வலிபெற்றெழுந்ததன்றோ? அக்காலம் முதல் அறுநூறாண்டுகளுக்குத் தமிழ மக்கள் பெரும் புகழ்பெற்று விளங்கினரன்றோ? ஈழத்தினும், காழகத்தினும், கங்கைக்கரையினும தமிழ் மன்னர் பெற்ற வெற்றி எங்கிருந்தெழுந்தது? தமிழ் மன்னரது வலிமைககு ஊற்று யாது? இத்தகைய வினாக்களை நாம் ஊன்றியாராய்வோமெனின், “நாமார்க்குங் குடியல்லோம்” என நாவரசருரைத்தமகாமந்திரமே தமிழ்மன்னரது வலிமைக்குக் காரணமாயிற்று என அறிவோம். நாவரசர் தமிழ் நாட்டிலிருந்த அக்காலத்திலே மேற்குக் கடலுக்கு வடகோடியிற் கிடந்த அராபி நாட்டிலே, ஆண்டவனுடைய திருத் தூதரொருவர் அவதரித்தார். அவர் போதித்த மார்க்கத்திலே “இறைவ னொருவனே இறைவன்” என்னும் சிறந்த போதனை அமைந்துள்ளது. இப்போதனையினால் வலிமைபெற்ற அந்நாட்டு மக்கள் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் பாகத்தையும் ஆசியாக் கண்டத்தின் ஒரு பாகத்தினையும் தம்மாணையுள் வைத்து ஆட்சி புரிந்தனரன்றோ? அருண்ஞானத்தினாலெய்தும் வலிமை யித்தகையதென வுணர்ந்தாம்; அதனை யடைதற்குரிய சாதனை யிதுவென ஆராயப் புகுவாம்.

“சந்ததமும் எனது செயல் நினது செயல், யானெனும் தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன், வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே” என அருண் ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் கூறிய உறுதிமொழி அவ்வருண் ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையினை நமக்கு உணர்த்துகின்றது. “தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கின், நாதனவனுடலுயிரா யுண்டுறங்கி நடந்து, நானுபோகங்களையுந் தானாகச் செய்து, பேதமறநின்றிவனைத் தானாக்கி விடுவன்” என்னும் உண்மைநெறி விளக்கமும் மேற்குறித்த சாதனையினையே விளக்குகின்றது. “அவனிவனாய் நின்றமுறை யேகனாகி, யரன்பணியினின்றிடவு மலனுங் குற்றம்,” என்னும் அருண்மொழியும் இவ்வுண்மையினை அறிவுறுத்துகின்றது. “தவமொன்றுமில்லையொரு சாதனையுமில்லையடா, சிவமொன்றே யுள்ளதெனச் சிந்தைசெய்தாற் போதுமடா,” எனவும், “சந்ததமும் எங்குமெல்லாந் தானாகி நின்றசிவம், வந்தெனுளே பாயுதென்று வாய்சொன்னாற் போதுமடா,” எனவும், “நித்தசிவ வெள்ளமென்னுள் வீழ்ந்து நிரம்புதென்றுன், சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தையொன்றே போதுமடா” எனவும் அநுபவ ஞானியுங் கவிவாணருமாகிய பாரதியார் கூறுகின்றார்.

பண்டைப் பெருமையை யிழந்துகிடந்த இப்பாரதநாடு இந்நாளினும் விளக்கமுறும்படி உண்மைநெறியினை உலகிற் குணர்த்தத் திருவவதாரஞ்செய்த அருட்பெருங் குரவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் உண்மைப்பக்தனது வாய்மொழியாக வெளியிட்டுரைத்த வாக்கியம் ஈண்டு நினைவுகூருதற்குரியது. அது வருமாறு: “தலைவ! அடியேன் ஓர் இயந்திரம்; நீர் இயந்திரத்தைச் செலுத்துபவர்; அடியேன் ஒரு மனை; நீர் அம்மனையில வசிப்பவர்; அடியேன் ஒருதேர்; நீர் அத்தேரினைச் செலுத்தும் சாரதி; தேவரீர் அடியேனை எவ்வாறு பேசுவிக்கின்றீரோ அவ்வாறு பேசுகிறேன்; எவ்வண்ணம் நடத்துகின்றீரோ, அவ்வண்ணம் நடக்கின்றேன்; எதனைச் செய்விக்கின்றீரோ அதனை யான் செய்கின்றேன” இத்தகைய உணர்வு மேலிட்டுக குறையிரந்து நிற்போமெனின், அருளாகிய நமமன்னை வெளிப்பட்டு நமது கரத்தினைப்பற்றி வழிநடத்தி நமக்கு வேண்டுவ புரிவா ளென்பதற்கு ஐயப்பாடில்லை. “சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன், கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன், மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார, வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை, மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத், தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித், தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே” என அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

# "எனது கல்விக்கழகம்."

(இஃது, கவியரசர் தாகூர் அவர்கள் அமெரிக்கநாடு நண்ணிய ஞான்று அங்கு நடாத்திய (My School) என்னும் ஆங்கிலச் சொற்பெருக்கின் மொழிபெயர்ப்பு.)

[மேலைவேலணை, ஆசிரியர், திரு. சே. க. சண்முகம்பிள்ளைஅவர்கள்]

(முற்றொடர்.)

ஆகவே, நாங்கள் ஆத்மலோகத்தின் அநுபவத்தை முற்றுகப் பெறல் வேண்டும். இதனுண்மையை நாங்கள் இளமை தொட்டே அறியாமல் விட்டுவிட்டோம். அதன் அநுபவத்தை அவ்வுலகில் சீவித்திருந்து பெறவேண்டுமே யொழியக் கழக முறைக் கல்வியினுல் அல்ல. ஆனுல் இப்படியான அநுபவத்தை எப்படியாக அடையலாம் என்பது மிகவும் கடினமானதாகத் தற்காலத்தி லிருக்கிறது. ஏனென்றுல் இந்தக் காலத்திலே மாந்தர் தமது தொழிற் பாடுகள் யாவும் உண்மையற்றன வென்பதையும், ஆத்மா(Souls)தனது உலகினைக் கண்டு பிடிக்கவில்லை யென்பதையும் அறியாத வழிகளில் தமது காலங்களைச் செலவழிக்கத் தலைப்பட்டுக் கொண்டார்கள்.

"இந்தியாவிலே, பேராசிரியர்களது தாவர உலகுகளையும் அவர் தம் முறைகளையும் நாங்கள் இப்பொழுதும் நினைவு கூருகின்றோம். இவ்விடங்கள் இக்காலக் கருத்திற் கேற்ப, கல்விக்கழகங்களுமல்ல. துறவிகளாச்சிரமங்களுமல்ல. கடவுளிலேயே உலகினைக் காண்பதையும், அவனிலேயே தமது வாழ்க்கை தங்கியிருக்கின்றதென உணர்வதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்ட பெரியார் கூட்டங்கள் வசிக்கும் இல்லங்களே அவ்விடங்களில் அமைந்திருந்தன. அவர்கள் சமூகங்களினின்றும் பிரிந்து வாழ்ந்தாலும், சூரியன் ஏனைய கிரகங்கட்கு எப்படித் தலைமைப்பாடுடையனுய் இருக்கின்றுனே அவ்வாறே அவர்கள் சமூகங்கட்குத் தலைமைப் பாடுடையவர்களாய் இருந்தனர். இவ்விடங்களில், சிறுர்கள் குடும்ப வாழ்க்கையிற் புகுவதற்குத் தகுதியுடையவராதற்கு முன்னரே, அழிவில்லாத பெருவாழ்வின் தன்மையை அறிந்து கொண்டே வாழ்ந்துவந்தனர்.

இப்படியாக, பண்டைய இந்தியாவில் எங்கு உண்மை வாழ்க்கை விளங்கியதோ அங்குதான் கல்விக்கழகங்கள் உண்டு. அங்கு மாணவர்கள், கழகங்களிற் கையாளப்படும் முறைகளிலோ அல்லது துறவிகளாச்சிரமத்து முறைகளிலோ, வளர்க்கப்படுவதில்லை. அவர்கள் உண்மையான வாழ்க்கை முறையிலேயே வளர்க்கப்பட்டு வந்தார்கள். அவர்கள் பசுக்களையும் காளைகளையும் பசிய புற்றரைக்குக் கொண்டுபோய் விடுவார்கள். பழங்கள் பறித்துண்பார்கள். சுதந்திரமாக அங்குள்ள பிராணிகளோடோடிக் களிப்பார்கள். பின்னர் அகப்படுங் காட்டங்களையுங் கைக்கொண்டு தத்தம் வீடு நாடுவர். இவ்விதமாக ஆனந்தமாக வாழுவதோடமையாது, ஆத்மவாழ்க்கையையும் தமது ஆசிரியரின் அறிவைக்கொண்டு அடைந்து இன்புற்றுர்கள். மேலே கூறியபடியெல்லாம் மாணவர்கள் அவ்வரிய நிலையினைப் பெற்றதற்குரிய காரணம் என்னை யென்றுல், அவர்கள் பயின்ற இடங்கள் அறிவைமாத்திரம் அளிக்கும் நோக்கமுடையனவாய் இராமல், தமது வாழ்க்கை கடவுளில் தங்கியிருக்கிறதென்னும் எண்ணமுடையார்க்கு அரியதுணை புரியும் பிரதான நோக்கமுடையனவாய் இருந்தமையே.

இப்படியாக, குருசிஷ்ய முறைகள் இந்தியாவில் இருந்தனவென்பது வீண் கற்பிதங்களல்ல. அது உண்மையென்பது இப்பொழுதும் எங்களிடையில் அம்முறைகள் விளங்குவதால் தெளிவாக அறியப்படும். குருசிஷ்யர்கள் வாழ்ந்த இடங்கள் தற்காலப் பள்ளிக்கூடங்களைப் போன்றவைகளல்ல. மாணவர்கள் விடுதிச் செலவுகளுக்கோ கல்வியூட்டும் செலவுகளுக்கோ (Tuition fees) ஒன்றுமே கொடுக்காது, தமது ஆசிரியர்களோடு வாழ்ந்து வருவார்கள். ஆசிரியர் மட்டான வாழ்க்கையுடையராய் இருந்து மாணவர்க்கேற்படும் தடைகளை நீக்கி இருள் நீக்கி அறிவளித்து வருவார். அவர் மாணவர்க்கறிவளிப்பதை தமது சாதாரண தொழின் மாத்திரமாக மதியாது தமது வாழ்க்கையின் ஒரு பிரதான பகுதியாக எண்ணுகின்றனர். (The teacher takes giving lessons as a part of his life and not of his profession) இவ்விதமாக தமது ஆசிரியரோடு உன்னத வாழ்க்கையில் பங்குபற்றும் தன்மைவாய்ந்த கல்வியின் குறிக்கோள் (Ideal of Education) எனது மனத்தைத் தன்வயமாக்கியது. மற்றைய நாட்டினர் உலக இன்பங்களில் பெருவிருப்புக் கொண்டாரெனின் அவர்கள் தமது கல்வியின் நோக்கங்களை அவ்விருப்புக்களினிமித்தம் செலுத்தலாம். ஆனுல் நாங்கள் எங்களுடைய நன்மைக்கும் இறைவனுடைய கருணைக்குமாக, மனிதன் அடையவேண்டிய உயர்ந்தபடிகளாகிய பூரணவளர்ச்சியையும் ஆத்மசுதந்திரத்தையும் நாடுதலே எமது கல்வியின் முக்கிய நோக்கமாகக் கோடல் வேண்டும். மிகவும் சிறிய செல்வத்திற்காக அலைந்துலைதல் யாவராலும் பரிதாபப்படக்கூடியதொன்றே. ஆனபடியால் இறப்பினையும் ஏனைய கஷ்ட நிலைகளையும் வென்று மிளிரும் உண்மை வாழ்க்கையை நாங்கள் அடைதல் வேண்டும். இறைவனை எதிரிற் காணவேண்டும். எங்கள் எல்லோரையும் அறியாமைக்குழியினின்றும் அகற்றிப் பொய்யில் பொருட்களையும் அன்பு நிதியினையும் அளிக்கும் உண்மைக்காக நாங்கள் வாழவேண்டும். இப்படியான உண்மைநிலையினை அடைந்த பெரியார்களை எங்கள் நாட்டிற் கண்டிருக்கின்றோம் அவர்கள் நூலறிவில்லாதவராயும் வறுமையிற்படிந்து வாழ்க்கை நடாத்தியவராயுமே யிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள ஆத்ம உணர்ச்சி என்னும் அரும்பெருநிதிக்கு நாங்களே உரித்துடையவராய் இருக்கின்றோம். ஆகவே அப்பெரும் புதையலை வெளிக்காட்டி, அதனை உண்மை வழியில் எமது வாழ்க்கையில் உபயோகித்து, ஏற்ற சந்தர்ப்பங்களில் மற்றைய நாட்டினரும் அப்பயனை நுகருமாறளித்து அதனை என்றென்றும் அழியாது காத்தலே எமது பிரதானமான நோக்கமாயிருத்தல் வேண்டும்.

மேலேகூறிய உணர்ச்சியானது என்னுடைய மனத்தைத் தாக்கிய பொழுது யான் கல்வித்தொழிற்பாடுகளில் மூழ்கியிருந்தேன். கனவுகண்டெழுந்து கதறினுர்போல யானும் திடீரென அவ்வுணர்ச்சியை மனத்துட்கொண்டேன். அவ்வமையம் என்னுடைய ஆத்மா மாத்திரமன்றி எனது நாட்டின் ஆத்மாவும் உயிர்ச்சுவாசத்தைப் பெறுவதற்குக் கஷ்டப்பட்டாற்போல எனக்குத் தோன்றியது. எனது உணர்ச்சிக்குத் தெளிவாகத் தோன்றிய தென்னை யென்றுல் தேவைப்பட்ட பொருள் எனக்கு விருப்பம் மிகுந்த உலகப்பொருட்களல்ல. பெருஞ்செல்வமோ அன்றிச் சுகமோ அல்ல. வன்மையுமல்ல. ஆனுல் ஆத்ம சுதந்திரத்தையும், கடவுளில் தங்கியிருக்கும் வாழ்க்கைச்சுதந்திரத்தையும் அநுபவிப்பதேயாகும். அந்த நிலையில் சண்டைசெய்யும் சமர்த்தரோடும் எங்களுக்கு ஒருவித பகைமையும் இருக்கமாட்டாது. பணத்தைத் தேடுபவர்களோடு பலத்த போட்டியும் வாராது. ஏனென்றுல் நாங்கள் எல்லாவிதமான கஷ்டங்களையும் கடந்து உயர்நிலையடைந்திருக்கும்போது மற்றவர் எம்முன் வன்மையற்றவராவர்.

எனக்கிருந்த நல்லதிஷ்டவசமாகவே போலும், யான் எனது முயற்சியைத் தொடங்குவதற்கேற்ற ஓர்இடம் என்பக்கலில் இருந்தது. என்னுடைய தந்தையார் பலப்பல பிரயாணங்கள் செய்திருக்கின்றுர்; அவற்றுளொன்றின் பயனுக அவர்கடவுளோடு வாழ்க்கையை நடாத்துவதற்கேற்ற இடங்களைத் தேடி மேற்கூறிய தனியிடத்தைத் தெரிவு செய்திருந்தார். அவர் இந்த விசேடமான தலத்தை, தியானத்திற்கும் கடவுள் வணக்கத்திற்கும், அமைதியும் தனிமையும் வேண்டுமென்று விரும்பும் பெரியார்களுடைய உபயோகத்திற்காக விடுத்தனர். நான் என்னுடனிருந்த மாணவர் எண்மரோடு இத்தலம் நண்ணி, முன்னநுபவமற்ற புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கலாயினேன்.

(தொடரும்)


## சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னுகம்.

(50) 1-12-35×12-36.


## திருவண்ணுமலைச் சைவர் மகாநாடு.

(முன்பக்கத் தொடர்ச்சி)

தகையார் கூறிய திருவாசகமும் அருண்ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையைக்குறித்துநிற்கின்றது.

அருள்வழி நின்று, இறைபணி புரிவோர்க்கு இவ்வுலகமே இன்பவுலகாகும். யாவனெருவன் அன்பு மேலீட்டினுலே தன்னை முற்றிலும் இறைபணிக்கு உரிமையாக்குகின்றுனே அவனுடைய இதயம் இறைவனுக்கு உகந்த கோயிலாகின்றது. காதலெய்திய உலக மாந்தர் அக்காதல் வயத்தினுல் அன்னையையும் அத்தனையும் உடன்பிறந்தாரையும் மறந்திருப்பதை யாங் கண்டிருக்கின்றோமல்லவா? அவ்வண்ணமே தனிப்பெருந் தலைவனுகிய இறைவனுடைய பேரருளுக்கு இலக்காயினேரும் உலகத்து மயலனைத்தினையும் மறந்து இடைவிடாது அவனருளிலே யீடுபட்டிருப்பர்; அரசனுழைச் சென்றவிருந்தினர்போலச் சொல்லுதற்கரிய உவகை மேவியிருப்பர். ஒரோவழி மணமகனது முன்னிலையில் இருக்கும் மணமகளைப்போல இவர் இன்பவெறி நிரம்பப்பெற்றவராகக் காணப்படுவார்; உலகத் துன்பங்களைக் கண்டு உளம் வருந்தி மக்கட் கூட்ட மனைத்தினையும் உய்யக்கொள்ளவேண்டுமென இறைவனை வேண்டி நிற்பதும் இவர்க்கு இயல்பாகும். இவரது வேண்டுகோள் இறைவனது திருச்செவியினைச் சென்று சேரும்.

அன்புடையீர்! "அருள் ஞானம்" என்னும் அரும் பெரும் பொருளினைக் குறித்து ஒரு சில முடிபுகளை இப்பேரவையிலெடுத்துக் கூறினேன். நான் வழுவிய விடத்தினை வழு நீக்கியும் குறைவுற்ற விடத்தினை நிறைவாக்கியும் இவ்வுரையினை ஏற்றுக்கொள்வீர்க ளென்னுந் துணிவு எனக்கு உளது. "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து', உள்ளமானது எந்தத் தலைவனை நாடிற்றே, அந்தத் தலைவனது அணிமையிலிருக்கும் அருமை நோக்கியே தில்லைத் திருப்பதியிலே சில காலம் வசித்தேன். பின்பு ஈழத்திற்குப் போக நேர்ந்ததெனினும் "உடலங்கே உயிரிங்கே" என நின்றமையாற்போறும் இடையிடையே தாய்நாட்டினைத் தரிசிக்கும் பாக்கியத்தினை ஆண்டவன் கூட்டிவைக்கின்றுன் அவனது பேரருள் நம்மனைவருக்கும் என்றும் உளதாகுக.


## திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

# இந்திய தேசிய மாசபையின் வைபவம்.

(CONGRESS HISTORY)

(‘சுதேசமித்திரன்’ பத்திராதிபர், திரு. C. R. ஸ்ரீநிவாசன்அவர்கள்)

இந்திய தேசிய மகாசபையின் ஐம்பதாவது வயது டிசம்பர் மாதம் 27-ந்திகதியுடன் பூர்த்தியடைந்துவிட்டது. ஒரு பெரிய சாதியினரின் சுதந்திரப்போரில் 50 வருடங்கள் மிகச் சுருக்கமானதாகத் தோற்றலாம். ஆனால் காங்கிரஸ் சபையளவில் அக்காலம் மிக நீண்டதாகும். இவ்வருடங்களுள் காங்கிரஸ் சபையானது தனது சக்தியையும் ஆற்றலையும் யாவரும் அறிய வெளியாகக் காட்டியுளது. இப்போது கொண்டாடப்பட்ட பொன்விழா, காங்கிரஸ் மகாசபையின் ஆதிக்கம் எவ்வளவென்பதை நன்கு காட்டாநின்றது. காங்கிரஸ் சபை யென்றவுடன் தேசமக்களின் நன்மை என்பதே குறிக்கப்படுகின்றது. காங்கிரஸ் சபையில் கலந்துழைக்காதவரும் காங்கிரஸ் சபையே மற்றைய எந்த அரசியற் சபையிலும் அதிகம் ஆதிக்கமும் நன்கு மதிப்பும் உடையதென்பதை மறுக்கமாட்டார்.

காங்கிரஸ் சபை செய்துமுடித்த பெரிய காரியம் யாதெனக் கேட்பர். இந்தியருக்கு அரசினர் வழங்கிய திருத்தங்கள் யாவும் காங்கிரஸ் தொண்டர்கள் செய்த தியாகத்தின் பயனேயாகும். அரசினர் அளித்த சுதந்திரங்கள் மிகச் சிலவே. ஆனால் காங்கிரஸ் முயற்சியால் சனங்களின் மனோநிலை எவ்வளவோ உயர்ந்த நிலையை அடைந்துளது. சனங்களின் சன்மார்க்கநிலை திடமடைந்துளது. இது அளக்கக் கூடியதன்று. இந்தியர்கள் ஆத்மசக்தியை உணர்ந்துவிட்டனர். ஆத்மசக்தியைத் துணைக்கொண்டே இந்தியர் சுதந்திரத்தைப் பெறப் போர்செய்கின்றனர்.

* * *

காங்கிரஸ் சபையின் பூர்வசரித்திரத்தை நோக்கின் கடவுளின் தன்மை யாதாகுமென்பது ஓர் அளவுக்கு விளங்கும். பொதுவாகக் கடவுளின் செயல்களை நிதானித்து அறிவது இயலாது. காங்கிரஸ் சபை ஓர் ஆங்கிலத்துரைமகனால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் ஆரம்பித்தபோது பொதுவாக இந்தியரின் மனோநிலை அக்காலத்துக்கியைய இருந்தது. காங்கிரஸ் ஆரம்பித்த காலத்தில் அதன் ஸ்தாபகராகும் மெஸ். A. O. ஹியூம் என்பவர் அச்சபை தற்போதைய நிலைமையை அது அடையுமெனக் கனவிலும் எண்ணினாரில்லை. தாராளசிந்தையையுடையவராகும் மெஸ். ஹியூம் அவர்கள் மற்றைய ஆங்கிலேயரைப் போல் தமது சுதந்திர உணர்ச்சியை சூயெஸ் கால்வாய்க்கு அப்பக்கத்தில் நிற்பாட்டிவிட்டு வந்தாரில்லை. ஆரம்பத்தில் இவர் இந்தியரின் பொருளாதாரநிலையைச் சீர்ப்படுத்த எண்ணினர். ஆசார திருத்தங்களை அனுட்டானத்துக்குக் கொண்டுவருதற்காக வேலைசெய்தனர்.

காங்கிரஸ் சபை அரசினர்க்கு மாறான ஸ்தாபனமென பிறிட்டிஷார் முதல்முதல் எண்ணவைத்தவர் இராசப்பிரதிநிதி டப்ளின் பிரபுவே. தொடக்கத்தில் அரசினரதும் அரசாங்க உத்தியோகத்தரதும் கட்டளைப்படி அநேக விஷயங்களைக் காங்கிரஸ் சபை செய்துவந்தது. கிளிக்குஞ்சுகள் வசிக்கும் கூட்டில் பருந்தும் வசிப்பதாயது. விரைவில் அரசினர்க்கும் காங்கிரஸ்சபைக்கு மிடையில் வித்தியாசங்கள் ஏற்பட ஆரம்பித்தன. ஆகாயத்திலிருந்து வந்த சில ஐரோப்பியர் சந்தேகங்கொண்டு புறுபுறுக்க ஆரம்பித்தனர்.

இந்தியாவிலுள்ள ஐரோப்பியரன்றிப் பிறிட்டனிலுள்ளவரும் காங்கிரஸ் சபைமீது துவேஷங்கொள்ள ஆரம்பித்தனர். பிறிட்டிஷாரின் நன்மையை நோக்கமாகக்கொண்டு விஷயங்கள் நிர்வகிப்பதை எவரும் ஆட்சேபியாது இருக்கும்வரையும் இந்தியரைத் தோளராகப் பாவித்து அவர் முதுகில் தட்டிச் சந்தோஷங் கொண்டாடினர். ஆனால் காங்கிரஸ் சபை இந்தியர்க்குக் கூடிய சுதந்திரங்கள் அளிக்கப்படவேண்டுமென உறுதியான தீர்மானங்களை நிறைவேற்ற ஆரம்பித்ததும் பிறிட்டிஷார் ஆத்திரங்கொண்டனர். காங்கிரஸ் சபையின் அபிமானிகளாகும் ஹியூம், வெட்டர்பேர்ன், கொற்றன், யூல், டிக்பீ, நோட்டன் என்பவர்கள் இவைகளைக் கண்டு திருத்தங்களைக் கொண்டுவர எண்ணினர். இந்தியர் கையாளும் முறைகளும் அவர்கள் கோட்பாடுகளும் சரியென இங்கிலாந்திலுள்ளவர்க்கு எடுத்துக்காட்ட முன்வந்தனர். பிறிட்டிஷார்மீது உள்ள நல்ல அபிப்பிராயம் பங்கமடைய ஆரம்பித்தது. சனநாயக ஆட்சியில் பிறிட்டிஷார் எவ்வளவுக்கு நம்பிக்கையுடையரென்பதும் தெரியவந்தது. இங்கிலாந்திலுள்ள பிறிட்டிஷார்க்கு இந்தியரின் கோரிக்கைகளின் நியாயத்தை எடுத்துக் காட்டுவதற்காக ஒரு காங்கிரஸ் நிர்வாகசபையொன்று லண்டன் நகரில் ஏற்படுத்தப்பட்டது. இவ்வேலை விரும்பிய பயனை அளித்திலது. இந்தியரைப்பற்றியும், இந்தியர் எப்படி அரசாளப்படவேண்டுமென்பதைப்பற்றியும் எவ்வளவு எடுத்துக் காட்டப்படினும் அதைப் பிறிட்டிஷார் செவிமடுத்தாரில்லை. இவைகளெல்லாம் நன்மைக்கென்றே சொல்லவேண்டும்.

* * *

இதுவரையும் மன்றாட்டப் பத்திரங்கள், பணிவான மனுப்பத்திரங்கள் மூலமாகவே சுதந்திரங்கள் பெற இந்தியர் முயற்சிசெய்தனர். 1905-ம் வருடம் காசிநகரில் நடந்த காங்கிரஸ் சபையின் தலைமையை வகித்த ஸ்ரீமான். கோபாலகிருஷ்ண கோகலே சொன்னதாவது:—“சென்ற இருபதுவருடங்களாக நடந்த சம்பவங்கள் இதுவரையும் பிறிட்டிஷார் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் பங்கமடையச்செய்துவிட்டது. இதுவரையும் நாம்செய்தவேலை தேசிய உணர்ச்சியை உண்டாக்கி அலை ஒரு ஸ்தானமூலமாகக் (காங்கிரஸ்) மிக உரப்பாக வெளிப்படுத்தியதே.” சிறிய திருத்தங்கள் பெரிய திருத்தங்கட்குப் பகையானவை யென்பதை எவரும் அறிய வந்தனர். 1906-ம் வருடம் காங்கிரஸ் சபையினர் தமது நோக்கம் யாதென்பதை வெளியாயெடுத்துரைத்தனர். அக்காலத்தில் உலகின் சிறியபாகங்களில் நடந்த சம்பவங்களும் இதற் காதாரமாயின. தென்னாபிரிக்காவில் போவர்யுத்தமும் ருஷிய-யப்பானிய யுத்தமும் சுதந்தரக் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன. இந்தியரும் தமது நோக்கஞ் சுயராச்சியம் பெறுவதே யென்றனர். அவ்வாறு இந்தியர் தமது சுயமரியாதையை நாட்ட வெளிக்கிளம்பியதற்கு இராசப்பிரதிநிதி கேர்ஷன் பிரபுவே கர்த்தாவாயினர்.

* * *

இந்தியர்க்குப் பெருநன்மையைச்செய்த இரு இராசப்பிரதிநிதிகள் உளர். இவர்கள் ரிப்பன் பிரபுவும், கேர்ஷன் பிரபுவுமே. ரிப்பன்பிரபுவின் அனுக்கிரகம் கிடையாதாயின் காங்கிரஸ் மகாசபை வடிவத்தையும் அமைப்பையும் பெற்று ஆரம்பமாகாது. கேர்ஷன் பிரபுவுடன் துவேஷமும், அவமரியாதையும், பராமுகமும் கிடையாதிருப்பின் இவ்வளவு விருத்தியையும், ஆதிக்கத்தையும் மதிப்பையும் காங்கிரஸ்சபை ஒருகாலமும் அடைந்திருக்கமாட்டாது. சுதந்தர உணர்ச்சியால் உந்தப்பெற்ற இளைஞர்கள் அநேகர் தோன்றித் தேசத்தொண்டிலேற்பட்டதும் அவர்களைப் பழைய கொள்கையுடையவரும் பேச்சுடனும் தீர்மானங்களுடனும் திருப்தியடைந்து வந்தவருமாகிய தலைவர்கள் அடக்கி வழிகாட்ட இயலாதவராயினர். விஷய மிவ்வாறாகச் சடுதியில் தேசியவாதிகட்கும், தாராளக் கட்சியினர்க்கு (Liberals) மிடையில் வேற்றுமை ஏற்பட்டது. அதிகாரவர்க்கத்தினரும் இவ்விதம் பிரிவு ஏற்பட்டதைக்கண்டு ஆனந்தமடைந்தனர். இப்பிரிவு நெடுங்காலம் நிலைக்கவில்லை. பிரிவு ஏற்பட்டு ஆறுவருடங்களுள் ஐரோப்பிய மகாயுத்தம் 1914-ம் வருடம் ஆரம்பமாயிற்று. இந்த யுத்தம் புதிய ஐரோப்பிய நாகரீகத்தை அத்திவாரத்தோடு குலுக்கியது. இந்தியரும் இதற்கிடையில் சுதந்தர உணர்ச்சி எய்தப்பெற்றனர். வெள்ளையர்தான் உலகில் மிகப் பெரியரென்ற போலி அபிப்பிராயத்தை ருஷிய-யப்பானிய யுத்தம் ஸ்தாபித்துவிட்டது. ஐரோப்பாவில் இந்தியப் போர்வீரர் தமது சாமர்த்தியத்தை நாட்டிப் பெரும்புகழ் படைத்தனர். அதிகாரத்தைப்பெற்றால் இந்தியரும் அதைச் சரியாய் உபயோகிப்பரென எவரும் அங்கீகரித்தனர்.

“தன்னை யறிந்து தன்னை மதித்துத் தன்னை யடக்கி னிம்மூன்றும் என்று மழியாப் பெருமை தரும்” என்று ஆங்கில மகாகவி டென்னிசன் கூறிய பிரகாரம் இந்தியரும் தமது ஆற்றலை உணர்ந்தனர். காங்கிரஸ் சரித்திரம் நன்கறிந்தோர்க்கு இம்மூன்று நிலையையும் காங்கிரஸ்சபை யடைந்திருந்ததை உணர்வர்.

* * *

ஐரோப்பிய மகா யுத்தம் முடிவடைந்தபின் காங்கிரஸ் மகா சபை தேசியவாதிகளது ஆதிக்கத்துள் வருவதாயிற்று. திலகர்முதலிய சிறந்த தேசியவாதிகள் காங்கிரஸ் சபைக்குப் புத்துயிர்அளித்தனர். பின்னர் மகாத்மாகாந்தியடிகளின் அதிகாரம் பரம்பியது. சென்ற இருபது வருடமாக (1915–1935) காங்கிரஸ் மகா சபையின் சரித்திரமென்பது மகாத்மாவின் சரித்திரமே. மகாத்மாவின் சரித்திரமாயின் அது காங்கிரஸ் மகா சபையின் சரித்திரமேயாகும். மகாத்மாவின் தலைமையின்கீழ் காங்கிரஸ் மகா சபை பொது சனங்களது சபையாயிற்று. காங்கிரஸ் பெரிதும் ஆதிக்கமடைந்தமைக்குக் காரணம் காந்தியடிகளின் அபாரசக்தியென்றே சொல்லவேண்டும். சமீப காலத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் செய்த நிகரற்ற தியாகங்களும் தொண்டுகளும், அதனை மேனிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. செய்யுமபடி வரும் கட்டளைக்குக் காரணம், நியாயம், கேளாது, சரியோ பிழையோ என யோசியாது தொண்டர்கள், சேவையென்ற ஒரே காரணத்தால் தூண்டப்பெற்று எதையும் செய்ய முன்வந்தனர். சிலர் காந்தியடிகள் எதைச்செய்து முடித்தார் எனக் கேள்வியை நிகழ்த்துவர்.

ஆனால், உண்மையை உணர்ந்து பார்த்தால பெரு நன்மைகள் எய்தியிருக்கக் காணலாம். உதாரணமான உயர்ந்த சீவியத்தைக் கையாளுமொருவரன்றி எவர் எது சொன்னாலும் பொது சனங்கள் நம்பப்போகிறார்களில்லை. சாதாரண சீவியம், தொடங்கிய விஷயத்தில் பூரண நம்பிக்கை, தியாகம் ஆகிய இவைகள்தான் காங்கிரஸ் தொண்டர்கள் தற்காலத்தில் பூணும் ஆபரணங்கள். சுதந்தரப் போரில ஆண்களன்றிப் பெண்களும்கலந்து வேலைசெய்தனர். இமயம்போன்ற பெரிய இமமகத்தான கிளர்ச்சிக்கு கர்த்தா மகாத்மாகாந்தியடிகளே.

தான் எப்போதும் செய்வது சரியேயென மகாத்மா வாதிப்பதில்லை. சிற்சிலபோது தாமும் பிழைவிடவுமாகிறதாம். மகாத்மா செய்துமுடித்த பெரிய வேலையின் பயனை அறிதற்குப் பெரிய ஆழ்ந்த அறிவுவேண்டும். அல்லாவிடில் காடுபார்க்கச் சென்றவன் அதைக்காணாது மரங்களைக் கண்டறிவது போலாகும். இவ்விதமாக பெரிய சுதந்தரக் கிளர்ச்சியை ஆரம்பித்துவிட்டு காந்தியடிகள் காங்கிரஸ் சபையிலிருந்து இளைப்பாறிவிட்டனர். தாம் உதாரணமாகவாழ்ந்து கற்பித்துக் காட்டியவாறு இந்தியர் வாழ்ந்து தொண்டாற்றின் விரும்பிய பயனை அடையலாமென்பதை இந்தியர் அறிந்துவிடின் அதுவே தமக்குப் போதியதென்கிறார் மகாத்மா. காங்கிரஸ் சபையிடும் கட்டளையைத் தலைமேற்கொண்டு அதன்படி நடப்பதே மிகப் பிரதானமான காரியம். ஐம்பது வருடம் செய்துள்ள உண்மைத் தொண்டு! இதுவே காங்கிரஸ்வாதிகள்பெற்ற முதுசம். இச்சபையின பெருமையைநாடி உழைப்பதைவிட வேறு பெருமை உண்டா?

## உதிர்ந்த மலர்கள்.

இந்தியா மேல்நிலையை அடையவேண்டில் சமய விஷயங்கட்கெல்லாம் முதன்மை கொடுப்பதை நிற்பாட்டவேண்டும். யாவரும் தமது தேசத்தையே முன்னணியில் வைக்கவேண்டும். சமயம் ஒருவரின் வாழ்க்கையை நோக்கியது. சீனாவில் பிதா கிறிஸ்தவன், மகன் மகமதியன், தாய் புத்த சமயி. இப்படியிருந்தும் அங்கே சண்டை சச்சரவு கிடையாது. மேலும் இந்தியர் தாம் குறைந்தவரானபடியாற்றான் ஐரோப்பியர் தம்மை மரியாதை செய்வதில்லை யென்ற பிழையான எண்ணத்தையும் கைவிடவேண்டும். யாவர்க்கும் தாம் சமமுடையார் அல்லது விசேஷமுடையரென எண்ணவேண்டும. ஐரோப்பியரும் தலைப்பாரங் கொண்டு தம்மை மேலாக மதிப்பதும் நீதியன்று.

—C. P. இராமசுவாமிஐயர்

சீனதேசத்தில் நான் எங்குசென்றாலும் அங்கே யாவரும் காந்தியடிகளைப் பற்றியும் அவர் விளக்கிய அஹிம்சையைப் பற்றியும் அறிய அபேட்சையுடையாராகக் காணப்பட்டனர். மகாத்மாவின் இந்தப் பெரிய படிப்பினையை அவர்கள் ஆர்வத்துடன் போற்றிவருகின்றனர். அஹிம்சையைக் கைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்துமுடிக்கலாமென்பதையும் அவர்கள் ஆவலுடன் உணர்ந்துவருகின்றனர்.

—மீஸ் மூறியல் பெற்றர்

ஆசிரியர்கள் வருங்காலத்தில் தமது கடமைகளை நன்கு செய்யவேண்டியவராக வேண்டிவரும். கரும்பலகையுடன் நில்லாது மாணவர்க்கு எத்தனையோ விஷயங்கள் பொதுஅறிவை விருத்தி செய்யக்கூடியதாகக் கற்பிக்கப்படவேண்டும். புதுப்புது விஷயங்களை ஆசிரியர் தேடியறிந்துகொள்ள வேண்டும். ஒருநாட்டின் உயர்ச்சிக்கு ஆசிரியரே பொறுப்பாளர்.

—Y. N. ஐயர்

பொருளாதாரநிலை சீர்ப்படுவதே ஒரு நாட்டின் உண்மை வளர்ச்சிக்கு அறிகுறியாகும். பொருளாதார நிலையை விருத்தியடையச் செய்யாத அரசியற் திருத்தங்களால் ஒரு பயனும் கிடையாது. சனங்கள் சந்தோஷமாக வாழ்வதற்கும் பொருளாதார நிலைமையே நன்மைபெறவேண்டும். தேசியமும் அப்போதுதான் விருத்தியடையும்.

—ஜமால் முகமத்


## கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்ட பாடசாலைத் தராதரபத்திர
வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


பிறன் குற்றத்தைச் சொல்லுவோனது குற்றம் பிறனாற் கூறப்படும்.

## பெண்கள் பகுதி.

அமெரிக்க பெண்கள் விவாகஞ் செய்யுங்கால் உத்தரவுபெறும்போது எவ்வளவு காலத்துக்குத் தம்பதிகளாகத் தாம் இருக்க விரும்புவதையும் பதிவுபத்திரத்தில் காட்டுவார். நூற்றுக்கு 34 பேர் தாங்கள் இறக்கும் வரையும் தம்பதிகளாக விருக்கவிரும்பினர். நூற்றுக்குப் பதினைந்து பேர் 20 வருடங்களுக்குத் தம்பதிகளாக இருந்தால் போதுமென்றனர். மூன்றுவீதம் 10 வருடமிருந்தால் போதுமென்றனர். 24 வீதம் 7 வருடம் திருப்தி யென்றனர். 18 வீதம் ஐந்துவருடத்தைக் குறித்தனர். 6 வீதமானோர் தமக்கு 2 வருடமிருப்பின் பூரணம் என்றனர். சராசரி கணக்கிடின் அங்கே பெண்கள் விவாகமாய்த் தம்பதிகளாய் 7 வருடம் இருந்தால் போதுமென எண்ணுகின்றன ரெனலாம். * *

லண்டன் நகரில் ஓர் வித்தியாசாலையின் தலைமை ஆசிரியை யாகவிருந்த ஒரு மாது இப்போது இளைப்பாறி உபகாரச்சம்பளம் பெறுகின்றனர். இம்மாது சென்ற நாற்பது வருடம் உபாத்தித்தொழிலை நடத்திவந்தனர். ஒருபோதும் தான் மாணவர்க்கு அடித்ததில்லையெனப் பெருமையாகக் கூறுகின்றனர். இப் பெண்ணினது நாயகரும் ஓர் வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகவிருந்தவர். இம்மாது வித்தியாசாலையிலிருந்து இளைப்பாறிய காலத்துப் பழையமாணவர்கள் பெரு வெகுமதி இவர்க்கு அளித்தனராம். *

இப்போது கட்டப்பட்டு உபயோகத்துக்கு வரப்போகும் "மேரிராணி" என்னும் புதிய கப்பலில் பல கணிகள், படுக்கைகள், கதிரைகள், மேசைகள் முதலியவற்றிற்கு மாட்டுவதற்கு வேண்டிய அலங்காரமான துணிகள் லங்காஷயர், யோர்க்ஷயர் முதலிய இடங்களில் வசிக்கும் பெண்களால் பின்னப்படுகின்றன. இத் துணிகளுக்கு மாத்திரம் 45000 பவுண் செலவாகுமாம். இக் கப்பல் காரணமாக அநேக பெண்கள் சீவியத்துக்கு உழைக்கக்கூடியவராகின்றனர். *

அதிகபிள்ளைகளைப் பெறாது தடுப்பதற்கேற்ற வழிவகைகளை இந்தியாவில் பரப்புவதற்காக ஸ்ரீமதி மாக்கிறற்சாங்கர் என்னும் பெண் சுற்றுப் பிரயாணஞ் செய்கின்றனர். இம்மாது மகாத்மாவுடன் இருமணித்தியாலத்திற்கு மேல் பரஸ்பரம் கலந்து பேசினர். செயற்கைமுறையில் கர்ப்பம் உண்டாகாமல் தடுப்பதை மகாத்மா ஏற்கவில்லை. பெண்களும் ஆடவரும் தாமாகவே பிரமசரியத்தை மனதையடக்கிக் கைக்கொள்ளவேண்டுமேயன்றி ஔஷதங்களாலும், வேறு செயற்கைமுறையாலும் அதை அனுட்டிக்கப்படாதென்றனர். இதை மாக்கிறற் சாங்கர் சிறிதும் ஒத்துக்கொண்டாரில்லை. பால்ய விவாகமும் அநேக பிள்ளைகளைப் பெறுதலுமே இந்தியாவில் அநேக நட்டங்களை வருவித்துள்ளன வெனவுங் கூறி, பிரசாஉற்பத்தியைத் தடுக்கும் முறை சரியென எல்லா ஆடவரும் தம் பக்கம் நிற்பரென்றுங் கூறினர். "ஆடவர் நீர் சொல்வது நியாயமெனின், பெண்கள் என் பக்கம் நிற்பர்" என மகாத்மா கூறினர். மகாத்மாவைத் தமது பக்கத்துக்கு இழுக்க வியலாததுபற்றி இம் மாது வருந்திச் சென்றனர்.

### நினைத்தபடி வரவில்லையாம்

நத்தார் விடுதலைக்காலத்தில் இலங்கைப் புகைரதவீதியின்வருமானம் அரசினர் எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லையெனவும், யாழ்ப்பாணப் புகைரதத்தினால் மாத்திரமே அதிகவருமானங் கிடைத்ததெனவுங் கூறப்படுகிறது.

# கணக்காயர் கழகம்.

(திரு. மா. பீதாம்பரன் அவர்கள், உரும்பராய்.)

### முன்னுரை

நந் தமிழ்ச் சிறுவர்க்கும் சிறுமியர்க்கும் பல கலையும் புகட்டுந் துறையில் நின்று தொண்டாற்றிவரும் சகோதர சகோதரிகாள்! மற்றும் தமிழ்த் தொண்டார்காள்!

எந்த நாடும் உயர்நிலை எய்தற்குக் கருவியாயிருப்பவர்கள் கணக்காயராகிய ஆசிரியரே என்பது மறுக்கொணா வுண்மை. இஃதுண்மை எனினும் "கற்கப்படுவோர்" என்னும் பெயர்க்குரியராம் பெற்றி வாய்ந்துள்ள ஆசிரியர் இக்காலத்து எத்தனை பேருளர் என்பது "காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண் ஆய்தல்" செய்வார்க்குத் தெள்ளிதிற்புலப்படும்.

காலஞ் செல்லச்செல்ல உலகம் கீழ்நிலையெய்தி வருகின்றதென்பர் ஒரு சாரார்; மேனிலை எய்திக்கொண்டே வருகின்றதென்பர் மற்றொரு சாரார். எங்ஙனமாயினும், இற்றை நாட்களில் 'ஆசிரியர்'களாகத் தொண்டாற்றி வருபவர்களாகிய எம்மனோரின் அறிவின் அளவென்னை? "முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம் கற்றனம் என்று களியற்க" எனக் கூறுவேமா? அன்றேல் "தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத் தழிக கற்றவெலாம் எற்றே இவர்க்குநாம் என்று" கூறுவேமா?

பண்டைக்காலத்திருந்த ஆசிரியர்களின் அறிவென்னே! ஆற்றலென்னே! அவர்களுக்கும் எமக்கும் 'வெகுதூரம்', அற்றை நாட்களில் 'ஆசிரியர்'என்னும்சொல்லுக்குப்பொருள் வேறு; இற்றைநாட்களில் அச்சொல்லுக்குப் பொருள்வேறு' என்று நினைத்தால் ஒருபோது ஆறுதல் அடைதல்கூடும். அதுவே உண்மை போலும். 'பண்டிதர், புலவர், வித்துவான்' என்னும் பெயர்கள் படும் பாட்டினையே 'ஆசிரியர்' என்னும் பெயரும் பெற்றுள்ளது. எங்ஙனமாயினும் ஆட்சிக்கும் வன்மை உண்டன்றே.

"தமிழ் கற்றவர்களை நடுவு நிலைமையின் வழுவாது பரீக்ஷைசெய்து அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க்கல்வியில் வல்லவர்களும், வல்லவர்கள் அல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகிறார்கள். அதனால் நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின" எனக் கூறிப்போந்தார். 'செந்தமிழ்க்கடல்' என விளங்கிய சபாபதி நாவலர் அவர்கள். அந்நாட்களில் இருந்த இக்குறை இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள "தமிழ்ச் சங்கங்களாலும்" சென்னைச் சர்வகலாசாலை, அண்ணாமலைச் சர்வகலாசாலைகளாலும் நிறைவாகி வருகின்றது.

எனினும், வித்துவான்களும் பண்டிதர்களும் — பெரும்பாலோர் — இலக்கணம் இலக்கியம் தர்க்கம் என்னும் இன்னோரன்ன துறைகளிலேயே வல்லுநராய் விளங்குகின்றனர். 'பல்கலைப் பட்டம்' பெறுதற்கான வசதிகள் ஏற்பட்டிருக்குமேல் பல்கலையினும் சிறந்த வித்துவான்களாவார் அவர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் இலக்கணத்துறையுட் புகுந்து துருவித் துருவி யாராய்ந்து புலமை மிக்காராய் விளங்கும் அவர்கட்குக் கணித விஞ்ஞான நூல்கள் கடினமாகா. முற்காலத்தும் இக்காலத்தும் தமிழ்ப்புலவர்க்கு ஆற்றலை விளைத்துநின்றதும் நிற்பதும் இலக்கண அறிவே யாகும். தமிழ்க்கல்விக்கு இலக்கணம் இன்றியமையாதது. இலக்கணமும் கணிதமும் இல்லாக் கல்வியைக் 'கண்கெட்ட கல்வி' எனல் சாலும்.

"தனித்தமிழ்ப் பல்கலைக் கழகங்கள்" உளவோ? இல்லையே! இக்குறை எக்காலம் நிறைவாகுமோ அறிகிலேம். இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளும் ஆங்கிலப் பல்கலைக் கழகங்களேயாம். தனித்தமிழ்க் கல்லூரி தானும் உண்டா? இல்லையே! என்னே தமிழ்த்தாய் செய்த தவம்!

'தனித்தமிழ்ப்பல்கலைக்கல்லூரி' எங்கள் யாழ்ப்பாணத்தில் எப்போ ஸ்தாபிக்கப்படுமோ அறிகிலேம். காலத்தில் எல்லாம் கைகூடும்.

பல்கலைக் கழகமும் இல்லை. பல்கலைக் கல்லூரியும் இல்லை. ஏன்? படிப்பின் பயன் பணத்திற் றங்கி நிற்பதனால், இஃது இயல்பே. கல்வியானது "அறம் பொருள் இன்பமும் வீடும்பயக்கும்," "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவண தெய்த இருதலையும் எய்தும்" என்பன முனிவர் வாக்கு.

'உத்தியோகத்திற்கு வழி கல்வி; கல்விப்பயன் உத்தியோகமே; இப்பரீட்சையிற் சித்தியெய்தினாற் சம்பளம் எவ்வளவு? சம்பளம் ஏறுமா?' என்று நினைத்தல் உலக இயல்பு. 'கல்வியே கல்விப் பயன்' என உள்ளுவோரே உண்மைக்கல்வி எய்துவர். தமிழ்க்கல்வியை வளர்த்தோர் யார்? சங்கப்புலவரும், மூவேந்தரும், சமணமுனிவரும், புத்தமததேரர்களுமே. அவர்கள் இலரேல்; 'தொல்காப்பியம், திருக்குறள், நன்னூல், மணிமேகலை, திருத்தொண்டர்புராணம், வீரசோழியம்' முதலிய நூல்கள் எவ்வாறு தோன்றும். இன்னும் எங்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் தமிழ் வளர்ச்சிக்குக் கருவியாயிருப்பவருள் ஒருவர், எங்கள் நாட்டுத் துறவிகளுள் ஒருவராகிய ஸ்ரீமத் விபுலாநந்தசுவாமிகளே.

சங்கப்புலவர் பூதன்றேவனார், அரசகேசரி, ஞானப்பிரகாச முனிவர், வைத்தியநாதமுனிவர், ஆறுமுக நாவலர் முதலியோரைப் பெற்ற நாடு இவர்களைப் போன்றவர்களைப் பெறுதல் அரிதாமோ.

### பல்கலை வளர்ச்சி

பல்கலைப்பயிற்சிக்குத் தாய்மொழியைக் கருவியாய்க் கொள்ளலே சிறப்பு. இவ்வழக்காறு குன்றிய நாடு இந்தியாவும் இலங்கையுமே. வங்க நாடு விழிப்படைந்துகொண்டது; இத்துறையில் ஒருபடி உயர்ந்து நிற்கின்றது; சென்னைச் சர்வகலாசாலை எட்டிப் பார்க்கின்றது; எங்கள் ஈழநாட்டிலே நடத்தப்படும் உயர்தரப் பரீட்சைகளாகிய ஆங்கில சிரேஷ்ட (S. S. C. E.) கனிஷ்ட (J. S. C. E.) பரீட்சைகட்கும் இரண்டாவது பாஷையொன்று (தாய்மொழி என்னும் நியதி இல்லை) கட்டாயபாடமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது முபுற்படி, விரைவில், தாய்மொழி கட்டாய பாடமாக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

### கணக்காயர் கழகம்

### The Tamil College of Preceptors

கணக்காயர் கழகம், ஒன்றினைஸ் தாபித்து (1) பிரவேசபரீக்ஷை, (2)இளந்தமிழாசிரியர்பரீக்ஷை, (3)தமிழாசிரியர்பரீக்ஷை, (4) பேராசிரியர்பரீட்சை எனப்பெயரிய—அல்லதுஏற்ற வேறு பெயர்களை யுடைய—பரீட்சைகளை நடத்தித், தாய்மொழி மூலம் பல்கலையும் பயிலும் பயிற்சியை வளர்த்தலோடு, ஆசிரியராகவுள்ளாரின் நிலையை உயர்த்தற்குத் துணைபுரிதல் நற்றொண்டாகும்.

பிரவேசபரீட்சைக்குரிய பாடத்திட்டம் சென்னைச் சர்வகலாசாலை (Matriculation - மட்ரிக்குலேசன்) பரீட்சைப்பாடத் திட்டத்தைத்தழுவி அமைக்கப்படலாம். மற்றும் பரீட்சைகள் முறையே மத்திய பரீட்சை (Intermediate), B. A., M.A பரீட்சைப் பாடத் திட்டத்தையும் தழுவித் தமிழ் மரபுக்கேற்ற பெற்றி அமைக்கப்படலாம்.

இங்கிலாந்து தேசத்துக் கணக்காயர் கழகத்தாரால் நடத்தப்படும். ஏ. சி. பி, (A. C. P.) எல். சி. பி. (L. C. P.) பரீட்சைப் பாடத்திட்டங்களும் ஒருவாறுபயன்படும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" எனப் பாரதியார் கூறியுள்ளார், இதுபோன்ற ஒரு சங்கத்தினை நடத்திவருவதும், யாழ்ப்பாணத்தில் "தனித்தமிழ்ப் பல்கலைக்கல்லூரி" ஒன்றினைத் தாபித்தலும், தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பயன்படுவனவாம். 'தனித்தமிழ்ப்பல்கலைக் கல்லூரி' ஆசிரியர் கல்லூரிகளோடு இணைக்கப்பட்டிருத்தல் நலமே.

"யாதானு நாடாமல் ஊராமல் என்னொருவன், சாந்துணையும் கல்லாதவாறு" என்னும் குறள் எங்கள் 'தமிள்வேத' வாக்கிய மன்றோ.

பல்கலைக் கல்லூரி ஒன்றினை விரைவினில் அமைத்தல் எளிதன்று. விடுமுறை நாட்களில், சித்திரை, ஆவணி, தை மாசங்களில் ஏற்ற வகுப்புகளை நடாத்தி ஒருவாறு தொடங்கலே எளிது.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலமுந் தமிழுங் கற்ற பேராசிரியர் பலர் உளர்; அவர் இவ்வகைத்தொண்டிற்குப் பேருதவியாவார் என்பதில் ஐயம் இல்லை.

இவை சில குறிப்புக்கள்: சங்கமொன்று தாபிக்கப்பட்ட பின்பே மற்றும் விஷயங்கள் ஆலோசிக்கற்பாலன.

### நிலாவரையில் விழுந்தவர் வவுனியாவில் நிற்கிறாராம்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தட்டாதெருவில் கடை வைத்திருக்கும் வைத்தியலிங்கம்என்னும் வயோதிபர், தனது வீட்டவருடன் கொண்ட மனஸ்தாபங் காரணமாக விட்டைவிட்டு வெளியேறிச் சிலநாட்களாக அங்கு திரும்பிச் செல்லாதிருந்தாரெனவும், இதன்பின் நிலாவரையில் ஒரு பிரேதம் மிதப்பதைக் கேள்வியுற்ற அரசாங்க அதிகாரிகள் அவ்விடத்துக்குச் சென்று பிரேதத்தைப் பரிசோதித்தபின் புதைத்தனரெனவும், இதைக் கேள்வியுற்ற வைத்தியலிங்கத்தின் சுற்றத்தவர், அப்பிரேதம் குறித்த வைத்தியலிங்கத்தினுடையதென எண்ணி, அதைக் கிளறி எடுப்பித்துக் கொண்டுபோய் முறைப்படி தகனஞ் செய்தனரெனவும் சென்றவார "ஈழகேசரி" யில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியலிங்கம் என்பவர் புறப்பட்டுச் சென்று, வவுனியாவில் உத்தியோகமாயிருக்கும் அயலவராயுள்ள ஒருவரின் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தாரெனவும், அவ்வுத்தியோகத்தர் சென்ற 28-ந் தேதி லீவில் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, வைத்தியலிங்கம் நிலாவரையில் விழுந்து இறந்துவிட்டாரெனக் கேள்வியுற்றதும், ஆச்சரியப்பட்டு அவர் உயிருடனிருக்கிறாரெனத் தெரிவித்தாரெனவும், அவரைத்தேடி அவரது உறவினர் மோட்டார் வண்டியில் வவுனியாவுக்குச் சென்றனரெனவும் அறியலானேம். நிலாவரையில் மிதந்த பிரேதம் தச்சுத் தொழில் செய்யும் மாதகல்வாசி யொருவரின் பிரேதமென ஊகிக்கப்படுகிறது.

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பந் நகச்சொல்லி, நட்பாட றேற்றா தவர்,

# அபிசீனிய மகாயுத்தம்.

## எல்லாப் போர்முனைகளிலும் அபிசீனியர் முன்னேற்றம்.

## இத்தாலிய விமானங்களின் கொடியசெயல்கள்.

### ஆலயங்களும் வைத்தியசாலைகளும் தீக்கிரையாயின.

**இத்தாலியரின் சோர்வுக்குக் காரணம்.** — **20 டாங்கிகள் பிடிக்கப்பட்டனவாம்.**

## அபிசீனிய அரசரின் சமாதானநிபந்தனைகள்.

### வடக்குப் போர்முனையில் அபிசீனியரின் பிடிவாத யுத்தம்.

## பல நகரங்கள் திருப்பிப் பிடிக்கப்பட்டன.

வடக்குப் போர்முனையில் இத்தாலியர் தேவாலயங்களை அக்கினிக்கிரையாக்கினமைபற்றி கிறீஸ்தவ உலகம் பெரும் ஆத்திரமடைகின்றது. அன்றிக் காயப்பட்டோரைத் தூக்கிச் சென்று வைத்தியஞ் செய்வதற்காக சுவீடின் தேசத்தவரால் ஒரு செஞ்சிலுவை வைத்தியசாலை தெற்குப் போர்முனையில் அமைக்கப்பட்டிருந்தது. இத்தாலிய விமானங்கள் குண்டுபோட்டு அவ் வைத்தியசாலையைப் பரிநாசமாக்கி விட்டனர். அவ் வைத்தியசாலையில் கடமை பார்த்த ஒன்பது சுவீடின்தேச வாசிகளும் 23 அபிசீனியரும் கொல்லப்பட்டனராம்.

வடக்குப் போர்முனையில் அபிசீனியர் முன்னேறிச் செல்கின்றனரென்றும் இத்தாலியரில் அநேக போர்வீரரும் 23 உத்தியோகத்தரும் கொல்லப்பட்டனரென்றும் சொல்லப்படுகிறது.

இத்தாலியர் அதிகம் முன்னேறுது விடுவதைப்பற்றி எவரும் அதைரியப்பட வேண்டியதில்லை யென்றும், போக்குவரவு வசதிகள் அமைப்பதிலே இப்போது தாம் மிகவும் முயற்சியெடுப்பதாகவும் முசோலினி கூறுகின்றார்.

இத்தாலிய விமானங்கள் செஞ்சிலுவை வைத்தியசாலையைத் தாக்கியதன்காரணமாக சுவீடின்தேசத்தில்பெரும் ஆத்திரமுண்டாயிருக்கிறது. ஆலயங்கள் தீக்கிரையாக்கப் பட்டதும் பெரும் கோபத்தை ஐரோப்பா எங்கணும் உண்டாக்கிவிட்டது.

எல்லாப் போர்முனைகளிலும் பொதுவாக அபிசீனியரே முன்னேறிச் செல்கின்றனர். தெம்பியன் பிரதேசத்தில் நடந்த சண்டையைப் போல் கொடிய சண்டை முன்னொரு போதும் நடந்ததில்லையாம்.

பிரான்சிய முதன்மந்திரியாராகும் லவாலின் கொள்கைகளைப் பிரான்சிய அரசினர் ஏற்கவில்லையென்றும் ஹெறியற் அவர்களையே அநேகர் சார்ந்து நிற்கின்றனரென்றும் சொல்லப்படுகிறது. ஹெறியற் என்பவர் சர்வதேசசங்கத்தின் பெருமையைக் காப்பாற்றவேண்டு மென்றும் அபிசீனியர் நீதியாக நடத்தப்படவேண்டுமெனவும் அபிப்பிராயமுடையர். லவால்மீது நம்பிக்கையற்றுப்போயதென்றும் அவர் விலகினவுடன் அவரிடத்துக்குப் பிளான்டன் என்பவர் நியமிக்கப்படுவாரெனவும் கூறப்படுகிறது.

பெற்றோல் விஷயமாக நடபடிக்கைகள் இன்னும் கையாளப்படவில்லை. இத்தாலியர் வேண்டியளவு பெற்றோலை விலைக்குப்பெற்றுச் சேமிக்கின்றனர். லவால் பிரான்சியரின் முதன் மந்திரியாக இருக்கும்வரையும் தமக்கொரு பாதகமும் ஏற்படாதென்பது இத்தாலியரின் நம்பிக்கையாம்.

வடக்குப் போர்முனையில் அபிசீனியர் பெரிய வெற்றிகள் அடைந்தனர். இதுகாரணமாக அடிஸ்அபேபாவில் பெரும் ஆநந்தம் உண்டாயிற்றாம். இதுவரையில் அபிசீனியர் இத்தாலியரிடமிருந்து 20 டாங்கு என்னும் கவசமோட்டார்கள் பிடிக்கப்பட்டதாம். 50 யந்திரப் பீரங்கிகளும் அபிசீனியர்வசமாயிற்று. மக்கலேநகரைத் திருப்பிப் பிடிக்கும் நோக்கத்துடன் மூன்று அபிசீனிய சேனைகள் வெவ்வேறிடங்களிலிருந்து இத்தாலியரைத் தாக்குகின்றன. இம்மூன்று சேனையையும் கொண்டுநடத்துவோர் ராஸ்சேயம், ராஸ்கஸா, டெட்ஜாமார்கஸ்பாற் என்பவர்களே. யுத்தம் மிக மும்மரமாக நடந்துவருகின்றது. காயமடைந்த ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் தேடுவாரற்று யுத்த ஸ்தலங்களில் கிடக்கின்றார்களாம்.

இரண்டு இத்தாலிய விமானங்கள் சுட்டுவிழுத்தப்பட்டதை இத்தாலியரும் அங்கீகரிக்கின்றனர்.

அபிசீனிய அரசர் தாம் யுத்தத்தை நிற்பாட்டின் பின்வரும் நிபந்தனைகள் அபிசீனியரால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்கின்றனர்.

(1) அபிசீனிய எல்லையைத்தாண்டி இத்தாலிய சேனைகள் அப்பால் செல்லவேண்டும்.

(2) இதுவரையில் அபிசீனியர் அடைந்த நட்டங்கட்கு இத்தாலியர் ஈடுகொடுக்கவேண்டும்.

(3) அபிசீனியா ஒரு சுதந்திரம்பெற்ற நாடாகவல்லரசுகள் அங்கீகரிக்கவேண்டும்

(4) சர்வதேச சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் அபிசீனிய எல்லையை வகுக்கவேண்டும். அதை இத்தாலியர் ஏற்கவேண்டும்.

(5) அபிசீனியாவின் பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்த அபிசீனிய அரசினர் வல்லரசுகளின் உதவியை நாடுவர். இத்தாலியர் அங்கே குடியேற இடங்கொடுக்கப்படார்.

தக்சே என்ற நதியை அடுத்த போர்முனையில் இத்தாலியர் பெரிய தோல்வியடைந்து பின்னிட்டு வேகமாக ஓட்டம்பிடிக்கின்றனர். என்டசெலசி என்ற இடம் அபிசீனியரால் பிடிக்கப்பட்டது. பின்காட்டியோடும் போது அவ்விடங்களிலுள்ள தேவாலயங்களைக்கூடத் தீக்கிரையாக்கிவிட்டுச் செல்கின்றனர். ஆனால் இத்தாலியர் விமானங்களைக்கொண்டு குண்டு போட்டுப் பெருநட்டங்களை விளைக்கின்றனர். தெற்குப் போர்முனையில் இத்தாலிய விமானங்கள் பறந்துசென்று டக்காபூர் என்ற நகர்மீது குண்டுமாரி சொரிந்தனவாம் ஒரேதடவையாக 8 மணித்தியாலங்கள் வரையில் குண்டுகள் சொரிந்தனரென்றும் பெருநட்டம் ஏற்பட்டுளதென்றும் சொல்லப்படுகின்றது.

மேலும் இத்தாலியர் வடக்குப் போர்முனையில் நச்சுப்புகையை உண்டாக்கும் குண்டுகளைப் பிரயோகித்தாரென்றும் இது சர்வதேச ஒழுங்குகட்கு மாறென்றும் சொல்லப்படுகின்றது. அபிசீனியர் இவ்விஷயத்தைச்சர்வதேசசங்கத்தினர்க்குத்தெரிவித்துள்ளார்கள்.

தெற்குப் போர்முனையில் ஒரு பகுதிச் சேனையை நடத்திச்செல்லும் நாஸிபு என்பவரை ஒரு பத்திரிகை நிருபர் கண்டு பேசினாராம். அவரின்கீழ் 75000 போர்வீரர் உளர். இவர்களுணவுகள் சாதாரணமானவை. இவ்வீரர்களே இத்தாலியரைப் பின்வாங்கச் செய்தவர். அபிசீனியரின் துப்பாக்கிகட்குப் பயந்து இத்தாலிய விமானங்கள் மிகவுயரத்தில் பறந்துசெல்ல வேண்டியதா யிருக்கிறதாம். ஆகையால் அவைபோடும் குண்டுகள் இலக்காக விழுகின்றில.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவுவிழா, திருவண்ணுமலை.

தலைவர்:
உயர்திரு. சுவாமி விபுலாநந்தரவர்கள்,
திறப்பாளர்:
திவான்பகதூர், கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள்,
மங்கையர் மகாநாட்டுத் தலைவியர்:
உயர்திரு. அசலாம்பிகை அம்மையாரவர்கள்,
இளைஞர் மகாநாட்டுத் தலைவர்:
உயர்திரு. ஜி. கலியாணம்பிள்ளையவர்கள்

# நல்வரவேற்பு.

[இச் சமாஜப் போஷகரி லொருவராகிய பண்டிதாரத்தினம் துகஸ்ரீ புழலை. திருநாவுக்கரசுமுதலியார் (Mirasdar & Honorary Magistrate, Sembiam)]

### ஆசிரியவிருத்தம்.

தாயகமா யொளிர்சைவ சமயநெறி பிறழாத தகைமை சான்ற
மேயபுகழ் பெண்ணையாற் றுப்பெருக்காற் கழனிதொறும் விளைசெஞ் சாலி
ஆயவளம் பெருகுநித்ய நைமித்ய மெலாந்தவறு தணிபெ றச்செய்
நாயகமாய் விளங்குஞ்செல் வாக்களிக்கும் நடுநாட்டின் நலஞ்சி றக்க. (க)

கண்ணினள விடவரிய மாலயன்மாட் டழலுருவாய்க் காட்டா நிற்கும்
மண்ணிலமர் மலைநுனியி லுயர்தீபச் சுடரொளியாய் மக்கட் கென்றும்
எண்ணரிய பிறவிதனை நினைக்குமுன மொழிக்கவருள் எழின்மிக் கார்ந்த
தண்ணளிதற் பரமனருட் டிருவண்ணு மலையெனுமோர் தலத்தில் வான்றோய்.

தப்பாது சுத்தாத்து விதசைவ சித்தாந்த சமாசக் கொள்கை
எப்பாலும் நனிசிறக்கப் பரப்பியத னுண்மைநிலை யிஃதென் றேத்த
செப்பரிய சொற்பொழிவை நிகழ்த்தவரும் பேரவைக்குச் சீர்சான் மிக்க
முப்பானுண் டுற்றநிறை விழாவிலக்ரா சனம்வகிக்க முற்று மோர்ந்து. (உ)

துயர்திருக்கா தியவொழித்த துறவுநிலை பூண்டொழுகுந் திகழ்மெய்ஞ் ஞான
உயர்திருநற் சுவாமிவிபு லாநந்த வடிகளெனு மூரிமை யாள!
அயர்வொழிக்குஞ் சர்க்கரைநற் பந்தலிலே தேன்மாரி பொழிய வாற்றும்
பெயர்வகிக்கு நினதருமை விரிவுரையை நன்கூட்டப் பெரும வாரீர்! (ச)

அத்தகைய நிறைவுவிழா வைத்திறந்து வைக்கவிவ ணன்பன் யார்க்கும்
பத்திமிகுங் கீழ்ச்சேரி நகர்வருநற் றிவான்பகதூர் பட்டம் பெற்றோன்
உத்தமக்கூட் டுறவுசங்கத் துரியபதிப் பாளனெனு முரிமை வாய்ந்தோன்
சித்தமகிழ் விக்குமொரு தெய்வசிகா மணியாகுஞ் செம்மல்! வாரீர். (ரு)

நங்கைதழு வக்குழைந்த தழும்பகலா தொளிருமதை நவிலுஞ் சைவ
மங்கையர்தம் மகாநாட்டிற் குறுந்தலைமை வகித்துநனி மகிழ்மிக் கூர
துங்கமிகுந் தவப்பெண்ணி னவதார மெனவருநற் றாய்மைத் தாய
மங்கலப்பண் டிதையசலாம் பிகையமைநல் லிசைபயில வாரீர்! வாரீர். (சு)

நற்சைவ இளைஞர்மகா நாட்டிற்குத் தலைமைவகித் திறும்பூ தெய்த
பொற்பகலா இனியதமிழ் மணங்கமழுஞ் சொன்மாரி பொழிய விங்ஙன்
அற்புதச்சற் குணங்களமர் கலியாணம பிள்ளையெனும் அருமை சான்ற
விற்பனனுய் வயங்குமொரு வதிமதுர நலங்கிளர்மெய் விபுத! வாரீர். (எ)

### வாழ்த்து. வெண்பா.

மன்னு சிவசமய மாமறுநீ றக்கமணி
பன்னு திருத்தொண்டர் பசியதமிழ்—உன்னரிய
அண்ணு மலைக்கரசா மம்மையப்ப ரோடுநிதம்
மண்ணுதி வாழ்க மகிழ்ந்து.

## மூளாய் முருகமூர்த்திகோயில் ஐயர் கொலை.

### கல்லெடுப்பில் வந்த கலகம் காரணமாம்

### "அந்தியேட்டியில் அரிசி வேண்டுவதைப் பார்ப்போம்"

மூளாய் என்னுமிடத்திலுள்ள முருகமூர்த்திகோயில் பூசகர் பிரமஸ்ரீ வைத்தீஸ்வர ஐயர் என்பவர், சென்ற வியாழக்கிழமை இரவு நாலரைமணியளவில் கோயில் கிணற்றில் தண்ணீரள்ளிக்கொண்டு கோயிலுக்குப் போகுஞ் சமையத்தில், கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டாரென ஒரு செய்தி கிடைத்துள்ளது. கொலை செய்தவர் யாரென்பது தெரியவில்லையாம்.

சென்றகிழமை கல்லெடுப்புக்குச் சென்று கீரிமலையிலிருந்து வரும்போதேற்பட்ட மனஸ்தாபமே இக்கொலைக்குக் காரணமென்றும், குறித்த ஐயர் "அந்தியேட்டிக்குப்போய் அரிசிவேண்டுவதைப் பார்ப்போம்" என்று சிலர் சபதமிட்டனரென்றும் பேசிக்கொள்ளுகின்றனர்.

குறித்த ஐயருக்கு வயது 45 வரையிலிருக்குமாம். மார்கழித் திருவெம்பாவைப் பூசைக்குக் கோயிலுக்குத் தண்ணீரள்ளிச் செல்கையில் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது அவ்வூரில் பெரிதும் பரபரப்பை யுண்டாக்கியிருக்கிறதாம். நிருபர்.

**மகிழும்படி சொல்லிச் சிநேகஞ் செய்தலை யறியாதவர் புறங்கூறி யுறவினரைப் பிரியார்.**

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு
ஒருவனே கடவுள்
ஈழகேசரி

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஷூ மார்கழிீ உகவ

## அரசாங்கசபை அபேட்சகர்கள்.

டொனமூர் அரசியற்றிட்டம் அனுட்டானத்தில் இருக்கும்வரையும் கட்சிபேத அரசியல் (Party-System) ஏற்படாதெனெ ஆரம்பத்திலேயே பல அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் கூறினதுண்டு. அந்த உண்மையை இப்போது நடந்துகொண்டிருக்கும் தேர்தல் முயற்சிகள் நன்கு உறுதிப்படுத்துகின்றன. அரசாங்க சபையில் அங்கத்துவம் பெறுவதை நாடி பல அபேட்சகர்கள் வெளிவந்துள்ளார். அவர்களுக்கு ஒரு குறிக்கப்பட்ட நோக்கமென்பது கிடையாது. தருணத்துக்கு ஏற்றவிதமாக—அதாவது தேர்தலில் சித்தியை அளிக்கும் முறைக்கியைய—தங்கள் நோக்கங்களை மாற்றியும் திருத்தியும் முற்றுகக் கைவிட்டும் செல்கின்றனர். தேசத்துக்குப் பெருநன்மையை வரச்செய்யும் வழிகளை எடுத்துக்காட்டித் தமது கொள்கைகளே முதன்மையுடைத்தெனக் கூறும் கட்சிகள் பலவுளதாயின், சனங்கள் ஏற்ற அங்கத்தவர்களை இலகுவில் தெரியும் பாக்கியத்தைப் பெறுவர். அவ்வாறில்லாத இலங்கையில் தேர்தலுக்காகச் செலவிடவேண்டிய பணமும் சிரமமும் இம்மாத்திரமன்று. கட்சியரசியல் ஏற்பட்டுள்ள இங்கிலாந்து முதலிய இடங்களில் அபேட்சகர் தமது நோக்கங்களை நன்கெடுத்துப்பகிரங்ககூட்டங்களில் சொல்வர். சனங்கள் தமக்கு அதிக நன்மைசெய்யக்கூடிய கட்சியினரின் பிரதிநிதிக்குத் தமது சம்மதத்தை அளிப்பர். இது மிகவும் வியக்கப்பட வேண்டியதே

இலங்கையிலும் அவ்வித முறையாகத் தேர்தல் ஏற்படுங்காலத்தை நாம்ஆவலுடன் எதிர்பார்க்கின்றேம். இப்போது அபேட்சகராக முன்வந்தோர் இவ்விஷயத்தில் தாம் பெரிதும் அக்கறை கொள்வதாக பொது சனங்கட்கு உறுதிகூற வேண்டும். டொனமூர்த் திட்டம் ஏற்ற முறையில் திருத்தப்படினன்றி இப்போது அதில் காணப்படும் ஊழல்கள் ஒருபோதும் நீங்காவெனத் திடமாகக் கூறலாம். மேலும் தற்போது அனுசரணையிலுள்ள திட்டம் வகுப்புவாதத்தையே பெரிதும் விருத்திசெய்து தேச முன்னேற்றத்தைத் தடுத்து நிற்கின்றது. சுயநலவாதிகள், வகுப்புவாதிகள் என்போர்க்கே இப்போதுள்ள அரசாங்க சபை இடமாயிருக்கின்றமை பற்றி நாம் துயரடைகின்றேம்.

இவ்வாறாக ஏற்பட்டுள்ள பல்வேறு குறைகளையும் நன்கு நோக்கி அவைகளை நிவிர்த்திசெய்யக்கூடிய தகுதியும் ஆற்றலும் செல்வாக்குமுடையவர்களையே யாழ்ப்பாணத்தவராகும்நாம்தெரிந்து அனுப்புதல்வேண்டும். அரசாங்கசபை யமைப்பும், அரசியல் நிர்வாகமும் தேசநன்மைக்கியையத் திருத்தப்படினன்றி இலங்கைக்கு ஒரு நன்மையும் வரப்போவதில்லை. இவ் விஷயங்களை நன்கு நோக்கி அதற்கேற்ற அபேட்சகர்க்கே யாவரும் வாக்குக் கொடுப்பது அவசியம். அந்தரங்கநட்பு, சுயநலப்பேறு, தான் அல்லது மற்றவர் பெற இருக்கும்உபகாரம்என்பனவற்றைக் காரணமாகக்கொண்டு அருமையாகத் தாம் பெற்ற வாக்குரிமையைச் சிதைத்துவிடுவதாயின், அது பெரும் நட்டமாகவே முடியும். தேசநலத்தைச் சிரமேற்கொண்டவராவோர் எல்லோரையும் திருப்திசெய்யவேண்டுமென்ற பிழையான எண்ணத்தையுங் கைவிட வேண்டும். என்ன நட்டந்தான் வரினும் எவர்தான் பகைக்கினும் தேசநலமொன்றையே நோக்காக உடையார் என்பதை நாம் தேர்ந்துகொள்வதும் அவசியம். ஒரு சமயத்தவரை அல்லது ஒரு வகுப்பினரை அல்லது ஒரு சாதியினரைத் துணைக்கொண்டு தேர்தலில் வெற்றியைப் பெற நாடி அவரவர் தாளத்துக்கு நடிப்போர் மகத்தான ஒரு நன்மையையுஞ் செய்யமாட்டாரென்பதை நாம் திடமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்

தேசத்துக்காகப் பாடுபடக்கூடியவர்-இடைவிடாது உழைக்கக்கூடியவர் அத்தேசவாசியேயன்றிப் பிறரல்லர். சந்தர்ப்பங்காரணமாகத் தேசத்தவராவோர் அச்சந்தர்ப்பம்வந்து சேரின இடத்தைவிட்டுச் சூரியனைக் கண்ட பனிபோலவும் நீங்கிவிடுவர் பொது ஸ்தாபனங்களை நடத்தி அனுபவம் ஆற்றல் பெறுது அவைகளைச் சீர்கெட விடுபவர்கள் தேசநன்மைக்கு உழைப்பதென்பது எப்படிக்கூடும்? பொதுசனத் தலைவராய், பொதுநலத்தைநாடி அரசாங்கசபையில் உழைக்க விரும்புவதாகக் கங்கணங்கட்டி நிற்போர், முதலில் தமது மாளிகையைத் திருப்திசெய்யவேண்டாமா? வீட்டார் தவிக்க வெளியில் நிற்பார்க்குப் பொன்மாரி வழங்குவது முறையாகுமா?. யாழ்ப்பாணத்துக்கென இடைவிடாது உழைத்த பெருமக்கள் அநேகர் உளரே. அவர்கள் அனுபவங்கள் சிறிதாகுமா? அவர்கட்கெல்லாம் இணையானவர் தாமேயெனக் கிளம்பிநிற்போர் நிலை, எப்படிப் போற்றப்படலாம்.

ஆகையால்,வாக்காளர்கள் தமது கடமையை ஏற்றவழியில் உண்மையை அறிந்து செலுத்தவேண்டும் எல்லாரையும் பிரியப்படுத்தி நிற்பவர்களின் பேடித்தனத்தை நன்கு உணருதல் வேண்டும். வகுப்புவாதிகளுடன் சார்ந்துநின்று நாட்டிற்கு உழைக்க எண்ணுபவர் அரசாங்கசபையில் செய்துமுடிக்கவிருக்கும் நன்மைதான் யாது? துணிவுடன் பின்முன்நோக்கிநின்று கெஞ்சாது, விஷயங்களைச் செய்துமுடிக்கக்கூடியவரையே நாம் தெரிந்துஅனுப்புதல் வேண்டும். வேண்டியபோதெல்லாம் மற்றைய சாதியினருடன் ஒத்துழைத்தும், எதிர்த்தும் வாதாடும் போராற்றலும் தகுதியும் இன்னோரன்ன பிறவும் வாய்ந்தவர்களையே வாக்காளர் ஆதரித்தல் நலமாகும்.

---

காலநிலை:—மழையில்லை. பகலில் வெய்யிலும், இரவில் பனியும் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால், காய்ச்சல், வயிற்றுழைவு முதலிய நோய்கள் ஊரிற் பரவியிருக்கின்றன.

## எத்தனை நாட்களுக்குப் பார்த்திருப்பது?

"அளவுக்கு மிகுதியானல் அமிர்தமும் நஞ்சாகும்" என்பர் அறிவுடையோர். ஆகாயப்படை தம்மிடத்தில் நூற்றுக்கணக்காயிருப்பதால் அதனைக்கொண்டுஎக்கொடுமையையும் செய்துவிடலாமென இத்தாலியர் எண்ணுகின்றனர். யுத்தஞ் செய்யுங்கால் அதில் ஈடுபட்டுள்ள தமது பகைவராம் சேனைவீரர்மீது குண்டுகள் போட்டு நட்டத்தை விளைப்பின் அதை ஆட்சேபிப்பார் எவரும் கிடையாது. ஆனல் சிறிதும் விரோதம் பாராட்டாதவரும், அபராதம் செய்யாதவருமாகிய அபிசீனியக் குழந்தைகள்மீதும், பெண்கள்மீதும், நோய்வாய்ப்பட்ட வயோதிபர் மீதும், காயமடைந்து வைத்தியசாலையில் கிடக்கும் உதவியற்றேர்மீதும் இத்தாலிய ஆகாயவிமானங்கள் குண்டுமாரி சொரிவதாயின் இதிலும் கொடிய செய்கை வேறு யாதுளதாகுமோ? யுத்தத்தில் வெற்றிகொள்வதற்கு இவ்வித நீதியீனமானவும், கடவுளுக்கும் சன்மார்க்கத்துக்கும் மாறுனவுமான வழிவகைகளைக் கையாள்வதென்பது, இத்தாலியர் அடையவிருக்கும் கெடுகாலத்தைக் காட்டுகின்றதே.

இற்றைக்கு ஒரு மாதத்திற்கு முன் இத்தீய விமானங்கள் டெஸி நகரிலுள்ள அமரிக்க செஞ்சிலுவை வைத்தியசாலையில் குண்டுபோட்டுப் பெருங்கெடுதிகளை விளைத்தமை முன்னரே வெளியிட்டுள்ளாம். அப்போது அபிசீனிய அரசினரும் அங்கு நின்று சம்பவங்களை நேரில் கண்டு சர்வதேச சங்கத்தினர்க்கு அதனை ஆட்சேபித்து ஒரு நிருபம் விடுத்தனர். இப்போது அதிலும் கொடிய சம்பவங்கள் நடக்கலாயின. டொலோன் என்னுமிடத்திலுள்ள சுவீடிஷ் செஞ்சிலுவை வைத்தியசாலை மீது இத்தாலியர் போட்ட குண்டுகளால் பெருஞ்சேதம் ஏற்பட்டுளது. 9 சுவீடன்தேச வாசிகளும் 23 அபிசீனிய வேலையாட்களும் 30 நோயாளரும் கொல்லப்பட்டனராம். இதிலும கொடியசெயல் வேறுயாது? யுத்தகாலத்தில் அனுஷ்டிக்கப்படவேண்டியநிபந்தனைகளைமீறி, இத்தாலியர் செய்யும் அக்கிரமங்களை வல்லரசினர் எத்தனைநாட்களுக்குப் பொறுத்திருப்பது? மூர்க்கனுக்கு வழி குறுக்கேயுளது. எதையும் செய்வான். இத்தாலியரும் வெற்றியை அடைய எவ்வித அநாகரீகமுறைகளையும் கையாளப் பின்னில்லார்போல் தோற்றுகிறது. இத்துடன்நின்றுரா? அன்று. அபிசீனியரால் தாக்கப்பட்டுப் பின்வாங்கும் பிரதேசங்களில் தேவாலயங்களையும் தீக்கிரையாக்கிவிட்டுச் செல்கின்றனராம். கடவுளையும் மதிக்கின்றுரில்லை. வல்லரசினர் இன்னும் பார்த்துக்கொண்டிருப்பின் பெரும் கெடுதிகள் தோன்றுமல்லவா? அக்கெடுதிகள் மிகப் பிரமாதமான நிலையை அடையின் அவைகளை அடக்குவதும் கஷ்டமாய்விடும். ஆகையால் சர்வதேச சங்கத்தவர் ஏற்ற நடபடிக்கைகளைக் கையாண்டு இத்தாலியர்க்கு உண்மையறிவு பிறக்கச் செய்வாராக.

## இடியேறு!

இடியேறு என்றவுடன் வாசகர்கள் மனதில் கலவரமுண்டாகக்கூடும். ஆனல், அப்படியல்ல. ஈழகேசரி மீதுள்ள அன்பினுலோ ஆர்வத்தாலோ, அன்பர்கள் கட்டுரைகள், கடிதங்கள், பாமாலைகள் அனுப்பிக்கொண்டிருக்கிறுர்கள். அவற்றை நாம் அன்புடனேற்று உசிதம்போல் வெளியிட்டுப் பயன்படுத்திவருகின்றேம். ஆயினும் இடையிடையே எம்மைத் திடுக்கிடச் செய்யக்கூடிய விதமாகச் சில அன்பர்கள் இடியேறுண்டாக்குவது மிகவும் துக்கத்தைத் தருகின்றது. ஒருவர் கட்டுரையை அனுப்பிவிட்டு அது ஏன் வெளிவரவில்லையெனக் காரணங் கேட்கிறுர். இன்னெருவர் எனது கட்டுரை வெளிவராவிடில் உயிரை மாய்த்து விடுவேனெனப் பயங்காட்டுகின்றுர். மற்றொருவர் விஷயமெழுதுவதற்காகவே நான் பத்திரிகையை ஆதரிக்க முன்வந்தவன், ஆகையால் எனது விஷயத்தைத் தாமதமின்றி வெளியிட வேண்டுமென்கிறுர். அடுத்தவர் எனது பிள்ளை இறந்ததைப் பற்றிப் பத்திரிகையில் போடாவிடில் பத்திரிகை எடுக்கமாட்டேனெனக் கூறுகிறுர். நான் ஆதரிக்கும் அபேட்சகரின் குறைக்ள் உங்கள் பத்திரிகையில் வெளிவருவதால் "பத்திரிகை வேண்டாம்" என்றும் ஒருவர் எழுதுகிறுர். இவை யொருபுறமிருக்க, ஈழகேசரிக்கு வாழ்த்துப்பா எழுதுவோரின் தொல்லையே எம்மால் சகிக்க முடியவில்லை. வாயால் வாழ்த்திவிட்டால் பத்திரிகை நடக்குமென்பது இவர்கள் கருத்தாயின், அது மிகவும் நன்றுதான். இனியாவது இவ் வாழ்த்துக்களைத் தங்களளவில் வைத்துக்கொள்ளுமாறு மிகப் பணிவாக வேண்டிக்கொள்ளுகிறேன். உண்மையைக் குழிவெட்டிப் புதைத்திருக்கும் இன்றையயாழ்ப்பாணத்தில், உண்மை, வாய்மை, சத்தியம் என்னும் பதங்கள் அகராதியிலிருந்து நீக்கப்பட வேண்டியிருக்கும் இக்காலத்தில் கடிதர்கள்கட்டுரையாளர்கள்இவ்வாறு கூறுவது புதினமல்லவென்பதே எமது தாழ்மையான அபிப்பிராயம்.

## அங்கும்—இங்கும்.

புதுவருடப் பட்ட மழையும் பெய்தது. கொழும்பிற்றுன் ஒரு பாட்டமாம். மற்றவிடங்களில் சிறுதுளிகள் தானும் விழவில்லை யாழ்ப்பாணத்தில் வழக்கத்தில்பட்டமழை அதிகம் பெய்வது கிடையாது. பட்டமழையில் ஒருபாகம் இன்னும் சிலநாளில் பெய்யுமெனவும் சிலர் பேசிக்கொள்ளுகின்றனர். அப்பொழுதாவது யாழ்ப்பாணத்திலும் சில துளிகள் விழாதோ வெனச் சிலர் கேட்கின்றனர்.

* * *

தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேலிருக்கின்றன. அபேட்சகர்கள் பிரேரணைத் திருநாள் வரையும் வந்துகொண்டேயிருப்பர். எனது பகுதியில் தேர்தற்சண்டையின்று "நான்……………………அனுப்பப்படுவேன். எனது தோழருக்கு அப்பகுதியிற் சென்று உதவி புரியவேண்டும்" என்பார்க்கெல்லாம் இடியேறுயிற்று. ஒன்றிற்கு இரண்டு தோற்றம். எக்கமுறினும் நோக்கத்தோடுதான் வேலை செய்யவேண்டும்.

* * *

சிலர் கட்டின கோட்டைகள் யாவும் துயிலுறுங்கால் சத்துராதிகள் இடித்துவிட்டனரே. இனித் திருப்பிக் கட்டுவதென்பது இலகுவோ? சத்துராதிகளுடன் நேரே சண்டைசெய்து அவர்கள் கோட்டைகளை உடைப்பதுதான் ஏற்றவழி. செம்மறியாட்டைநம்பி இடையர்களுக்கு உதவிசெய்வதா? இடையர் நட்பும் இடையில் வந்ததே. ஆடுகளும் தங்களெண்ணப்படி. இடையனும் இடையிற்றுன். பேஷ்! * *

கொடாதிருந்த பாக்கிகள் யாவும் கொடுக்கப்படாது இனி இருப்பதெப்படி? இம்முறை கடன்சொல்லவுமியலாது. கடன்கொடுப்பாருங் கிடையாது விலைக்குப் பெறுவோர் அநேகர் உளர். சாமன்கள் சிலவே. விலையேறுதிருக்குமா? எவ்விலை கொடுத்தும் வேண்டலாந்தான். பின் யோசனையிற்றுன் எல்லாம் வெளிக்கும். அரும் பெருந்தார்மிகங்கள் அலையாதிருப்பின் ஒருநட்டமுமில்லை. ஆக்கியோன் அழி

# இந்தியச் செய்திகள்.

### ரீடிங் பிரபு

இர்வின் பிரபு நியமிக்கப்படுமுன் இந்தியாவின் இராசப் பிரதிநிதியாக விருந்த ரீடிங் பிரபு சடுதியாகச் சுவாசப்பையில் ஏற்பட்ட குளிர் காரணமாக இறந்துவிட்டாரெனக் கேட்டு விசனமடைந்தோம். இறக்கும்போது இவருக்கு வயது எழுபத்தைந்து. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவிகள் வகித்தவர். இராசப் பிரதிநிதியாக வருமுன் இங்கிலாந்தின் பிரதம நீதிபதியாகவிருந்தவர். இராசப் பிரதிநிதியாக விருக்குங்கால் தமது கடமையை மிகத் திடமாக நின்று இயற்றினர். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதையடக்க முயன்றனர். மகாத்மா காந்தியடிகளும் இவரது காலத்திலேயே ஆறு வருடச் சிறைவாசம் பெற்றனர். இந்தியாவினின்று சென்றபின்னரும் இந்திய விஷயங்களில் அக்கறைகாட்டி வந்தனர். வட்டமேசைக் கூட்டங்களில் இந்தியர்க்குச் சுதந்தரங்கள் வழங்க வேண்டுமென வாதாடினர். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் சிலகாலம் அந்நியநாட்டு மந்திரியாராகவுமிருந்தனர்.

### மகாத்மாவின் சுகவீனம்

சென்ற சிலநாட்களாக நோய்வாய்ப்பட்டுச் சிறிது சௌக்கியமடைந்து வந்தவராகும் மகாத்மா காந்தியடிகள் இப்போது மறுபடியும் சுகவீனமுடையராக இருக்கிறாராம். இப்போது இவரைவருத்தும்நோய் வயிற்றோட்டமாம். இவர் மிகப்பெலவீனமுடையராகக் காணப்படுகின்றனர். நாகபுரியில் நடந்த தாராளக் கட்சியினர் மகாநாட்டிற்குச்சென்றிருந்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும், T. R. வெங்கடராம சாஸ்திரியாரும் இப்போது வார்டா சென்று மகாத்மாவைச் சந்தித்துப் பேசியுள்ளாரெனக் கூறப்படுகிறது.

### பாபு இராஜேந்திரப்பிரசாத்

காங்கிரஸ் பொன்விழாவின்பொருட்டு இப்போது பம்பாயில் வசிக்கும் பாபு இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் சிறிது தேக அசௌக்கியமடைந்துள்ளாரென்றும் அதுகாரணமாகப் பகிரங்க கூட்டங்களில் சமுகமளிப்பதை நிறுத்தியுள்ளாரென்றும் கூறப்படுகிறது.

### பொன்விழா

காங்கிரஸ்சபையின் பொன்விழா இந்தியாவெங்கணும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தேசீயக்கொடி தூக்கவிடல், ஊர்வலங்கள், பகிரங்க கூட்டங்கள் என்பன பொதுவாக எல்லா இடங்களிலும் மிக ஆரவாரத்துடன் நடந்தேறின. பம்பாயில் நடந்த கொண்டாட்டமே மிகப் பிரமாதமானதாகக் கூறப்படுகிறது. முதன்முதல் அதாவது இற்றைக்கு 50 வருடத்துக்குமுன் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது பம்பாயிலேயே. அங்கே முதற்கூட்டங்கூடிய மண்டபத்திலேயே பொன்விழாவும் கொண்டாடப்பட்டது. அங்கே சுதேசியப் பொருட்காட்சியும் நடைபெற்றது. சீவந்தராக விருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் யாவரும் அங்கேவந்து குழுமினர். ஐம்பதினாயிரம்பேர் கொண்ட ஊர்வலமொன்று இவ்விடத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டதாம். தேசீயக்கொடி பாபு இராஜேந்திரப்பிரசாத் அவர்களால் உயர்த்தப்பட்டது. ஸ்ரீமதி சரோஜினிதேவி பொதுக்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்து அரிய பிரசங்கஞ்செய்தனர் பண்டிதர் மாளவியா பொன்விழாவின் ஞாபகச் சிலையைத் திறந்து வைத்தனர்.

### ஸ்ரீமதி கமலா நேரு

ஜர்மனியில் நோயால் பீடிக்கப்பட்டு வருந்தும் ஸ்ரீமதி கமலாநேருவின் ஆரோக்கியம் சிலநாளாகக் கவலைக்கிடமாக இருந்ததென்றும் இப்போது சிறிது சாந்தியடைந்து வருகிறதென்றும் கூறப்படுகிறது. சிறிது உணவினை இவ்வம்மையார் அருந்துகின்றனராம். எனினும் இன்னுந்திருப்தியாக நோய்படியாதிருப்பதுபற்றி யாவர்க்கும் கவலையுண்டாபிருக்கிறதாம்.

### இந்து மகாசபை

இச்சபையின் வருடாந்தக் கூட்டம் பூனா நகரில் ஸ்ரீமான் பண்டிதர் மாளவியாவின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அநேக இந்துசமயத் தலைவர்கள் சமுகமளித்தனர். புதிய அரசியற்றிட்டம் ஏற்றதல்லவென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசினர் பிரித்தாளும் முறையை அதிகம் கையாளுகின்றனரென்றும் ஆகையாற்றான் உதவாத வகுப்புவாதத் தீர்ப்பினை (Communalaward) முதன் மந்திரி வழங்கினரென்றும் பாய் பரமானந்தா என்பவர் கூறினர். தீண்டாமை நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. கலப்பு விவாகம், முதலியனவற்றிற்கு இடங்கொடுக்கப்படலாமென்றதைக் குறித்துக் கொண்டுவந்த தீர்மானம் அங்கீகரிக்கப்படவில்லை.

### அடுத்த காங்கிரஸ் மகாசபை

லட்சுமணபுரியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் பங்குனிமாதம் 23, 24, 25 திகதிகளில் நடத்தப்படுமென பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரிய நிர்வாக சபையினர் தீர்மானித்துள்ளார். காங்கிரஸ் தலைவர்கள் தெரிபப்படும் திகதி 25-ந் திகதியெனவும் தீர்மானிக்கப்பட்டுளது. அன்று எல்லா மாகாணங்களிலும் உள்ள காங்கிரஸ் சபையினர் கூடி காங்கிரஸ் தலைவரைத் தெரிவுசெய்வார்கள்.

# ஆட்டம்-ஓட்டம் - - - - அலைவு-உலைவு

(“ஜனார்த்தனன்”)

ஜனவரி மாதம் 15:ந் திகதி பிரேரணைத் திருநாளாம்; அன்றைக்கு மத்தியானத்துக்கும், மாலை ஒரு மணிக்குமிடையில் பல “பூச்சாண்டிக் காரரின்” வண்டவாளங்களும், படாடோபங்களும் வெளிப்பட்டுவிடும். அபேட்சகர்களாய் முன்வருவதாக இதுகாலை பயமுறுத்தி விளம்பரப்படுத்துபவர்களும், கணக்கில்லாத தாட்டுமேட்டுச்செய்பவர்களுமான சிலர் அன்றையதினம் ஓடி மறைந்து விடவுங்கூடும். அதை எவராவது தடைசெய்யவும் முடியாது!

* * *

இப்போது அபேட்சகர்களுக்குப் பற்கள் கொடுகத் தொடங்கியிருக்கிறது. பிரேரணைத் திருநாள் நிறைவேறிய பின்னர், பலருக்குக் கூதலும் குளிரும் நீங்கிக் கொடுகலும் மாறிவிடும். அதன் பின்பு, தேர்தல் வெப்பத்தால் ஒருபோது அவர்களுக்குச் சுரம்உண்டாகலாம். அதிகச்சுரத்தால் சிலர் மூர்ச்சையாவதும் உண்டு.

* * *

தேர்தல் என்றால் அபேட்சகர்களுக்கு எவ்வளவு தேக அலைவு; எவ்வளவு பணத்தொலைவு! அந்தவிதமாக மிகுந்த மலைவு கொண்டிருக்கும் “ஆசாமி”களுக்கு அரசாங்கசபை அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, தேகசிரமம், பணச்செலவு எதுவுமின்றி வெகு சுலபமானதொரு சந்தர்ப்பம் கிடைக்கக் கூடுமானல், அவர்களுக்கு இருக்கவேண்டிய ஆனந்தத்துக்கு அளவுண்டோ?

* * *

போட்டியின்றிப் பதவி பெறக் கூடியதாயிருந்தால், அதைவிடப் பெரிய கௌரவம் வேறென்ன?

* * *

போட்டியில்லாது ஒருவர் தெரிவுபெற்றால், அந்தப்பிரிவில் அவரைத் தவிர வேறொருவரும் அரசாங்கசபை அங்கத்தவராவதற்குத் தகுதியில்லை என்பது கருத்தாகுமா? பலர் உண்மையான தகுதியுடையவர்களாயும், பொதுஜன சேவை மேலிட்டவர்களாயும் இருந்தாலும், பணமற்ற பாவத்தினால் அவர்கள் அரசாங்கசபையைக் கனவிலும் நினைக்கமுடியா திருக்கின்றனர். ஒருவர் அதிக பணத்தைச் செலவுசெய்தால் அவர் தடையில்லாமல் அரசாங்கசபைப் பதவியைப் பெறுவர் என்பதற்குச் சோதிடம் கேட்க வேண்டியதில்லை.

* * *

திருநெல்வேலித் தொழிலாகக்கொண்ட சிலர் மாவிட்டபுரம, நல்லூர்க் கந்தசுவாமி கோயில்களின் திருவிழாக் காலத்தில் தங்களுடைய கடன்களைத் தீர்ப்பதாகக் கடன்காரர்களுக்குத் தவணை குறிப்பார்களாம். திருவிழாக்காலம் முடிந்தபின் தவணை கூறியபடி கடன்களைத் தீர்க்கவும் தவறமாட்டார்களாம். அதனால் வருத்தமடைவது சுயபலமற்ல அபலைகளான சில பெண்களும், சில குழந்தைகளின் பெற்றாருமேயாவர்.

* * *

அதைப்போலவே, சில நாட்டாண்மைகளும், நாடோடிப் பேர்வழிகளும் அரசாங்கசபைத் தேர்தலை எண்ணித் தங்களுடைய கடன்காரர்களுக்குத் தவணை வைத்திருப்பார்கள். தேர்தல் வந்தும், தேர்தலால் அவர்களுக்கு வழமையாக உண்டாகும் “வெந்த வீட்டுப் பிடுங்குதல்” இல்லாது போகுமானல் அவர்கள் அடையவேண்டிய ஏமாற்றம் இம்மாத்திரமா? அந்தக் குட்டிச்சாத்தான்களுடைய கையிலகப்படாது தப்பிக்கொண்ட அபேட்சகர், வேட்டை நாய்களுக்குத் தப்பியோடி மறைந்து பதுங்கியிருக்கும் முயலைப்போலாகாரோ?

* * *

போட்டியில்லாதிருந்தால் ஒரு அபேட்சகர் ஊரவர்களையோ, ஊரதிகாரிகளையோ கண்டு கதைப்பதற்கும், அவர்களுக்குக் ‘கும்பிடு’ போடுவதற்கும் இருக்கும் அவசியமென்ன? போட்டியிருந்தால் ஊரவர்கள் பலருக்கு மிகுந்த மனஆறுதலாக இருக்குமென்று சொல்லவும் வேண்டுமா? ஒருவரின்பின் மற்றொருவராய் அபேட்சகர்கள் மாறிமாறி வீடுவீடாய்ச் செல்வது ஊரவர்களுக்குப் பெரிய மதிப்பாகாதா? அபேட்சகரென்றால் சாதாரணமான பேர்வழிகளா? பரிஸ்டர்களும் பீ. ஏ., பீ. எல். களும் சில்லறைப் பேர்களா?

ப்பதால் ஒரு கேடும்வராது. ஒருவராக்க ஒருவர் அழிக்க மற்றையோர் பார்க்க எல்லாம் நூதனமாகின்றது. சோகத்தையும் தருகின்றது.

* * *

தெரிவு செய்யப்படின் இவர் செய்யக்கூடியது பிரமாதமான விஷயங்களாயின், பின் ஏன் பின் வாங்குவான்? இலங்கையிலுள்ள இருபெருஞ்சாதியினர்க்குமிடையில் ஒற்றுமையைநாட்டுந்தகமையாருக்குளது என்பதும் நோக்கப்படவேண்டும். வீணுக்கும் விறுதாவுக்குமாக ஆட்களைத் தெரிவதாயின் எல்லாம் நஷ்டமாகவே முடியும். * * *

பணத்துடன் வெளிக்கிளம்பும் அபேட்சகர்க்குத் தான் இக்காலத்தில் ஜெயமென்று இதுவரையும்பேசிவந்ததெல்லாம் முற்றாக உண்மையாகாது. பணமின்றியும் சிலர் நூதன ஜாலங்களைக் கையாண்டு ஊரவர்களை வசீகரிக்கின்றாராம். வீடுவீடாகச் சென்று வார்த்தையாடி நட்பினைப் பெறுவார் சிலர். நூற்றுக்குமேல் கும்பிடுபோட்டுத் தலையசைத்து மகிழச் செய்வார் சிலர். * *

இந்தியாவில் காங்கிரஸ்சபையின் பொன்விழா கொண்டாடப்படுகிறது. இலங்கையில் ஓர் காங்கிரஸ் சபை காலியில் கூட்டி இரகஸ்யம் பேசுகிறார் சிங்களத்தலைவர்கள் சிலர். இலங்கை காங்கிரஸ்சபை ஆரம்பித்துப் பதினைந்துவருடங்களாகின்றன. எல்லாவகுப்பினரும் ஒற்றுமையடைந்து உழைத்திருப்பின் எவ்வளவு திருத்தங்களை இதுவரையில் இலங்கைவாசிகள் அடைந்திருக்கலாம். கூடிய தொகையினராகும் சிங்களர் விட்டுக்கொடுக்க விருப்பமில்லாதவரையில் ஒற்றுமை எப்படித்தான் வரும்? அரசினரும் சிங்களரது காங்கிரஸ் சபைக்கு உரிய மரியாதையை யறியார்.

## “ஈழகேசரி” அறிக்கை.

எதிரே வரும் போங்கல் திருநாளை முன்னிட்டு அடுத்தவாரம் (12–1–36) “ஈழகேசரி” வெளிவரா தென்பதைத் தெருவித்துக்கோள்ளுகின்றேம்.

## ஸ்ரீமத் தா. பொன்னம்பலபிள்ளை

பலவருடங்களாய்த் திருவாங்கூர் சமஸ்தானத்தில் உயர்ந்த உத்தியோகம் வகித்துப் பெரும்புகழ் படைத்தவரான ஸ்ரீமத் தா. பொன்னம்பலபிள்ளையவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிவசைலம் என்னுமிடத்தில் சென்றசனிக்கிழமை (28-12.35) சிவபதமடைந்துவிட்டனரெனக் கேட்டுப் பெருந் துயரெய்தினும். இவர் யாழ்ப்பாணத்தைத் தனது ஜெனனவூராகவுடையராயினும் உபகாரச் சம்பளம் பெற்ற பின்னும் இந்தியாவில் வாழ்ந்து சமயானுட்டானங்களைக் கைவிடாது உதாரணமான வாழ்க்கையை நடத்தி வந்தனர். திருவாங்கூரில் முன் பிரதம நீதிபதியாக விருந்த ஸ்ரீமான். தா. செல்லப்பாபிள்ளை B. A. B. L. இவரது மூத்தசகோதரர். மிகக் கீர்த்திபெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். தமிழ்ப்பாஷையிலும் சைவசமய சாஸ்திரங்களிலும் பரந்த அறிவுடையவர். தேசாபிமானிப் பத்திராதிபராகும் ஸ்ரீமான் தா.பொ. மாசிலாமணியவர்கள் இவரதுபுத்திரராவர். இவர் பிரிவால் துயருறும் பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## ஓர் பிராமணோத்தமரின் பிரிவு.

சுன்னாகத்து மயிலணிக் கந்தசுவாமி கோயில் பூசகரும், சிவபக்தி மிக்கவருமான பிரமஸ்ரீ கார்த்திகேசக் குருக்கள் சீனிவாசகக் குருக்களவர்கள் சென்ற 25-12-35 புதன்கிழமை காலை காத்திராதுண்டான நோயினால் சிவபதமடைந்தனர் என அறிந்து கவல்கின்றோம். குருக்களவர்கள் இறக்கும்போது வயது 78. இவருக்கு இரு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் உளர். இவரது மூத்த புதல்வராகும் பிரமஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்களவர்கள் மயிலணிக்கந்தசுவாமி கோயில் பூசகராய்த் தொண்டுசெய்து வருகின்றார்கள். இரண்டாவது புதல்வராகும் பிரமஸ்ரீ கார்த்திகேய ஐயரவர்கள், தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை ஆசிரியராகவும், இலங்கை ஐக்கியசங்கப் பகுதியில், வலிவடக்குப் பகுதிக் கௌரவ மேற்பார்வைகாரராகவும் கடமைபார்த்து வருகிறார்கள். ஷை குருக்களவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

## மேலைத்தெல்லி இந்துவாலிபர் சங்க 5-ம் ஆண்டு நிறைவுவிழா.

இவ்விழா நிகழும் யுவஆண்டு மார்கழித் திங்கள் கசூ-ம் நாள் (29-12-35) ஞாயிறுவாரம் மாலை 6-மணி தொடக்கமாக விளிசிட்டிச் சிவஞானவித்தியாசாலை மண்டபத்தில் திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் அவைத்தலைமையின் கீழ் நிகழ்ந்தது.

ஆரம்பத்தில அவைத்தலைவர் வாத்தியகோஷத்தோடு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். கடவுள் வணக்கத்தோடு கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் வந்தனோபசாரமாகப் பூமாலையும், பாமாலையும் புனையப் பெற்றபின் முன்னுரை உரைத்தனர். காரியதரிசியும் தனாதிகாரியும் தத்தம் அறிக்கைகளை அறிவித்தனர். புராதனவழக்கங்களிற் சிறந்த புராணபடனம் இருமாணவர்களால் எவரும் மெச்சும்படி நடாத்தப்பட்டது. யாவர் மனத்திலுங் கிளர்ச்சியேற்படுமாறு "யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்கள்" என்ற விஷயத்தையிட்டு திருவாளர். கு. மூத்துக்குமாரசாமிப் பிள்ளை B. A. அவர்கள் ஓர் பரந்த சிறந்த சொற்பொழிவு ஆற்றினர். பின் தலைவர் அவர்கள் "சமய தீட்சை" என்ற விஷயத்தையிட்டு ஓர் சமயோசிதசொற்பொழிவு செய்தனர்.

பிரம்மஸ்ரீ C. S.கணபதி ஐயர் அவர்களும், பிரம்மஸ்ரீ. K. S. இராமச்சந்திரஐயர் அவர்களும் தம்மினிய கீதங்களினாலே இன்புறச் செய்தனர். பாடசாலை மாணவர்களினாலும் இடையிடையே கீதங்கள் ஓதப்பட்டன. திருவாளர். K. S. கனகராயர் அவர்கள் குறிப்புரை கூறி, தலைவர், பிரசாரகர், சபையோர், ஆதியோர்க்கு நன்றியறிதலுங் கூறினர். கூட்டம் 9-30 மணியளவில் தேவார பாராயணத்தோடு நிறைவெய்தியது.

கடித.

## கொக்குவில் மேற்கு பொதுநலவிருத்திச் சங்கம்

இச்சங்கத்தின் ஆதரவில் மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தில் நிகழும் யுவவருஷம் மார்கழி மாதம் ககூவ (3-1-36) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் பிரம்மஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்கள் தலைமையில் ஒரு பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான சனங்கள் குழுமியிருந்தனர். பூசையும் திருமுறை ஓதலும் நிகழ்ந்தபின் சபைத்தலைவர் முன்னுரை மொழிந்து 'ஒன்றுபட்டால் நன்றுபடும்' என்னும் பொருள் பற்றி சபையோர் குதூகலம் கொள்ளுமாறு தமது நூலாராய்ச்சிவன்மை தோன்றப் பல உதாரணங்களைக் காட்டி பொதுநலத்தொண்டுசெய்ய விரும்பியுள்ள இச்சங்கமானது திருக்குறளை மிகுந்த சிரத்தையோடும் படித்து அதன் சிறந்த பொருள்களை உணரவேண்டும் என்றும் எல்லா அவயவங்களும் ஒன்றுபட்டிருப்பதாலேயே உடம்பு நலன்களை அநுபவிப்பது போல் மனமெய் என்னும் முக்கரணங்களும் ஒன்றுபட்டு இப்பகுதியில் வசிக்கின்ற எல்லோரும் இச்சங்கத்தில் ஒத்து உழைப்பார்களானல் எல்லா நலன்களையும் பெறலாமென்றும் அநேக செய்யுட்களை உதாரணமாகக் காட்டி சொற்பொழிவு ஆற்றினர்கள்.

ஈழகேசரிப் பத்திராதிபர் ஆகிய திருவாளர் நா. பொன்னையா அவர்கள் 'இன்ப வாழ்க்கை' என்னும் பொருள்பற்றித் தேச இயல்பைக்கொண்டும் தமது அனுபவத்தோடு ஒட்டியும் தாயுமானூர் முதலியோர் வாக்குகளையும் காட்டிச் சபையோர் இன்பமடையும்படியாகச் சொற்பொழிவு ஆற்றினர்கள்.

அவ்வூர் தமிழாசிரியர் திருவாளர் மூ. நடராசா அவர்கள் 'சங்கத்தின் நிலைமை' என்னும் பொருள்பற்றி உலகிற் பல சங்கங்கள் தோன்றி நிலைபெறாமற் போவதற்குக் காரணம் அவ்வப்பகுதியிலுள்ள மக்களின் தேவைகளை அறிந்து அவைகளை நிறைவேற்ற முயற்சி செய்யாமையே என்றும், இச்சங்கமானது சொற்பொழிவாற்றுதல் அவ்வளவில் நின்றுவிடாது தேவைகளை அறிந்து அவைகளைப் பெறுதற்குத் தொண்டு செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்பதையும் பல உதாரணங்கள் காட்டி சொற்பொழிவாற்றினர்கள்.

சங்கத்தலைவர் இக்கிராமத்துக்குப் பல ஆண்டுகளாக விதானையார் ஒருவர் நியமிக்கபட்டு வந்திருக்கிறதென்றும் இப்போது சில ஆண்டுகளாக அந்த உரிமை இக்கிராமத்துக்குக் கிடைக்கப்பெறாததால் பொதுசனங்கள் மிகு அனுதாபங் கொண்டிருக்கின்றனர் என்றும் அதை நிவிர்த்திசெய்வதற்குச் சங்கம் முயற்சி செய்யவேண்டிய தவசியமென்றும் எடுத்துக்கூறி இதனை எசண்டுத்துரை அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டுமென்று கொண்டுவந்த பிரேரணை திரு. க. மார்க்கண்டு அவர்களால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசன சம்மதமாக நிறைவேறியது.

காரியதரிசி அவர்கள் தலைவருக்கும் பிரசாரகருக்கும் சபையோருக்கும் நன்றி கூறியதும் மங்கலவாழ்த்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

குறிப்பு :இச்சங்கத்தாரால் ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் பிற்பகல் 4 மணிமுதல் திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரம் பிரசங்கஞ்செய்யப்பட்டு வருகிறது. (கடிதம்)

## கலம்பகம்

ஷர்லி டெம்பின் என்னும் 6வயதுடைய சிறுமி படக்காட்சியில் நடிப்பதன் மூலம் ஹோலிவுட் என்னுமிடத்தில் ஒரு வாரத்திற்கு 500 பவுண் சம்பளம் பெறுகிறாள். இச்சிறுமி யப்பானில் நடித்த "பிரகாசமான கண்கள்" என்னும் படத்தைப் பார்ப்பதற்கு முதல்நாளே 12, 000 பேர் வரையிற் சென்றிருந்தார்களாம். o

"உலகிலுள்ள யாவரையும் விட இந்திய பெண்களே அழகுவாய்ந்தவர்கள்" எனப் பிரசாஉற்பத்திக் கட்டுப்பாட்டு இயக்கத்தலைவியான ஸ்ரீமதி மாக்கிறெற்சாங்கர் என்பவர் கூறுகின்றாராம். o

நாகோரி வழக்குக் கைதியாக லட்சுமணபுரிச்சிறையிலிருக்கும் திரு. ஜோகேஷ் சந்திசட்டர்சி என்பவர் சிலஉரிமைகள் பெறுவதற்க்காக 45நாட்களாக உண்ணாவிரதமிருந்து வருகிறார். அரசினர் பலவந்தமாக அவரது மூக்கினால் உணவைச் செலுத்திவருகின்றனராம். o o

றங்கூனில் தான்காதலித்த பெண்ணையும் அவளை விவாகஞ்செய்ய விடாது தடையாயிருந்த வேறு மூவரையுங் கொலைசெய்த யுபான்திடீக்ஸ் என்னும் பொங்கிக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பெற்றதாம். o o o

சோம்பேறிகளாக இருப்பவர்களை மிகவும் சுறுசுறுப்படையச் செய்வதற்கு வெர்சீனியாவிலுள்ள இருவிஞ்ஞான சாஸ்திரிகள் ஒருமருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதற்காக ராக்பெல்லர் கம்பெனியார் 3000 பவுண் நன்கொடையளித்திருக்கின்றனராம். o o

சமீபத்தில் லண்டனில் நடைபெற்றசைக்கிள் காட்சியில், பட்டுகளால் தயாரிக்கப்பட்டடயர்கள் போட்டனவும், மிகவும் கனங்குறைந்தனவுமான சைக்கிள்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். o o

களனியில் நடைபெறும் பெரஹராக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு இந்தமீ 5-7 ம் தேதிகளில் புகைரத மலிவுதுண்டுகள் வழங்கப்படுமாம். o o

லண்டன் பாராளுமன்ற அங்கத்தினராகிய சேர். அயன்மாக்பர்ஸன் என்பவர் சுகவீனங்காரணமாகத் தனது பதவியிலிருந்து விலகுவதால், அப்பதவிக்குத் திரு. மால்சம் மக்டொனல்ட் என்பவர் அபேட்சகாக நிற்பாராம். o o

பிரிட்டன் தங்கநிர்ணயத்தைக் கைவிட்டதைப்பற்றி ரெலிபோன் மூலம் அமெரிக்காவுக்கு அறிவிப்பதற்கு 200 பவுண் செலவாயிற்றாம். o o

ஆகாயத்திலிருந்து விழும்ஒவ்வொரு மழைத்துளியிலும் மின்சாரசக்தியிருக்கிறதென விஞ்ஞான நிபுணர்கள் தெரிவிக்கின்றனராம். o o o

பிரிட்டனில் டைசான்ட் பிரபுவும், கர்சன்பிரபுவும் மரணமடைந்ததை முன்னிட்டுப் பூதல்வரியாக 10 லட்சம் பவுண் அரசினருக்குக்கிடைத்ததாம். o

பொலனறுவாவிலுள்ள புத்தபகவான் விக்கிரகத்தைப் புகைப்படம் எடுத்தவர்கள்மீது கிறிமினல் வழக்குத்தொடர இடமில்லையெனச் சட்டத்தலைவர் தெரிவித்துள்ளாராம். o o o

இலங்கையில் மலேரியாக்காய்சல் மீண்டும் பரவுவதாகவும் இதுகாரணமாகக் கொழும்புப் பெரியஆஸ்பத்திரிக்குத் தினந்தோறும் 100 பேருக்கு அதிகமான நோயாளர் செல்கின்றனரென்றும் சொல்லப்படுகிறது. o o o

சென்றவியாழக்கிழமை தங்காலைக் குடாக்கடலில் மீன்பிடிக்கச் சென்றமூன்று பேர் ஏறிச்சென்ற வள்ளத்தின் நங்கூரக்கல்லை மகாமீன் ஒன்று விழுங்கியது. மீன்பிடிகாரர் அந்தமீனைக்கரையிலெடுத்துக் கொன்றனராம். o o

காசியிலுள்ள விசேஷகுடும்பத்தைச் சேர்ந்த சாந்திதேவி என்னும் பெண்ணைக் கடத்திச் சென்ற மூன்று வங்காளவாலியர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனராம். o o o

அமிர்தபுரி ஆச்சிரமத்தைச் சேர்ந்த பண்டித விவேகானந்தா என்பவர் உயிரோடு பூமிக்குள் புதைக்க ஒப்புக்கொண்டு அவ்விதமே செய்யப்பெற்றார். புதைத்த 12மணி நேரத்தின்பின் வெளியே எடுத்தனர். அவர் வெளியே எடுத்த 10நிமிஷத்திற்குள் அறிவுவரப்பெற்றாராம்.

o o o

பிரிட்டனிலுள்ள பிரதானமான தெருக்களுக்கு விளக்கேற்றுவதற்காக 90 லட்சம் பவுண் மூலதனம் விடப்பட்டிருக்கிறதாம். o o o

ஹோல்ஸ் டெயின் என்னுமிடத்தில் இறந்தபூனை யொன்றின் வயிற்றுக்குள் 11 உயிருள்ள தவளைகள் காணப்பட்டனவாம். o o o o

இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ்செய்த இலங்கைக் கைத்தொழில்—வியாபார மந்திரியாகிய திரு. பெரிசுந்தரம் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வந்துசேர்ந்தாராம். o o

கொழும்பு "டெயிலிநியூஸ்" பத்திரிகையின் அதிகாரிகளாற் சேகரிக்கப்பட்டுவரும் அபிசினியயுத்தச் சகாயநிதிக்கு 12974 ரூபா வரையில் சேர்ந்திருக்கிறதாம். o o o o

இங்கிலாந்திலுள்ள புத்தர் அங்குள்ள சனங்களைத் தங்கள் சமயத்திற் சேர்ப்பதற்கு முயற்சிசெய்து வருகின்றனர். அவர்கள் லண்டனில் ஒருபுத்த ஆலயம் கட்டுவதற்கும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

o o o

தற்போது நடைபெறும் யுத்தத்தில் இற்றலிக்கு நாளொன்றுக்கு 2கோடி லயர்நாணயம் செலவாகின்றதாம். o

ஜெர்மனியிலுள்ள பேடன் என்னுமிடத்தில் சென்ற 30-ம் திகதி பலமுறை பூமியதிர்ச்சி ஏற்பட்டதாம். அதிகம் சேதம்ஏற்படவில்லையாம். o

சென்றமாசம் 29-ந் தேதி பம்பாயைச்சேர்ந்த சோலாப்பூரில் 25முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் சென்ற படகொன்று நீரில் கவிழ்ந்தது. எழுபேர் உயிருடன் காப்பாற்றப்பட்டனர். 12 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டது. ஏனையவர்களின் பிரேதங்கள் தேடப்படுகின்றனவாம். o o o o

சமீபத்தில் டில்லியில் தனது முந்திய பிறப்பு வரலாற்றைச் சொல்லிய ஒன்பது வயதுடைய சாந்திதேவி என்னும் சிறுமியும், அவளுடைய முந்திய ஜென்மகணவன் என்று சொல்லப்படும் பண்டிதர் கேதார் நாத்செளப்பு என்பவரும், அவர்களுடைய 10 வயதுடைய புத்திரனும், பண்டிதரின் சகோதரர் ஒருவரும் பேசும்படக்காட்சியில் நடிப்பார்களாம்.

o o o

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற கால்பந்தாட்டவிளையாட்டுகளில் 250 பேர் மரணமடைந்தனராம். o o

தென்அமெரிக்காவிலுள்ள சில்லிபிரதேசத்தில் பிறிட்டிஷ்படங்களில் நடைபெறும் சம்பாஷணையை அறிந்து கொள்வதற்காக அங்குள்ள சனங்கள் ஆங்கிலங்கற்க ஆரம்பித்திருக்கின்றனராம்.

## திரு. வை துரைசுவாமி B. A. (Advocate) அவர்களுக்கு அழைப்புக்கூட்டம்.

நிகழும் யுவவருஷம் மார்கழி மாதம் கருவ (30-12-35) திங்கட்கிழமை மாலை 6-மணியளவில் அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் வாணி விலாசசபை ஆதரவின் கீழ் ஒருபொதுக் கூட்டம் முடிக்குரிய நியாயதுரந்தரர் திருவாளர். வை. துரைசுவாமி B. A. அவர்களை ஊர்காவற்றுறைப் பகுதிக்கு அரசாங்கசபை அபேட்சகராக முன்வருமாறு கேட்கும் நோக்கத்துடன் கூடப்பெற்றது. அத்தருணம் அராலியின் பல பாகங்களில் வசிக்கும் பிரசைகள் அனைவரும் வட்டுக்கோட்டை தொல்புரம் மூளாய் முதலிய ஏனைய கிராமங்களிலுள்ள பிரபுக்களும் சமுகந் தந்தனர். மேற்படி கூட்டம் வட்டுக்கிழக்கு சைவாங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியர் கனம் மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களின் தலைமையின்கீழ் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. முதலாவதாக அவைத்தலைவர் தமது முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தையும் அபேட்சகரின் குணதிசயங்களையும் தெளிவுபடுத்தி விளக்கினர். இரண்டாவதாகக் கனம் சு. இரத்தினம் அவர்கள் திருவாளர். வை. துரைசுவாமியவர்களை ஊர்காவற்றுறைப் பகுதிக்கு அரசாங்கசபை அபேட்சகராகப் பிரேரிக்க திரு. நா. பாலசந்திரவிநாயகர் அவர்கள் அதனை அநுவதித்தனர். பின்பு க. சின்னத்துரை ஆசிரியரும் திரு மு. சதாசிவம் ஆசிரியரும் மேற்படி பிரேரணையை ஆதரித்துச் சிறந்த சொற்பொருவாற்றினர். அதன் பின்னர் அப்பிரேரணை சர்வாங்கீகாரம் பெற்றது. மூன்றாவதாக திருவாளர். வை. துரைசுவாமி அவர்கள் தன்னுடைய சம்மதத்தைச் சபையார் முன்னிலையில் விளக்கிக் காட்டினர். பின்பு அங்குவந்து குழுமியிருந்த வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், பிரபுக்கள் முதலியோரால் குறிப்புரைகள் கூறப்பெற்றன. அடுத்ததாக அவைத்தலைவர் தனது பின்னுரையை மிகவும் சிறப்பாக நடத்தினர். ஈற்றில் சபைத்தனாதிகாரி கனம் வி. நாகலிங்கமவர்கள் துதி கூறக் கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

—கடிதம்.

## மாத்தளை ஆங்கில தமிழ்ச் சைவ வித்தியாசாலை

### பெற்றோர் விழாவும், சமயபாடப் பரிசளிப்பும்

நிகழும் யுவ ஆண்டு மார்கழித் திங்கள் 6—ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு (21-12-35) ஷை வித்தியாசாலை விழாவைக் குறித்துச் சங்கீதவிழா ஆரம்பமாயது. பிரதம வித்தியாதரிசி பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களுக்கும், உதவி வித்தியாதரிசி ஸ்ரீமான் மு. நாகலிங்கம் அவர்களுக்கும் இரு மாணவிகளால் வந்தனோபசாரப் பாமாலை சூட்டியதோடமையாது பூமாலையும் சூட்டப்பட்டது. அதன்பின் பலவிதமான பாடல்கள், ஆடல்கள், நடித்தல், கும்மி கோலாட்டம், பாணி, ஆங்கிலப் பாடல், இராமாயணத்தின் ஓர் பாகம் நாடகம், என்பன கேட்போர் இன்புறும் விதம் விமரிசையாக நடந்தேறின. ஷை வித்தியாதரிசி தி சதாசிவ ஐயரவர்களால் சமயபாடத்திற் சித்தியடைந்த பிள்ளைகளின் தகுதிப்பத்திரமும் சபையார் உபகாரமாக அளித்த புத்தகங்களும் வழங்கப்பட்டு விசேட குறிப்புரையும் கூறப்பட்டது. ஈற்றில் அவ்வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. வி. வேலாயுதர் என்பவராற் சபையோர்க்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு நிறைவேறியது.

—கடித

**அறனேக்கி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப், புன்சொ லுரைப்பான் பொறை.**

# திருவண்ணமலைச்
# சைவ மங்கையர் மகாநாடு.

(29, 30, 31-12-35)

சைவசித்தாந்த மகா சமாஜ மூப்பதாவது ஆண்டு நிறைவுவிழாவின்போது
பண்டிதை அசலாம்பிகைஅம்மையார் நிகழ்த்திய
தலைமைப் பேருரை.

அறிவொழுக்கங்களிற் சிறந்த
அன்புமிக்க சகோதரிகளே!
சகோதரர்களே!!

இம்மங்கையர் மகாநாட்டில் இடம்பெறவும்; கடனாற்றவும் என்னைப் பணித்த இச்சைவசித்தாந்த மகா சமாசத் தலைவர் அவர்கட்கும், இதனை வலியுறுத்திய எனது மெய்யன்பர்களாகிய பேரறிஞர் குழாங்கட்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். உடல் நலம் இழந்து மூப்பும் நிமிர்ந்துள்ள யான் இக்கடமையை ஆற்றஇசைந்தது விரும்பத்தகுந்ததன்றென்பதை நன்குணர்வேன். எனினும், ஆண்பாற் சகோதர அறிஞர்கள் வேண்டுகோளை மறுப்பது பெண்மையியல்புக்கு அழகன்றென்னும் எனது இயற்கையுணர்ச்சியை மீறமுடியாமலே முன்வரத் துணிந்தேன். ஆதலின் என்னிடமிருந்து அரிய பெரிய கருத்துக்களை நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என நம்புகின்றேன்.

தக்கவைம் பூதமாம் தலங்கள் தம்முளே
அக்கினி யிலிங்கமாய் அமரர் போற்றிடும்
திக்கெலாம் புகழ்தரும் திருவண்ணமலை
யாகும்

இத்தலத்திற்குப் பதிகப்பாடிய ஞானசம்பந்தமூர்த்திகள் தொடக்கத்தில் சிவத்தோடுகூடிய சத்தியாகப் போற்றாமல் சக்தியோடுகூடிய சிவமாக உண்ணாமுலைஉமையாளொடும் உடனாகிய ஒருவன் என அருளிச்செய்துள்ளாராதலின்; அவ்வணிகையின் அருணாணம் கமழும் திருவடிமலர்களை நினையாது நினைந்து துதிக்கின்றேன்.

நடுநாடு

வடக்கே தொண்டைநாட்டின் எல்லைக்கும் மேற்கே சேரநாட்டின் எல்லைக்கும் தெற்கே சோழநாட்டின் எல்லைக்கும் நடுவில் கிழக்கே கடல்வளத் தோடமைந்திருத்தலால் நடுநாடென்பது தற்கால வழக்கில் நின்று நிலவுவதாகக் கொள்ளலாம். பெரியபுராண ஆட்சியில் சேதிநாடென்றும் திருமுனைப்பாடிநாடென்றும் காணப்படினும் நடுநாடென்பது நிலைபெறுவதற்கு வேறு சில காரணங்களும் ஊகித்தல் பொருத்தமுடையதாகும்.

சமயநடுநிலை: பண்டைக் காலந் தொட்டே இந்நாட்டில் சைவ வைணவப் போர்கள் கால்கொண்டதில்லை. இத்தகுதிபற்றியே "தெய்வம் ஒருவனே யென்றிங்குணர வல்லீரேல் இருவினைகள் ஐந்தும் அறும்" என்று அஞ்சா ஆண்மையுடன் அருளிச்செய்த ஒளவைப்பிராட்டியாரும் இந்நடுநாட்டை நேசித்துப் பற்பல அற்புதங்களை நிகழ்த்தியருளினர். இதன்றி, வைணவப் பெரியாராகிய வில்லிபுத்தூர் ஆழ்வாரும் நடுநாட்டை மகா பாரதத்தில்,

பாவரும் புகழிற் பேர்பெறு பனுவற்பாதிநாள் இரவில், மூவருமெய்தி மொழிவிளக்கேற்றி முடந்தனைப் பணிந்தநன்னாடு, தேவரு மறையும் இன்னமுங் காணாச் செஞ்சடைக் கடவுளைப்போற்றி, யாவருமதிக்கு மூவரிலிருவர் பிறந்த நாடிந்த நன்னாடு"

எனப் போற்றியிருப்பதொன்றே சமய நடுநிலைமைக்குத் தக்க சான்றாகும். மேலும் மூவாய மூர்த்தி என்னும் திருநாமத்தோடு மும்மூர்த்திகளுடைய அறிகுறிச்சின்னங்களும் ஒரே பிம்பத்தில் காட்சியளிக்கும் தேவநாதப் பெருமாள் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய திருவகீந்திரபுரமும் இந்நாட்டில் திகழ்கின்ற மாண்பு மற்றொரு சால்பாகும். இவைகளன்றிச் சைவசமயாசாரியர்களாகும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரில் திருநாவுக்கரசு சுவாமிகளையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் ஒருங்கே தோற்றுவித்த பெரும்புகழ் வாய்ந்ததென்னில் மேலும் சிறப்பு வேண்டுமோ?

பெண்ணின் பெருமையிற் சமரசம்:

"பத்தியும் ஞானமும் பாவையர்க்கேது" எனவும், "மாதர்க்கில்லைமருமமும் உறுதியும்" எனவும், "எண்ணறக்கற்று எழுத்தற ஓதினும் பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே" எனவும், இடைக்கால அழுக்காறுடைய சிலர் தொடுத்து வைத்த பழமொழி யாவும் வழுமொழியாகும்படி ஒழுக்கம், உறுதி, உள்ளத்தூய்மை இவைகள் நிரம்பிய திலகவதியாரைப்பெற்றது இந்நடுநாடே. தருமசேனரென்னும் சமணமதப் புனை பெயருடன் இருந்த தம்பியார்க்குத் திருநீறளித்து இன்று இவ்வுலகம்போற்றும் சைவசமய குரவராகச்செய்தவர் அப் பெண் தெய்வம் அன்றோ. இதுபற்றியே,

"பெண்ணருங் திலதமாய்ப் பிறந்து மாசறு, தண்ணல்வா கீசரை அருளுக் காக்கிய, புண்ணியத் திருவையும் பூத்திடு நாடுதான், எண்ணில் நடுநிலை யிலகுகின்றதே"

எனப் புகழ்பெற்றது.

ஞானத்திற் சமரசம்: இனிப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய பெரியார்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மாடம்பிளவஸ்கி, சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ஆகிய மூவர். இவருள் நடுநிலையென்பதை மக்கட்கு அறிவுறுத்திச் சொற்கட்டிடமாகிய திருவருட்பாவினை இயற்றிவைத்து இற்றைக்கு 62 ஆண்டுகளுக்குமுன் சித்திவிளாகத் திருமாளிகையில் திருக்கடைக் காப்பிட்டுக்கொண்டு பூதவுடம்பொடும் மெய்ஞ்ஞானமாகிய யோகியாய் மறைந்தருளிய சமயங்கடந்த மோன சமர ஞானியைத் தோற்றுவித்த புகழும் இந்நாட்டிற்கே வாய்த்தமையால் இந்நாட்டை நடுநாடென்று வழங்காமல் வேறென் புகல்வது?

நிலவளத்திலும் நடுநிலைமை

இதுகாறும் எடுத்துக் காட்டிய தனிச்சிறப்புகளைப்போலவே குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் ஆகிய நானிலவளங்களும் ஒருங்கே நிறைவளம் கொழிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)


"பெண்களே — உங்கள் அழகைக் காப்பாற்றுங்கள்" என்று
Jean Harlow சொல்லுகிறாள்.




Metro-Goldwyn Mayer

சருமத்தின் மேலிலும் மயிர்க்கால்களினிடையிலும் கெடுதலுண்டாக்கும் அழுக்குகள் சேருவது சகஜம். இவ்வழுக்குகளைப் பூராவும் நீக்கினாலொழிய சருமத்தின் அழகுகெட்டு விடும். லக்ஸ் டொயிலெட் ஸோப் வெகு லேசாய் இந்த அழுக்குகளை முற்றிலும் நீக்கி சருமத்திற்கு உண்மையான அழகைக் கொடுக்கிறது. ஸினிமா நடிகை ஜீன்ஹார்லோ சொல்லுகிற புத்திமதிப்படி, லக்ஸ் டொயிலெட் ஸோப்பைத் தவறாமல் உபயோகித்துவாருங்கள். இதன் கெட்டியான வெண்மை நுரை, சருமத்தை லேசாய் சுத்தம் செய்து மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கச்செய்கிறது. 857 பிரபல ஸினிமா நடிகைகளில் 846பேர்கள் தங்களின் மாசற்ற மேனியைப் பாதுகாப்பதற்கு லக்ஸ் டொயிலெட் ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். நீங்களும் ஒரு கட்டி இன்று வாங்குங்கள்.




LUX TOILET SOAP

X-LTS 400-288A TAMIL LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

# மந்திரம்.

[புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளை, தமிழாசிரியன் ஆசிரியகலாசாலை, சாவகச்சேரி.]

மந்திரமென்ற தந்திரத்தின் மேம்பட்ட இவ்வரும் பெரும் விஷயத்தைத் தந்திரங்கற்று மந்திரம் தெரிந்த அந்தணர்க்கு முன்பு, யான் வரையத் தொடங்குவது பெருநகைவிளைக்குமாயினும் அடியேன் ஓர் சிறுவனுதலின் மழலைமொழியெனவுன்னி, குணங்கொண்டு இணங்குவாரென எண்ணுகிறேன்.

"எழுநிலத் தொடர்ந்த செய்யுட்டெரியின்
அடிவரையில்லன வாறென மொழிப"

"அவைதாம்,
நூலினுன வுரையினுன
நொடியொடு புணர்ந்த பிசியினுன
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத்தான
கூற்றிடை வைத்த குறிப்பினுன"

இந்நூற் பாக்கள் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனுர் பல்லாயிர வருடங்கட்கு முன்னர் தமிழ்நாடு செய்த தவப்பயனுக நிறுவி வைத்த தொல்காப்பியக் கடலில் பொருளதிகாரத்து மரபியலில் (164-165)ம் சூத்திரங்களாக மிளிருகின்றன. ஈண்டெடுத்துக்கொண்டது "மறைமொழி கிளந்த மந்திரத்தான் என்பதே".

மந்திரமாவது யாது என முற்பட்டு ஆராயத் தொடங்கியதும் தமிழ் வேதமாகிய திருக்குறள் தொல்காப்பிய மாதியவற்றிலுள்ள நிறைமொழிகள் நினைவிற்கு வருகின்றன. அவை,

"நிறை மொழி மாந்தர் பெருமைநிலத்து
மறை மொழி காட்டிவிடும்"
(திரு. அதி. 3 குற 8)

(இ—ள்) நிறைமொழி—நிறைந்த மொழியினையுடைய—மாந்தர் பெருமை—துறந்தவாது பெருமையை—நிலத்து—இந்நிலவுலகத்தின் கண்—மறைமொழி—அவராணையாகச் சொன்ன மந்திரங்களே காட்டிவிடு—கண்கூடாகக் காண்பித்துவிடும்.

'நிறை மொழி மாந்தராணையிற் கிளந்த,
மறைமொழி தானே மந்திர மென்ப"
(தொல். பொரு. மரபு 18)

இது மந்திரச் செய்யுளுணர்த்துதனுதலிற்று.

(இ—ள்) நிறைமொழி மாந்தர்—சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலையுடையராவார், ஆணையிற் கிளந்த—ஆணையாற் கிளக்கப்பட்ட, மறைமொழிதானே—புறத்தார்க்குப் புலப்படாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம், மந்திரமென்ப—மந்திரமெனப்படும்.

அருளுடையோரும் அளவிடற்கரிய—ஆற்றல் வாய்ந்த அரும் பொருள் பொதிந்த அருமருந்தன்ன பொன்மொழிகளை ஆழ்ந்து எண்ணும் போது அருமறை மந்திரத்தில் ஆர்வமுடையார்க்கு அகத்தில் தோணுவது தான் என்ன?

மந்திரம் சொல்லுவார் வாய்மையும் தூய்மையும், பெருமையும், அருமையும், எத்துணைச் சிறப்புமாக இருக்கிறது. இதனை ஆக்க வல்லவர் "அற்றது பற்றெனில் உற்றது வீடென" அறத்து வழி நின்ற துறந்தாரன்றோ? அவர்பெருமை யாரால் அளவிடமுடியும். "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று" இத்துணைச் சிறந்தபொருளை ஆக்கியோன் தாம் மனதில் எந்த நிலையில் நின்று செய்தாரோ அந்த நிலையில் அரும் பயனை அளிக்கின்றது. இம்மந்திரங்கள் ஒருவனைக் கெடவும், வாழவும், செய்யும் ஆற்றல் வாய்ந்தன. இம் மந்திரங்களை வடமொழியர் சப்தகோடிமகாமந்திரமென்பர். இங்கே குறிக்கப்பட்ட சப்தகோடியென்பது ஏழு கோடியென்னும் அளவை உடைத்தன்று. ஏழூஈற்றுமுடிபுகளை உடையது என்பதே பொருளாகும். உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட மந்திரங்களும் உச்சரிக்கப் படும்போது ஏழு ஈற்றில் ஒன்றுயடங்குதல் தந்திரம் முறையேகற்று மந்திரத்தை நச்சி உச்சரிக்கும் அறிவுடையார் உள்ளத்தில் தெள்ளிதிற் புலப்படும். மந்திரம் இன்னதென்றறியாதும், மந்திரத்திலடங்கிய தந்திரங்கள் எவையென்றறியாதும் மந்திர விற்பன்னராக விளங்கும் தான்றோன்றித் தம்பிரான்கள் மந்திரத்தின் பெருமை தெரியாது சீரழித்து விடுகின்றனர்.

நிறைமொழியாவது அருளிக் கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. மந்திரங்கள் வடமொழி தென்மொழி இரண்டிலும் நிறைய அமைந்துள தென்பது உலகம் ஒப்பிய விஷயம். சிலர் வடமொழியிற்றுன் மந்திரம் உண்டென்பர். தென்மொழியிலும் மந்திரங்க ளமைந்திருத்தல் அவர் அறியார்போலும். தமிழ்மொழியில் மந்திரமில்லை, வடமொழியில்தான் மந்திரம் உண்டென்பார் கூற்று, தன் தாய் மலடி என்றுற்போலும். தமிழ்மொழியில் மந்திரமிருத்தல் பழந் தமிழ்ப் புலவர்களான கபிலர், நக்கீரர் முதலிய பெரியார்களினதும், சமய குரவர்களினதும் அரும் பெரும் வாசகங்களால் நன்கு விளங்கும்.

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்ற சூத்திரத்திற்கு உரையெழுத வந்த ஆசிரியர் "தானே என்று பிரித்தான் தமிழ் மந்திரம் என்றற்கும்...." ....என உணர்க. என்று கூறுதலினுல் ஒல்காப் பெருப்புகழ்த் தொல்காப்பியத்திற்கும் வேறும் அரும் பெருஞ் சிறந்த நூல்களுச்கும் உரைகண்ட பேராசிரியர் முதலிய பெரியோர்க்கும் உடன்பாடாகவும் எமக்கேன் சந்தேகம். மந்திரம் உச்சரிப்போர் அதற்குத்தக தூய்மையுடையோரா யிருத்தல்வேண்டும். "அல்லோர்சொல்லின் தொல்லையே" நல்கும். இக்காலத்தில் வடமொழியில் ஒரு சுலோகமேனும அன்றித் தமிழில் ஒருசெய்யுளேனும் வாசிக்க மாட்டாத பெரியார்களெல்லாம் மந்திர அதிபர்களாய் விளங்குகின்றுர்கள். இப்பெரியார், குளிக்கப் போய்ச் சேறு பூசுவதுபோல் ஓர் சிறந்த மந்திரத்தோடு செய்யவேண்டிய கிரியைகள் செய்வான் புக்கு மந்திரமும் உச்சரிக்கமாட்டாமலும் கிரியைகளைச் செவ்வனே செய்யாமலும் பங்கம் செய்து செய்வித்தோனுக்கும் உய்வழியின்றித் தாமும் மெய்வழி கெட்டு அந்தகனுர் உவக்கச் சந்ததி செய்கிறுர்கள். என்னே? இவர் நிலைமை; இப்பெரியார்கள் மந்திரங்களையும் அதன்வாய்ப்பட்ட கிரியைகளையும் "கிள்ளுக்கீரைபோல" நினைக்கிறுர்கள். மந்திர விதியின் "மரபுழி வழாஅ வந்தணர் வேள்வி யோர்க்குமே" இதின் மரபுழி என்பதின் பொருள்தானென்னே? இதனை யவர் உள்ளுவாராயின் மனது கொள்ளா போகாதா? உச்சரிக்க வேண்டியதை எத்துணை எச்சரிக்கையுட் கூறுகின்றுர். "ஐதுரைத்து" என்பதினுல் பெறப்படும் சில மந்திரங்கள் பெலனுக உச்சரிக்க உரிமையுடையதென்பர்,

இம்மறை மந்திரங்களுக்குரியார் ஆதி சைவ மரபில்வந்த அந்தணராகவும் மற்றை அதிகாரமற்ற மந்தகுணமாத்துவரும் சொந்தமற்ற சுமாத்தரும் மந்தகுணம் பிடித்துச் சந்ததிசெய்வதைப் பார்க்குந்தோறும் ஏற்படும் துக்கம் அளவிடபபாலதன்று. வகையறியா, ஆரியர்கள் பேசுந்தொகை வீரியங்கள் மிகத்தொகை. மந்திரப் பயிற்சி குருசிட்சயமூலம் பெறவேண்டும். பேராசிரியரும் மந்திர விளக்கத்தை வல்லார்வாய்க் கேட்டுணர்கவென்கிறுர். பெரியோரெண்ணம் இதுவாகத் தற்காலத்தவர் நோக்கம் வேருக இருக்கிறது. இம் மந்திரங்களையும் மந்திரக் கிரியைகளையும் பண்டைக்காலத்தைப்போல் இருத்தற்கு சைவசமய அபிமானிகள் முன்வரவேண்டும், சைவசமய விருத்திப்பொருட்டுத் தமிழ்நாட்டில் அவதார புருஷர்களாகத்தோன்றிய பெரியார் பலருள்ளும் மிக மேன்மையுடைய சைவப் பெருந்தகையர் இவ்வருஞ் செயல்களும், சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குவான்வேண்டி நிதிவைத்துள்ளார். அதன் வருவாயை அவர் வழித் தோன்றல்கள்தகும் முறையில் செய்யாதுங் கவனியாதும் இருத்தல் தந்திர உலகஞ் செய்தவக் குறையின்றி வேறென் என்பது.

இனி, மந்திரங் கூறும்பொழுது அதற்குரிய மந்திரச் சொல்லன்றி வேறு பொருள்தருஞ் சொற்கள் கூறவொண்ணு வென்பது.

"பெயர் நிலைக்கிளவி யினுஅகுநவும்
திசை நிலைக்கிளவி யினுஅகுநவும்
தென்னெறி மொழி வயினுஅகுநவும்
மெய்நிலை மயக்கினு அகுநவும்
மந்திரப் பொருள் வயினுஅகுநவும்
மன்றியனைத்துங் கடப் பாடிலவே.
(தொல்-சொல்-எச்-53)

இதில் மந்திரப் பொருள் வயினுஅகவும என்றதற்கு ஆசிரியர் சேனுவரையர் கூறும உரை கவனிக்கத்தக்கது. இளம்பூரண அடிகள் கூறும் உரையையும் உதாரணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தல் இன்றியமையாததாகும்.

மந்திரப் பெருமையை விளக்க ஓர் சரித்திரங் கூறுகின்றேன். உயர்தரக் கல்வி பயின்றவர்களில் ஆசிரியர் நக்கீரனுரை அறியாத தமிழ்மாநதர் இலரென்று திண்ணமாய் எண்ணுகிறேன். நக்கீரர் வாழ்ந்தகாலத்து அளவற்ற தமிழ்ப்புலமைப் பெரியார் பலர் விளங்கினா. அவருள்ளும் மிகச் சிறந்தோர் கபிலர், பரணர், மாமூலனுர் உக்கிரப் பெருவழுதியார், சீத்தலைச்சாத்தனுர், சொல்லாடமுடியாத கல்லாடனுர், நாகன்றேவனுர், மருத்துவன்றுமோதரனுர், பொன்முடியார், அரிசில்கிழார், கோதமனுர், நத்ததனுர், வள்ளுவனுர், முகையலூர்ச் சிறுகருந்துமபியார், ஆசிரியர் நலலந்துவனுர், கீரந்தையார், சிறுமாதேவியார், நல்கூர்வேள்வியார், தொடித்தலை விழுத்தண்டினுர், வெள்ளிவீதியார், மாவந்தி மருதனுர், எறிச்சலூர்மலாடனுர், போக்கியர், மோசிக்கீரனுர், காவிரிப்பூம் பட்டணத்துக் காரிககண்ணனுர், மதுரைத் தமிழ்நாகனுர், பாரதம் பாடிய பெருந்தேவனுர், உருத்திரசன் மகண்ணர், பெருஞ்சித்திரனுர், நரிவேரூஉத்தலையார், மதுரைத்தமிழாசிரியா, செங்குன்றூர்கிழார், மதுரையறவை வாணிகன இளவேட்டனுர், கவிசாகரப் பெருந்தேவனுர், மதுரைப் பெருமருதனுர், கோவூர்கிழார், உறையூர் முதுகூற்றனுர், இழிகட் பெருங்கண்ணனுர், செயாககாவிரியார் மகனுர், சாத்தனுர், செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனுர், வண்ணக்கஞ்சாத்தனுர், களத்தூர்கிழார், நச்சமனுர், அக்காரக்கனி நச்சுமனுர், நமபாலத்தனுர், குலபதி நாயனுர், தேனீக்குடிக்கீரனுர், கொடிஞாழன் மாணிபூதனுர், கவுணியனுர், மதுரைப் பாலாசிரியனுர், இவர்களும் இன்னும் இவர்கள் போன்ற தமிழ்ப்புலமைப் பெரியார் பலரும் கூடியிருந்த ஒரு மகா சபையின் கண்ணே, குயவகுலத்தில் பிறந்து, குலமரபுக்குரிய அற்ப சீவியம் செய்து கொண்டுவந்துள வேட்கோகுயக்கோடன் என்பவன் சிறிது வடமொழி கற்றுளான், புலமை நிறைந்தானல்லன். ஆயினும் தன்னை வாலில்லாத நாய்போல் பெரிதாக மதித்துக்கொண்டவன். மமதை பிடித்தவனுய் சபையின் முற்பட்டு வந்து அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைக் குறைத்தும் இழித்தும் உரைத்தான். அதைக்கேட்ட நக்கீரர் உள்பட்ட தமிழபிமானிகளுள்ளம் கொதித்தது. நக்கீரர் "குணமென்னும் குன்றேறி நின்றுர்வெகுளி கணமேனும் காத்தலரிது" என்ற முதுமொழிக்கிணங்க மனம் பொறுராய் வெகுண்டு தமிழையிழித்துரைத்த இவ்வறிவிலி இறக்கக்கடவனென, நினைந்து தமது ஆற்றல் சான்ற நிறைமொழியால் அவன் கெடும்படி கூறுகின்றுர். அக்கூற்றுடனே நிறைமொழியாதலின் மந்திரமாயிற்று.

"முரணில் பொதியில் முதற்புத்தேள்வாழி
பரண கபிலரும் வாழி—அரணிய
ஆனந்தன் வேட்கைடான் வேட்கோ குயக்
ஆனந்தம் சேர்க சுவாக" [கோடன்

என வெகுண்டு கூறியவுடன் அவ்வறிவிலி அந்நிலையே விழுந்து ஆனந்தம் சேர்ந்துவிட்டான். அதனைக்கண்ட சபையோர் குயக்கோடனின் அறிவின்மைக்கிரங்கி தக்கோர் போற்றும் நக்கீரரைப்பார்த்து, அறிவிற்சிறந்த நெறியுடை ஐயா! கலைமிக்க புலவரேறே "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்றதற்கிணங்க இவன் செய்த தவற்றினைப் பொறுக்கவேண்டும். இவனே சாதியிற் குயவன். புத்திமத்திபம். குயவரில தலைமயென எண்ணிக்கொண்டான். சிறிது வடமொழி தெரிந்தவுடன இறுமாந்துவிட்டான். நிரம்பிய அறிவு வாய்ப்பின் இங்ஙனம் கூறுன். தமிழாற்றல்தேரான். குறை குடம் தழம்புதல்போல குறைந்த கல்வியுடையாரும் தடுமாறவியல்பேயன்றே! இவன மாத்திரமன்று, சிறிய நூல்கள்கூட முறையாகத் தெரியாத அறிவிலிகள் தம் எண்ணத்திற்கு திரிபுணர்ச்சிபடவுணர்ந்து தமிழைக் கரைகண்டு விட்டோமென்று நம் நாட்டில் எத்தனையோ பேரிருக்கிறுர்கள். அவர்களில் இக்குயவனுமொருவன். புலவர் திலகமே! நக்கீரனென்னும் நாயகமே! நம்பருடனும் வம்புடையோனே! அகப்பொருள் விரித்தலின் றமிழகம் போற்றுவோனே! தீந்தமிழுருவே! திக்கிக்குந் தெள்ளமுதே! பத்திக்கு வரம்பான பாக்கியமே! எத்திக்கும திதிக்கப்போற்றும் புலவரேறே! என இன்னோரன்ன பனமொழிகளாலு அவரை வேண்ட, ஒருவாறு மனமிரங்கி அவன் உய்வான வேண்டி பின் வரும் நிறைமொழி (மந்திரம்) கூறுகின்றுர்,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனஉரைத்த
காரியத்தாற்காலக்கோட்பட்டானை – சீரிய
அந்தண் பொதியிலகத்தியனுர் ஆணையினுற்
செந்தமிழே தீர்க்க சுவாக"

என்னுஞ் செய்யுளைப் பாடியவுடன் குயக்கோடன் உயிர் பெற்றெழுந்து தன் அறியாமைக்கு வருந்தி, நக்கீரதேவரை வணங்கி இறுமாப்பற்று தமிழில் ஆர்வமுடையவனுக விளங்கினுன்.

இச்சரித்திரத்திலிருந்து நிறைமொழி மாந்தர் தன்மை புலனுகும. மந்திரம் உச்சரிக்கும் போது அதற்குரிய முறைப்படி உச்சரிக்கவேண்டும். இக்காலத்தில் மந்திரத்தை குருமூலம முறையாற் பெறுது தாமே

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.)

# "வசைபாடக் காளமேகம்."

(மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர், பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள் வட்டுநகர் இந்துவாலிபர் சங்க ஆதரவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

"காளமேகம்போலவே வசைபாட
........................ (படிக்காசுப்புலவர்)

"ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க் காளமேகமே"
(*இரட்டைப்புலவர்கள்)

அறிஞர்களே!

இப்பொழுது பெய்யும் மேக ந்தான் காளமேகம். இஃது எமக்கு, மொழிக்கடலுந் தென்மொழிக்க லும் நிலைகண்டுணர்ந்து, தெய்வப் புலமை கைவரப்பெற்ற சிவஞான னிவர் அவர்கள் குளத்தூர் அமு பிகைப்பிள்ளைத்தமிழில் கூறிய செய்தியை நினைப்பூட்டுகின்றது. ளத்தூரிலுள்ள ஒரு பொய்கையை ம் ஒரு சோலையையும் வர்ணிக்க ப்புக்க முனிவர், பொய்கையின் ஆ ழத்தை நாகலோகம் (பாதாளலோகம்) கண்டு இதுவும் பாம்புகளுக்கிடமா னதொரு பாதாளலோகம்போலுமெ ன்றெண்ணி, அழுக்காறுகொண்டு த னக்குக்கீழே போகச்செய்தது; அந் தப்பொய்கையின் கரையிலுள்ள சோ லைப்பொய்கையுடன் மிகுந்த நண்பு டையது; அதற்கு நாகலோகம் தன் ண்பனைக் (பொய்கையை) கீழே செல்லவிட்டுப் பழிப்பது கோபத் தை யுண்டாக்கியது. உடனே அஃது லோகம் எனவுங் கூறப்படுவதால் யரளவிலொற்றுமையுடைய தே லோகத்தைக் கீழே நிற்கச்செய்து தான் மேலேசென்று தன் சினமா து; என்னுங் கருத்தையடக்கி,

ங் கொழிக்குங் கொழுந்தேறன்
துச் சுரும்ப ரடை கிடக்கு
ப் பூந்தடத்தைக் காண்டலுஞ் செம்
ணிகால் குடுமிப் பணி யுலகம்
துவு மரவந் தனக்கிடமா
ருக்குங் கொல்லோ வென்றழுக்கா
றய்தித் தன்கீழ்ப் படத்தாழ்த்து
யல்லை யறிந்தா லெனக் கரைக்கட்
பாதுளி யுறவு கொண்ட நறும்
பாதும்பர் நாக ருலகெனு மொப்
மையாற் புலவோர் பதி தாழ்த்திப்
பாற்று அதிர்க்குந் திருக்கு ளத்தைப்
தி..................

ன மிகவுஞ் சிறப்பாகக் கூறியுள்ளார்.

யான் காளமேகப் புலவரைப்ப றி யெவ்வளவு கூறினும் அவரு டய புலமை முழுவதையும் எடு துக்கூற முடியாதென்பதை யுண த பெயர் ஒற்றுமையேயன்றித் தாழில் ஒற்றுமையுமுடைய இக்கா மேகம், தான் பொழியும் மழை ற்றுன் புலவருங் கவிமழை பொ வர் என்பதைக் காட்டவேண்டி வ்வாறு பொழிகின்றதுபோலும். கெழ்ச்சி புலவரவர்கள் பெற்ற ருட் புலமையை விளக்க நிக றதெனினும் இழுக்காது. நிற்க. மேனாட்டினர் தமது அரும்பெ ம் புலவர்களையும், அவர்கள் நூல் யும் பொன்னேபோற் போற்று றனர். அவர்களைக் குறித்து வி க்களயர்கின்றனர். உலகப்பிரசித்தி ற்ற ஆங்கில அருங்கவிவாணரா "சேக்ஷ்பியர்" அவர்களுடைய லாற்றையும், பெருமையையும், ன்னும் மற்றைய "உவோட்ஸ் வாத", "கிற்ஸ்", "ஸ்கொற்" மு யோர்களுடைய வரலாறுகளையும், ங்கில நாட்டார் தலைசிறந்த முறை ஆராய்ந்து, காலமெனுங் கடுங் காற்றில் அகப்பட்டுச் சிதறிக்கிடந்த உண்மைகளாகிய மணிகளையெல்லாம் ஒருங்குபடுத்தி அறிஞர்கள்யாவரும் அகம்மிக மகிழும் நன்முறையில் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். வெளிப்படுத்துகின்றனர். சிறந்த கிரேக்க கவிஞரான "கோமர்," ரோமகவிஞராகிய "தாந்தே" முதலியோரை அந்நாட்டார்கள் புகழ்ந்தேத்தும் முறை புகலத்தக்கதொன்றோ? ஏனைய மேனாட்டார்களும் தலைசிறந்த முறையில் தங்கள் தங்கள் கவிஞர்களின் பெருமைகளையும், வரலாறுகளையும் ஆராய்ந்து உலகமெங்கும் நிரப்புகின்றனர்.

ஆனால் பண்டைக்காலத்தில் ஒப்புயர்வில்லாப் புலமைச் செல்வர்களாய் விளங்கிய நந்தம் அருந்தமிழ்க் கவிஞர்களைப்பற்றிய உண்மையான வரலாறுகள் அறிஞர்கள் யாவர்க்கு மொப்ப, இதுவரையில் நன்முறையில் ஆராய்ந்து வெளியிடப்பட்டில. இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த எங்கள் நாட்டு யாழ்ப்பாணத்து—புலவர்களுடைய உண்மையான வரலாறுகளைத்தானும் தக்கதொரு நன்முறையில் யாழ்ப்பாணவாசிகளாகிய நாங்கள் வெளியிட்டிலேம்—வெளியிட முயற்சிசெய்திலேம். இஃது மிகவும் வெட்கத்திற்கும், துக்கத்திற்கு மிடமானதே. நல்லூரில் இருந்த சின்னத்தம்பிப்புலவர் அவர்களுடைய காலத்தைப்பற்றி எவ்வளவு அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. அவருடைய காலமிதுதானென்ன இன்னும் உறுதியாய் ஓர் முடிவு செய்யப்பட்டிலது.

இனி, செந்தமிழ்ப் புலவர்களில் காலத்தால் அதிகம் முற்பட்டோர் சங்க காலத்தவர்களே. அவர்களுடைய வரலாறுகள் கொடுங்கடலாலும், பிறவற்றாலும் அழிக்கப்பட்ட நூல்கள் போக எஞ்சிய சங்கநூல்களிற் காணப்படும் அகச்சான்றுகளைக் கொண்டே அறியக்கிடக்கின்றது. இடைக்காலத்திருந்த குமரகுருபரர், கம்பர், ஔவையார் (சங்ககால ஔவையாரும் ஒருவர் உளரென்பர்.) புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், இரட்டைப்புலவர்கள், பொய்யாமொழிப் புலவர், படிக்காசுப்புலவர் அந்தக்கவி, சயங்கொண்டார், திருத்தக்கதேவர், சின்னத்தம்பிப்புலவர் முதலியோருடைய வரலாறுகளை அறிதற் காதாரமாயிருப்பன அவர்களியற்றிய நூல்களும், கர்ணபரம்பரைக் கதைகளுமேயாகும். அவர்களுடைய வரலாறுகளிற் சிற்சில பகுதிகள், வெளியீடுகள், நூல்கள்மூலமாக வெளிவந்துளனவாயினும், அவை பூரணமற்றவையாயும், ஒன்றற்கொன்று முரணுவனவாயும் ஒரு சாரரால் மறுக்கப்படுவனவாயும் இருக்கின்றன. தமிழறிஞர்களும், தமிழன்பர்களும், இப்புலவர்களுடைய வரலாறுகளை மேனாட்டாரைப் போல நன்முறையில் ஆராய்ந்து வெளியிடின் அஃதோர் தெண்டாவதோடமையாது தமிழர்களுக்கும் தமிழ்மொழிக்கும் பெருமையையும், சிறப்பையும், மதிப்பையுமளிக்கும். நிற்க,

சேந்தமிழ்ச் செல்வர்களே!

ஈண்டு யான் எடுத்துக் கூறப்போகும் வசைபாடுவதிற் சிறந்த காளமேகப்புலவர் அவர்களுடைய வரலாறும் முன்னர்க் கூறிய புலவர்களுடைய வரலாறுகள் போன்றே அறிஞர்கள் சிலரால் முரண்படக் கூறப்பட்டுளது. எனினும், அவற்றுள் பொருத்தமான சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு புலவரவர்கள் புலமையடைந்த வரலாற்றையும், அவர்களுடைய புலமையி னுபர்வையும், பிறவற்றையும் வசைபாடுஞ் சிறப்பியல்புடன் சேர்த்து எனது சிற்றறிவிற் கெட்டியவரை கூறுகின்றேன்.

(தொடரும்)

* இச்செய்யுள் திரிந்தாயதோர் செ அதிமதுர கவி பாடியதெனத் தமிழ் லர் சரிதை கூறுகிறது. அதனை ஏற் கொள்ள முடியாதிருக்கிறது.

# உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)
(உரிமை ஆக்கியோனுக்குரியது)

## 3-ம் அத்தியாயம்

நாமுண்ணும் உணவு நம் தேக வுறுப்புகளைப் போஷிக்கப் பக்குவமடைவதன் முன் பல மாறுதல்களையடைகின்றது. அம்மாறுதல்களுட் சில தேகசம்பந்தமானவை, சில இரசாயனசம்பந்தமானவை. தேகஉறுப்புகளின் தொழில்களாலடையும் மாறுதல்கள் தேகசம்பந்தமான மாறுதல்கள் என்றும், ரசாயனப் பொருட்கள் உணவுடன் சம்பந்தப்படுவதாலடையும் மாறுதல்கள் ரசாயன மாறுதல்கள் என்று மழைக்கப்படுகின்றன. உதாரணங்கள்:—நாமுண்ணுந் திடப்பொருட்கள் முதல்முதல் பற்களினுலரைக்கப்பட்டுச் சிறுசிறு துணிக்கைகளாகத் துண்டிக்கப்படுகின்றன. இம்மாறுதல் தேகஉறுப்பாகிய பல்லின் தொழிலானபடியால் தேகசம்பந்தமான மாறுதலென்றழைக்கப்படுகின்றது.

இங்ஙனம் துண்டிக்கப்பட்ட உணவுத் துணிக்கைகள் உமிழ்நீருடன் கலக்கும்போது நாம் எளிதில் உணரக்கூடாதவிதமான ஓர்வித மாறுதலை அடைகின்றது. இம்மாறுதல், ரசாயனமாறுதல் எனப்படுகின்றது. இவ்விதமாய் நாமுண்ணும் ஆகாரம் பலதரம், மாறுதலடைந்து ஈற்றில் இரத்தமாய் மாறுகின்றது இம்மாறுதல்களுடன் சம்பந்தப்பட்டுள்ள உறுப்புகளே சீரணமண்டலமென்று அழைக்கப்படுகின்றன.

### சீரண உறுப்புகளின் விபரம்

சீரண உறுப்புகளாவன. வாய், பல், நா உமிழ்நீர்க்கோளங்கள், மிடறு அன்னவாகி அல்லது இரைக்குழல், குக்லி அல்லது இரைப்பை, அந்தர மலல துவயிற்றுக்குடல்கள், ரசாயினி, ரசதாரை, ஈரல், கணைய மென்பவைகளே.

1. வாய் (Mouth): பற்களும் சுவைக்குரிய நாவும் உமிழ்நீர்க்கோளங்களும் அமைந்திருக்கும் ஒழுங்கற்ற ஓர் உறுப்பு.

2. பற்கள் (Teeth): பற்கள் ஒவ்வொன்றும் முடி (Crown) என்றும் வேர் (Root) என்றும இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. முடியென்பது முரைசுக்கு வெளியே தோன்றும் பாகம். வேரென்பது தாடைக்குள் மறைந்திருக்கும் பகுதி. இவ்விரு கூறுகளும் சந்திக்கும பகுதி வட்டெனப்படும் (Neck) (பற்களின் அமைப்பையும் அவைகளின் வகைகளையும் அவற்றைப் பேணும் முறைகளையும் பற்களைப்பற்றிக் கூறும் அத்தியாயத்தில கண்டுகொள்க.) பற்கள் நாமுண்ணும் உணவுகளை அரைத்துத் துண்டுகளாக்குகின்றன.

3. நா (Tongue): எலும்பற்ற மாமிசத்தாலான குழைவான நீண்ட வட்டவடிவமுள்ள ஓர் உறுப்பு. இவை சுவைக்குரிய கருவியாயும் நாமுண்ணும் உணவை உருட்டித் திரட்டி இரைக்குழலின் வழிபாய் இரைப்பைக்கு அனுப்பும் கருவியாயு மமைக்கப்பட்டிருக்கிறது.

4. உமிழ்நீர்க்கோளங்கள் (The Salivary Glands); குழைவான பேசிகளாலான எண்ணறைகள் நிறைந்துள்ள உறுப்புகள். இவை கீழ் தாடையிலே பக்கத்துக்கு மூன்றாக ஆறு கோளங்களா யமைந்திருக்கின்றன. ஒரு சோடி செவியடிக்கோளம் (Parotid Glands) என்றும் மற்றொரு சோடி தாடையுட் கோளம் என்றும் (Submaxillary glands) இன்னொருசோடி நாக்கீட்கோளம் (Sublingual glands) என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகளின் இருப்பிடங்களை இவைகளின் பேர்களே விளக்கிக் காண்பிக்கின்றன. இக்கோளங்களுள் அமைந்திருக்கும் கண்ணறைகளிலிருந்து ஓர்வகை நீர் சுரக்கின்றது. இந்நீர் உமிழ்நீரெனப்படும். நாம் ஆகாரத்தை வாயுளிட்டதும் இந்நீர் சுரக்க ஆரம்பிக்கும். சில சமயத்தில் உணவைக் கண்டதும் அல்லது உணவு மணத்ததும் உமிழ்நீர் சுரப்பதை நம்மனுபவத்தில் காண்கின்றோம்.

உமிழ்நீரென்பது ஜலமும் உப்பும் சளியும் ஓர்வகைப் புளிப்புநீரும் சேர்ந்த ஓர் திராவகம். உமிழ்நீரிற் காணப்படும் புளிப்புத் திராவகமே. நம் மாகாரத்திலுள்ள மாப்பதார்த்தம் சலத்தோடு சேர்ந்து சர்க்கரைத்தன்மை யடையச்செய்கின்றது. உமிழ்நீரின் தொழில்களின் விரிவஞ்சி அதன் தொழில்களைச்சுருக்கிக்கூறுவேன்.

### உமிழ்நீரின் பிரதான தொழில்கள்

(1) உணவின் மாப்பொருளைச் சலத்தோடு சேர்த்து சஞ்சிப்பசையாக்கிச் சர்க்கரைப்பாணியாக்குகின்றது.

(2) பற்கள் ஆகாரத்தை யரைப்பதற்கு உமிழ்நீர் ஆகாரத்தை நனைத்து இளக்கிக் கொடுக்கின்றது.

(3) பற்களினுல் மெல்லப்பட்ட உணவை உமிழ்நீர் நாவி னுதவிகொண்டு உருட்டித்திரட்டி இரைக்குழலுக்கூடாய் இரைப்பைக்கு அனுப்புகின்றது.

(4) உமிழ்நீர் உணவுடன் கலப்பதால் உணவு சுவையடைந்து நாவினுல் சுவைக்கப்படுகின்றது.

5. மிடர் (Pharynx) அடிநாவிலிருந்து இரைக்குழல்மட்டுஞ் செல்கின்ற சவ்வுப்பேசினுலாகியமூன்றங்குல விசாலமுள்ள ஓர் கிருகம்போன்ற உறுப்பு.

6. அன்னவாகி அல்லது இரைக்குழல் (The Oesophagus) என்பது ஒரு அடி நீளமுள்ள தடித்த சவ்வுப்பேசினுலாகிய ஓர் குழல். இது மிடறு தொடங்கி இரைப்பையின் மேலந்தம் வரையும் தொடர்ந்திருக்கின்றது. இது மெல்லிய ஓர் மிருதுவான குழலாய் இருப்பதால், ஆகாரம் உட்செல்லும்போது விரிந்தும் மற்றைய நேரங்களில் சுருங்கியும் இருக்கும். இதன் வழிபாய்ப் போசனபானங்கள் இரைப்பைக்குட் செல்கின்றது.

(தொடரும்)

அயலார் குற்றத்தைப் போலத் தங்குற்றத்தை யுணர்பவர் புறங்கூறார்.

கதைப்பகுதி.

# மந்திரவாதியின் மகள்

"துகிலிகை."

[பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைக் காலமாகக் கொண்டு இக்கதை எழுதப்பட்டது.]

## VII

"தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும், வேண்டாது பெய்யப்படும்" என்றார் வள்ளுவ நாயனார். மருக்கொழுந்தை மணக்க விரும்பிய நாள் துவக்கம் நாராயணன் ஓயாமுயற்சியுடையவனானான். அவன் ஒருநாளுந்தவறாது வயலுழச் சென்றனன். காதலாலாகாதனவும் உளவோ? காதலின் கருணைக்கிலக்கானவன் சோம்பருடையனாயினும் முயற்சியுடையவனாவான். மூடனாயினும் அறிஞனாவான். அஞ்சியஞ்சிச் சாகுமியல்பினன் அஞ்சாத சிங்கத்தை ஒப்பான். தேனெனமதித்த தன்உயிரைத் திரைகடல்நீரெனஉவர்ப்பான்.

முற்கூறிய நிகழ்ச்சியின் மறுநாட் காலை நாராயணன் காளைகளுடன் வயலை நோக்கிச் செல்கின்றான். மருக்கொழுந்து ஊருணி நோக்கி நடக்கின்றாள். இவர்கள் செல்லும் இந்நேரம் மற்றும் உழவர்களும் தண்ணீர்மொள்ளும் பெண்களும் வினைமேற் செல்லுந்நேரம் அன்று; இது ஒருகள்ள நேரம். இந்நேரத்தை ஒருவர்க்கொருவர் கூறாது குறித்துக்கொண்டது காதலின் சிறப்புக்கு ஒரு அறிகுறியாகும். இதுதான் ஒத்தஉணர்ச்சி என்பது. நாராயணன் அறியவிரும்புவதை அவன் வினவமுன்னரே மருக்கொழுந்து கூறிவிடுவாள். மருக்கொழுந்து கூறஎண்ணியிருப்பதை நாராயணன் முன்னர் துவங்கிவிடுவான். இத்தன்மை இல்லாவிட்டால் காதல் என்ன காதல்!

அன்று இருவரும் சந்தித்ததும் நாராயணண், "என்அன்பின் வளமே! பேரன்பு செய்தாரில் யாவரே பெருந்துயரம் பிழைத்து நின்றார். என்னால் நீயும் பெருந்துயர்க்குள் அகப்பட்டுக்கொண்டனை; நேற்றுச் சுந்தரமுதலியார் வந்தனராமே. நடந்ததென்ன?" என்றனன்.

"வருந்திங்கள் முதல் நாளில் மணவிழாவை முடித்துவிடுவதாக நிச்சயம் செய்துள்ளார்கள். இதுகிடக்க, இனி நீங்கள் இவ்விடம் வருதல் கூடாது, என் தந்தையார் வன்னெஞ்சமுடையவர். அவர்கட்டாயம் உங்கட்கு யாதேனும் தீங்கு செய்யக்கூடும். யான் கொஞ்சமுமஞ்சாது உங்களையன்றி மற்றொருவரை மணம் செயய உடன்படேன் என்பதைத் தெரிவித்து விட்டேன். அவர் என்னைக் கொல்வார் போலக் கொதித்தெழுந்தாரேனும் எக்காரணங்கொண்டோ ஒருவாறு அடங்கிவிட்டனர். நாவிதநாகமுத்தன் கூறியதைக் கேட்டதும் உங்கள் கூந்தலை அரிந்து நாற்சந்தியில் தொங்கவிடுவதாகச் சூளுரைத்தார். பின்னர் என் நினைத்திருக்கின்றாரோ யானறியேன். நாம் இவ்வூரில் எம் எண்ணப்படி வாழ்தல் முடியாத காரியம். புலியுடன் ஒருகூட்டில் வாழ்வதெப்படி? இன்னும் ஒன்று இரண்டு நாட்களுள் நாம் இவ்வூரைவிட்டு வெளியேறிவிட வேண்டும்" என்றாள் மருக்கொழுந்து.

"என்ன? அவ்வளவு நெருக்கடியான நிலைவந்துவிட்டதா? ஊரைவிட்டோடுதல் ஆண்மைக்கழகல்லவே" என்றான் நாராயணன்.

"ஓடவேண்டிய காலத்தில் ஓடுதலே ஆண்மை. மலை உச்சியினின்றும் உருண்டுவரும் கல்லின்முன் எதிர்த்து நிற்றல் ஆண்மையாகுமா? என் தந்தையாரோடு எதிர்த்து நிற்றல் எவர்க்கும் இயலாது. நம் எண்ணம் நிறைவேறவேண்டுமானால் நாம் வேற்றூர் செல்லவேண்டும்" என்றாள் மருக்கொழுந்து.

"உன் தந்தையாரைப்பற்றி நீ கூறுவதை யான் மறுப்பதெப்படி? எப்பொழுது புறப்படுவோம்?" என்றான் நாராயணன்.

"ஞாயிற்றுக்கிழமைஇரவு புறப்படுதல் நன்றெனக் கருதுகின்றேன். நல்ல படகு ஒன்று வேண்டுமல்லவா? படகுக்காரனுக்கு என்னைப்பற்றிய செய்தி ஒன்றும் தெரிதல் கூடாது. என் தந்தையார்க்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்ய வல்லவர் நீங்களும் நானுமேயன்றி மற்று யாருளர்?" என்றாள் மருக்கொழுந்து.

"சரி, எல்லாம் உன் கருத்தின்படியே இயற்றுகின்றேன். ஆனால் இன்னும் நான்கு நாட்களுக்கு நீ வசிக்கும் இல்லத்தையோ உன் அடிச்சுவட்டையோ காணாவிடின் என் கண் ஒளியிழந்து விடுமே. அதற்கென்செய்வது" என்றான் நாராயணன்.

"ஐயோ, நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த நான்கு நாட்களுள் என் தந்தையாரால் ஒரு சிறுஇடரும் தங்களை அணுகாவண்ணம் திருவருள் காக்கவேண்டும். என் தந்தையாரின் உள்ளக்கிடக்கை இன்னதுதான் என அறிவது எளிதாயில்லை. தன் எதிரிகளை எவ்விதத்தினும் துன்புறுத்தாது விடமாட்டார். ஆனால் என் அன்பைப்பெற்ற தங்களையும் பிறர்போலக் கருதுவரோ என்பதுதான் எனது சந்தேகம். என்றாலும் விழித்தகண் இமையாது அவர் செயல்கள் யாவற்றையும் கவனித்து வருகின்றேன். நீங்களும் கவனமாயிருங்கள்" என்றாள் மருக்கொழுந்து.

"ஞாயிற்றுக்கிழமைஇரவு எவ்விடத்தில் எந்நேரம் உன்னை யான் வந்துகாணுவது?" என்றான் நாராயணன்.

"நான் சொல்லுவது உங்கட்கு விளங்கவில்லையா? எந்நேரத்திலாயினும் தாங்கள் தங்கள் இல்லைவிட்டு வெளிக்கிளம்புவதை யான் விரும்பவில்லை. இன்னும் ஒன்று. நாம் இவ்வூரைவிட்டு வெளியேறும்வரையும் என் சொல்லைத் தட்டாதேயுங்கள். ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் யானே உங்கள் இல்லம் வருவேன். நீங்கள் வெளிவாசலிற் காத்துக்கொண்டிருத்தல் வேண்டும். அவண் வருதற்குரிய வழியையும் அடையாளத்தையும் கூறுங்கள்" என்றாள் மருக்கொழுந்து.

"அந்தோ! பகற்பொழுதிலேயே வெளியே ஒன்றறியாத நீ நள்ளிரவில் அச்சமின்றிவந்து எங்ஙனம் என் இல்லத்தைக் காணுவாய்?" என்றான் நாராயணன்.

"நாம் இப்போது அச்சத்தின் எல்லையைக்கடந்து நிற்கிறோம் என்பதை மறந்துவிட்டீர்களா? தாங்கள் அச்சத்தின் எல்லையைக் கடந்திராவிடின் குமாரசாமிமுதலியாரின் விருப்பத்துக்கு மாறாக அவர் புதல்வியோடு உரையாடுவீர்களா? யான் தங்கள் இல்லத்தை வந்தடைவதையிட்டு வீண் யோசனை வேண்டாம். அடையாளம் சொல்லுங்கள்" என்றாள் மருக்கொழுந்து.

"எங்கள் இல்லம் தூரத்துள்ளதாயினும் அங்குவருவதற்கு அதிகம் அலையவேண்டியதில்லை. இங்கிருந்து தெற்குநோக்கிச் செல்லும் நெடுந்தெருவில் வந்தால் இரண்டுகல் தொலைவில கிழக்கிருந்து மேற்கே செல்லும் நெடுந்தெருவந்து பொருந்தும். ஆண்டுத் தென்மேற்கில் இருக்கும் சிறிய இல்லமே எங்கள் இல்லம். அவ்இல்லத்தைப் புன்னைவேலி சூழ்ந்திருக்கின்றது. வெளிவாசலின் முன் தேமாமரம் ஒன்று நிற்கின்றது. என் கண்ணே! நேரமாய்விட்டது. உன் பெற்றோர் தேடுவர். என் அன்பே! உன் கட்டளையைக் கடந்து மீண்டும் பேசுகின்றேன்: நீ தனித்து வெளியே வருவதைக்கேட்க என்உள்ளம் வாட்டமடைகின்றது. யானே வருகின்றேன். அந்நள்ளிரவில் என்னை யார் காண்பவர்" என்றான் நாராயணன்.

"நீங்கள் புறப்படுதல் கூடாது, கூடாது! ஒன்றுக்கும் அஞ்சாது உவகையோடிருங்கள். ஒருவிதமான இடருமின்றி வந்துசேருகின்றேன்" என்றாள் மருக்கொழுந்து.

நாராயணனுக்கிருந்த அச்சமும் ஒருபடி குறைந்தது. இருவரும் அரிதிற் பிரிந்தனர்.

## VIII

நாராயணனும் மருக்கொழுந்தும் உடன்போக்கு நிகழ்த்த நிச்சயித்துள்ள இரவின் முதன்நாள்இரவு குமாரசாமிமுதலியார் இல்லத்தில் யாவரும் தத்தம் படுக்கைக்குப் போய்விட்டனர். மருக்கொழுந்து மறுநாளிரவு நிகழவிருப்பதை எண்ணியபடி துயிலாது கிடக்கின்றாள். அவள் நள்ளிரவில் தான் தனித்துச்செல்வதையும், நாராயணன் அவனுடைய இல்லத்துமுகப்பில் தன்னை எதிர்பார்த்து ஆவலோடு நிற்பதையும், பின்னர் இருவரும் வங்கமேறிச் செல்வதையும் மனக்கண்முன் வருவித்துப் பார்த்து மகிழ்கின்றாள் சற்று; மெய்வருந்திப்பெற்று, அன்புமாதரவுங்காட்டி வளர்த்தெடுத்த தாய்தந்தையரின் மனதைப் புண்ணாகச் செய்தும், அவர்களை ஏமாற்றியும் தான் தப்பிச்சென்றபின், அவர்கள் எவ்வித துன்பம் உறுகின்றார்களோ என்பதை எண்ணி ஆறுத்துயராமுறுகின்றாள் சற்று. இங்ஙனம் இன்பதுன்பங்களை மாறிமாறி அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது அவளுக்கு ஒரு யோசனை தோனறிற்று. 'பிறவூருக்குச்செல்ல எண்ணியிருக்கும் தன நாயகனும் தானும் ஏராளமான பணம் கையில் வைத்திராவிடின் அல்லற்படநேரும்' என அவள் எண்ணினாள். உடனே அவள் திடீரெனப் படுக்கையினின்றும் எழுந்து மெல்லெனத் தன் அறையின் கதவைத்திறந்து அடிக்குமேலடிவைத்து கருவூல அறையை நாடிநடந்தாள். அப்போது அவ்வறையின் அயல் அறையினின்றும் ஓர்சிறிய ஓசைஅவள்செவியிற்பட்டது. அவள் அவ்வறையை அண்மினாள் திறவுகோற்றுளையால் உள்ளே வெளிச்சமிருப்பது புலனாயிற்று. கலவரத்துடன அத்துவாரத்தில் ஒற்றைக்கண் வைத்து நோக்கினாள். நோக்கியதும் திடுக்குற்றுப் பின்வாங்கினாள். பின் உற்று நோக்கினாள். அச்சத்தால் விலவிலத்தாள். செய்வதின்னதென்றறியாது திகைத்தாள். அவ்வறைக்குள் அவள் கண்டதுதான் என்ன? கனிவகைகளும் மதுவகைகளும் நறுமணப் பொருட்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. கோழிச்சேவல் ஒன்று கால்கட்டப்பட்டு ஓர் மூலையில் கிடக்கின்றது. குமாரசாமிமுதலியார் வேள்வித்தலைவன் போன்று இறுமாப்புடன் ஏதோ மந்திரம் உச்சரித்தவண்ணமிருக்கின்றார். நாராயணனின் உயிரைக் கவர்வதற்காக தன்தந்தையார் காளி என்னும் பேயை அழைக்கின்றார் என்பதை மருக்கொழுந்து உணர்ந்து கொண்டாள். சிறுகுற்றம் செய்தோர்க்கும் பெருந்தண்டமிடும் என் தந்தையார் ஊரெல்லாம் திகைக்கு உறத்தக்க எங்கள் புதிய செய்தியில் மௌனம்சாதித்தல் பெரும்பழி ஒன்றை இயற்றவே என அவள் கருதியிருந்தாளாதலின் முதலியார் இயற்றுவது தன் காதலன் உயிரைக் கவர்தற்கே யென்பதையிட்டு அவள் கொஞ்சமும் ஐயப்படவில்லை.

"ஐயோ! என் அருமைக்காதலன் வீணே உயிர்துறக்கப் போகின்றனனே! என்செய்வேன்! என்தந்தையின் அடியில் வீழ்ந்து புலம்பி இத்தீவினையை இயற்றாதே எனக்கேட்டாலும் உடன்படாரே! முன்னியது முடியாது விடுமியல்பினரல்லர் அவர்! ஒருவர் தடுத்துரைக்கும் காரியத்தை இன்னும் பன்மடங்கு ஊக்கத்தொடு இயற்றுவர்! ஆ! கடவுளே! எனக்கு ஒரு வழிகாட்டமாட்டாயா? அந்தோ! யான் ஒருபாவி! என்னைக் காதலித்தமையால் பன்னெடுங்காலம் இன்புற்றுவாழவேண்டிய ஒரு இளவல் வீணாக மரணமடையப்போகின்றாரே. ஆ! என் அருமைக்காதல! உன்னை விடுத்து யானிங்கு உயிர் வாழ்வேனோ! சீ! எவ்வளவு மூடத்தனமான வார்த்தை! யான் உயிரோடு வாழ்ந்தென்ன! விட்டென்ன! இதனால் உனக்கென்ன நயப்! என் இன்உயிர்க் காதல! என் மேல் நீ வைத்த அன்பன்றோ உன் உயிரை வாங்கும் நஞ்சாயிற்று! சரி, இஃதொன்றே என்னால் முடிவது! நீ இறக்கமுன்னர் நானும் இறந்துபோகின்றேன்; என எண்ணியவளாய், மருக்கொழுந்து தன் இல்லத்தை விட்டு வெளியேறி, என் ஆருயிர்க்காதல! யான் முன்னர் போகின்றேன்; நீ பின்னே வருவாயாக! எனப்பிதற்றினாள். போற்றனக்குள்ளே பிதற்றிக்கொண்டுகடற்கரையை அடைந்தாள்.

பால்போலும் நிலவில் குமுறியடிக்கும் கடலருகில் தன்னந்தனிமே மின்னற் கொடியொன்று நிலம் படர்ந்தாங்கு மருக்கொழுந்து நிற்கும் காட்சி அற்புதமானதாகும். அவள் தன் காலை முன்வைப்பதும் பின்வைப்பதுமாகத் தடுமாறுகின்றாள். கடலுள் காலைவைக்கும் பொழுது ஏதோ தன் கடமையைத் தவறுவதுபோலிருந்தது. காலைப் பின்வைத்து என்னெனச் சற்றுநின்று யோசித்தாள். ஒன்றும் புலனாகவில்லை. "பெண்ணே வாராதே! வாராதே!" என்பதுபோலக் கடல் இரைந்தது. "சாகாதே! சாகாதே!" என்பதுபோல விண்மீன்கள் விட்டுவிட்டொளிர்ந்தன.

"என் நாயக! இன்பத்துயில் புரிகின்றனையோ! இன்னும் சற்றுநேரத்தில் நீ மரணித்துவிடுவாய்! இது நிச்சயம்! நாளைஇரவு என்னை எதிர்பார்த்து நிற்குமாறு உனக்குக் கற்பித்தேன். இன்று அதனை மாற்றிக் கொண்டேன். நான் எதிர்பார்த்து நிற்கின்றேன். நீயே வருதி!" எனக் கூறியடி மீண்டும் கடலுள் காலைவைத்தாள் மருக்கொழுந்து. நீ செய்வது சரியன்று என்பது போல அவள் உள்ளம் குமுறிற்று. மீண்டும் முன் வைத்தகாலைப் பின்வைத்தாள். அப்போது அவள் உள்ளத்திலே தெளிவுண்டாகி ஒரு செய்தி புலனாயிற்று. "என் அன்பன் உயிர் அபாயமாகப் போகும் நேரத்தில் உற்ற இடர் களையாது யான் சுகமாக இறந்துவிட நினைத்தல் தகுந்ததாமா! பேதமை என்பது மாதர்க்கணிகலம் என்னும் பழமொழி எழுந்ததற்கு இது போன்ற நிகழ்ச்சிகளும் காரணமேயன்றோ! இங்கிலை என்னை அணுதமானல் என்னைக் காதலித்த—என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வர் வாளாவிருப்பாரா! உடனே வெட்டரிவாள் ஒன்று கையிலேந்தி வீரசந்நதத்துடன் வெளிப்போந்து என் இடர் களைவாரன்றோ! எனக்குமுன்னதாகவே தான் உயிர்

## ஆண்வேடம்பூண்ட பெண்

### 9 பெண்களை ஏமாற்றினள்

ருஷியாதேசத்திலுள்ள 42 வயதுடைய அன்னு ஜவாரிக்கை என்னும் பெண் ஆண்வேடம்பூண்டு 9 பெண்களை விவாகஞ் செய்துகொண்டாள். விவாகஞ்செய்த அன்றிரவு மணப்பெண்களின் விலையுயர்ந்த பொருள்களைக் கைப்பற்றிக்கொண்டு மறைந்துவிடுவதே இவளதுவழக்கம். பொலிசார் இவளைச் சிறையாக்கி வழக்குத் தொடர்ந்திருக்கின்றனராம்.

## மறவன்புலோ கணேசராலயத் திருப்பணியாளர் சபை

### இரண்டாவதாண்டு நிறைவுவிழா.

இச்சபையின் இரண்டாவதாண்டு நிறைவுவிழா யுவவருஷம் மார்கழிமீ 13-ந் தேதி (28-12-35) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வள்ளற்குளம் கணேசராலய மண்டபத்தில் ஆசிரியர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. அவ்வமயம் தலைவர் முன்னுரையாக, மேற்படி சபை ஆற்றிய அருந் தொண்டுகளையும்; நாட்டினரின் சலியா உழைப்பையும், காரியதரிசியின் திறமையையும் வியந்து சொற்பொழிவாற்றினர். பின் காரியதரிசியால் சென்ற ஆண்டில் நடைபெற்ற விஷயங்களின் அறிக்கை வாசித்தளிக்கப்பட்டது. பின்னர் தனாதிகாரி வரவு செலவு விபரங்களடங்கிய பத்திரமொன்றை வாசித்தளித்தனர். அதன்பின் சைவத்திருவாளர் க. மூத்துக்குமாரு அவர்கள் "இந்துமதம்" என்னும் பொருள்பற்றி இனிய செந்தமிழ் நடையில் விரிவுரைசெய்து சபையோரை மகிழ்வித்தனர். பின் மூன்றாவதாண்டு உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் முடிவுரையாக, சங்க அமைப்பையும் அதன செயல்களையும் பாராட்டிப் பேசினர். பின் இரவு 9 மணியளவில் தேவாரபாராயணத்துடன் சபை இனிது கலைந்தது.

—சுடித.

## விநோதம்

அரசாங்கசபை அபேட்சகர்:— (ஒரு பெண் ஓட்டரைப் பார்த்து) அம்மா! தங்களுக்கு ஒரு ஓட் உண்டு. நான் ஓர் அரசாங்கசபை அபேட்சகர். தங்கள் ஓட்டை எனக்கே போடவேணும்.

பெண்ஓட்டர்:— இன்னும் என் சட்டிபானைகள் ஒன்றும் உடையவில்லை. பழைய ஓடுகள் எறிந்து, புதியவை இப்போதுதான் வாங்கினேன். உடைந்தால் உங்களுக்கே வைத்திருந்து போடுகிறேன். ஐயோ! பாவம்! ஓட்டுக்காக இவ்வளவு கெஞ்சவேணுமா? பெரிய மனுஷாள்! குப்பைக்காரனுக்குப் போடுவதை உங்களுக்கே போடுகிறேன்.

*        *        *

அரசாங்கசபைத் தேர்தல் வந்துவிட்டது. மிஸ்டர் எஸ். எஸ். பிள்ளைக்கு "அ" கூடத் தெரியாது. வ ஏதோ ஓர் அபேட்சகருக்காக வேலை செய்யும்பொழுது ஓர் கூட்டத்தில் பேச நேர்ந்தது.

எஸ். எஸ். பிள்ளை:—க. க. க. க. கனப்— த. த. த. த. தங்கிய, த. த. த. தலைவரே!—ச. ச. ச. சகோதரர்களே! (மிகுதி ஆண்டவனுக்கே அர்ப்பணம்)

*        *        *

ஜெயில் அதிகாரி:— என்னப்பா நெ: 17. நீ இன்னும் 3 நாட்களில் விடுதலைசெய்யப்படுவாய்! சந்தோஷமாய் வீட்டுக்குப் போகலாம்.

17-ம் நெ. கைதி:— ஸ்வாமி! நான் என்ன தப்புச்செய்தேன், என்னை ஏன் போகச் சொல்லுகிறீர்கள்:

## வாலிபனின் காதல்வெறி

### 7 வயதுச் சிறுமி பலவந்தஞ் செய்யப்பட்டாள்

சென்ற டிசம்பர் மாதம் 26-ந் திகதி கந்தரோடையைச்சேர்ந்த திருநாவுக்கரசு என்பவரின் மகளாகிய 7 வயதுடைய சிவபாக்கியம் என்னும் சிறுமியை, அவ்வூரைச்சேர்ந்த வேலுப்பிள்ளை—சின்னத்துரை என்னும் 22 வயதுடைய வாலிபன் பலவந்தப் புணர்ச்சி செய்தானெனச் சுன்னாகம் பொலிஸ்விதானைக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அங்குசென்று குறித்த வாலிபனைப் பொலிஸ்ரேசனுக்குக்கொண்டுசென்றார். சிறுமி வைத்தியசோதனையினிமித்தம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டாள்.

புருஷன்:— என்னடீ! உருளைக்கிழங்கு பாதி வெந்தும் பாதி வேகாமலும் இருக்கிறதே?

மனைவி:— ஓஹோ! அதற்கு இவ்வளவு கூச்சலும் ஆர்ப்பாட்டமும் ஏன். வெந்தபாதியைச்சாப்பிட்டு, வேகாதபாதியை விட்டுவிடுகிறதுதானே.

*        *        *

ஒருவர்:— நான்மாமிசத்தை கையால் தொடுவதில்லையென்று விட்டுவிட்டேன். காய்கறிகளின் விசேஷமே, விசேஷம்!

மற்றவர்:— ஏன்! உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லையா?

ஒருவர்:— இறைச்சிக் கடைக்காரன் இனிமேல் கடன்கொடுக்கமுடியாது என்றுவிட்டான்.

க. சே. சோமசுந்தரஐயர்.
புன்னாலைக்கட்டுவன்.

## மந்திரம்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

போனபோக்கில் உச்சரிப்பவர்கள் பலவிதத்துன்பமடைகிறார்கள். அதனால் ஆம்பயனும் நிறைபவமைந்தில.

முற்காலத்தில் மந்திர ஆற்றலினால் உலகத்தில் நடந்த அரும்பெருஞ் செயல் பலவுளதென்று பழந்தமிழ் நூல்கள் வாயிலாக அறிகின்றோம். களவு செய்தாரை அறிதல், மனதில் மற்றவன் நினைப்பதைத் தெரிதல், பாணங்களை உபயோகித்தல், பேய், பிசாசு, பெல்லி, சூனியங்களை நீக்கல், அவைகளை ஆக்கல், விஷம் போக்கல், விஷமாக்கல், உற்சாகமுடையாரைத் தூக்கல், அஃதற்றாரை ஒக்கல், தெய்வங்களை வசமாக்கல், வேண்டியவை வேண்டியாங் கெய்தல் ஆதிய பலவுமாம். இம்மந்திரங்களில் நன்மை, தீமை இரண்டுமுண்டு. நன்மைகளையே கடைப்பிடிக்க வேண்டும்.

மந்திரங்களின் பெருமை தற்காலத்தில் குறைவடைந்துவிட்டதெனக் கூறுகின்றார்கள். அது முழுவதும் தவறு. மந்திரத்தை முறைப்படி உபதேசமூலம் பெற்றுக் குறைவின்றி யோதின் நிறைவுடையதேயாம். மந்திரங்களுக்குரிய அத்தேவதைகளையும் மந்திரஞ் சொன்னார்களையும் பொன்போல் போற்றின் என்செய முடியாது. தற்காலத்தில் மந்திரம் உச்சரிப்போரின் செயல்களாலேயே மந்திர வலி குறைவடைகிறது. மந்திரம் உச்சரிப்போர் நிலை வஞ்சனைக்குங் கொலை களவிற்கும் புலைத்தொழிலிற்கும் மலமுகட்டிறகும் இடைவிடாது சிந்தையுடையவராயின் மந்திரம் எப்படித்தான் துலங்குவது.

மந்திரங்களை அன்போடும் முறையோடும தெரிந்து அதன சிறந்த பயனை அனுபவித்தலே சாலச் சிறப்பாகும். அற்ப ஊதியங்கருதி வயிற்றுச சீவியத்திற்காகத் தொழிலாகக கொள்வது தவறாகும். வடமொழி தென்மொழி ஏனைத திசைமொழிகளிலுமுள்ள மந்திரங்களைகற்றுஎல்லாரும நன்மையடைய எல்லாமவல்ல இறைவனை மனமொழி மெய்களால சிந்தித்து வந்திக்கின்றேன.

## 21 கட்டு பீடிகள் கைப்பற்றப்பட்டன

கொக்குவில வாசியொருவர் இந்தியாவிலிருந்து சோரமாக, பீடிபபு கையில் இறககுமதி செய்திருக்கிறார் என அறிந்த யாழ்ப்பாணப் [illegible] பகுதியார் கொக்குவிலுக்குச்சென்று சந்தேகிக்கப்பட்ட சிலவீடுகளைப் பரிசோதனைசெய்து மூன்று வீடுகளில 1000 ரூத்தல் நிறையுள்ள 21 கட்டு பீடிகளைக கைப்பற்றினர். இந்தப பீடிகள் வெவ்வேறிடங்களில வைககப்பட்டிருப்பினும் அவைஒருவருக்கே சொந்தமானவையாம்.

## மாத்தளை பாக்கிய வித்தியாலயம்

### பெற்றார் விழா

நிகழும் யுவ ஆண்டு மார்கழித திங்கள் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை (20-12-35) பிற்பகல் 6 மணிககு கலாசாலையில பெற்றார்விழா ஆரம்பமாயது. அவ்வமயம சிங்கள, தமிழ, மகமதிய பெற்றாரும் உற்றாரும மற்றாருமாகிய அநேகாகுழுமினர். அப்பாடசாலை மாணவிகளால இராமாயணத்தின் ஓர் பாகம சிங்களபாஷையிலும், அரிச்சந்திரபுராணத்தின் ஓர்பாகம் ஆங்கிள பாஷையிலும்; மாமனகவந்து வழக்குரைதத திருவிளையாடல தமிழ்ப் பாஷையிலும் நடித்துக் காட்டப்பட்டன. இடையில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

துறத்தலை விரும்புவாரா! அதனைப் பேடித்தனமாக வன்றோ கருதுவர்! எம்பெருமானே! இத்துயர் களைய எனக்கு வன்மையிருக்கின்றதே! ஏன் இவ்வளவு நேரமும் சும்மாவிருந்தேன். ஏ! திருவருளே! என்னை இருதலைக்கொள்ளி எறும்பெனத் தவிக்க வைத்தல் உனக்கு அழகு [illegible] என் காதலனைக் கொல்ல யான் ஆற்றும்பணி என் தந்தையைக் கொல்லும் பணியாகவன்றோ விருக்கின்றது! ஏவப்பட்டோரின் உடலைத் துவைத்து உயிரைக்குடியாது மீண்டுசெல்லும் பேயானது ஏவினோரைக் கொல்லுந்தன்மையுடையது. ஏழைபங்காளனே! எதனைச்செய்வேன்! எதனை விடுவேன்! என்தந்தையைக் கொன்று காதலனைக் காப்பதா? என் காதலனை இறக்கவிட்டு யானும் இறப்பதா! பிழை! பிழை! குற்றவாளி யாரெனப் பார்ப்போம்! யானும் என் நண்பனும் ஒருவரையொருவர் காதலிக்க உரிமையுடையவர்களதானே! இதனைத் தடைசெய்ய என் தந்தைக்கென்ன உரிமையிருக்கின்றது! எந்தையும் என் நலத்தையே நாடுகின்றனரா? அங்ஙனமாயின் யான் விரும்பாத ஒருவனை என்னோடு பிணைப்பதால் எனக்குள்ள நன்மை என்ன! என் தந்தையே குற்றவாளி; அவரே தண்டிக்கப்படவேண்டியவர். இன்னே என்நாயகன் இல்லஞ்சென்று அவரைக்கொல்லவரும் பேயைத் திருமபி ஓடச் செய்கின்றேன்! ஆ! என்னை ஈன்றதாயின் தாலியைககழற்றும்பணி என்னதாய் விட்டதே! அன்னாய்! அன்னாய்! என்னைப்பெற்று உய்ந்தாய்! உய்ந்தாய்! எது எங்ஙனமாயினும் என் காதலன் உயிரை மீட்கவேண்டியதே என்முதல் வேலை." என வாய்விட்டுக் கூறியதும் நடுக்கத்தொடு மெய்யெலாம் வெயர்க்க நாராயணன் இல்லத்துக்கு அவன் கூறிய அடையாளப்படி நடந்தாள் மருக்கொழுந்து. (தொடரும்.)

## மருந்துச் சரக்குகளின்

### விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு விபாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு; சுத்தமான [illegible] அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரிலவந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தணம், சந்தணக்கட்டை, சந்தண வில்லை, சாம்பிறாணிப் பதங்சம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விருப்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும. தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 5th January 1936, Sunday. { No. 26

அகில் இலங்கை

## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**
**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- | ரூபா 40/- | ரூபா வீதம் | 25 மாதத்திற்கு | | |
| B | 8-ம் | ,, 500/- | ,, 20/- | ,, | ,, 25 | ,, | |
| C | 14-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, 25 | ,, | |
| D | 7-ம் | ,, 125/- | ,, 5/- | ,, | ,, 25 | ,, | |
| BMC | 2-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, 12½ | ,, | |
| WC | 3-ம் | ,, 250/- | ,, 5/- | ,, | ,, 50 கிழமைகட்கு | | |
| WD | 4 | ,, 125/- | ,, 5/- | ,, | ,, 25 | ,, | |
| தினசரி | 6&7ம் | ,, 100/- | ,, 1/- | ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எ ங் கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலிஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

### வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலிஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனை முதலியனவும், கொப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

## லங்கா பினன்ஸ் கம்பெனி

**The**
**Lanka Finance Company**
**Stanley Street, Grand Bazaar**
**JAFFNA**

காரியாலயம் :
ஸ்ரான்லி ஸ்ரீட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000- | ரூ. 40- | வீதம் | 25 மாதத்திற்கு | |
| B | ,, | ,, 500- | ,, 20- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250- | ,, 10- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75- | ,, 3- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100- | ,, 10- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250- | ,, 10- | ,, | 12½ | ,, |
| WC | ,, | ,, 250- | ,, 5- | ,, | 50 கிழமைகட்கு | |
| WD | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| தினசரி B1&2 | ,, | ,, 100- | ,, 1- | ,, | | |


கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினன்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்ரீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35.

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிக்கப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



எப்பொழுதும் நன்கு மதிப்புடன் அழகு மிளிரும் உன்னத மாளிகைகளில் வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு; பருத்தித்துறை ....; வல்வெட்டித்துறை; காங்கேயன்துறை | சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் |
| காரைநகர் .... | .... சி. க. ஆறுமுகம்பிள்ளை |
| ஊர்காவற்றுறை | .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ் |

(103) 23-9-34.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் ஹு ஜனவரி மீ 5-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.